
# சாயி மார்க்கம்

ஆகஸ்ட் - டிசம்பர் 2015




அவதார தினச் சிறப்பு மலர்

இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்
தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









வடமுனை மற்றும் ஊத்துச் சேனை கிராமங்களில் ஒன்றிணைக்கப்பட்ட
கிராமிய நிகழ்ச்சித்திட்டம் - கிழக்குப்பிராந்தியம்



பெற்றோரியல் நிகழ்ச்சித்திட்டம்
வந்தாறுமூலை சாயி நிலையம் - கிழக்குப் பிராந்தியம்



பாலவிகாஸ் சிறுவர் நிகழ்ச்சித்திட்டம்
கிழக்குப் பிராந்தியம்





இரத்ததானம் - வடபிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE GOLDEN ERA OF PURE LOVE

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 22
இதழ்: 55

ஆகஸ்ட் - டிசம்பர் 2015

## அவதார தினச் சிறப்பு மலர்

**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 60.00
வருடச் சந்தா ரூபா 240.00 (4 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

## உள்ளே......

| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| பிரசாந்தி நிலைய கல்வி மாநாட்டிலிருந்து | 03 |
| பிரசாந்தி நிலைய கல்வி மாநாட்டில் கேட்டவை | 09 |
| சத்திய சாயி ஆன்மீகக் கல்வி | 12 |
| தெய்வீகப் பயணம் | 15 |
| சமயம் முக்கியமா? | 17 |
| ஆன்மீக சாதனா முகாம் | 18 |
| பிரபஞ்ச அன்பு | 26 |
| காரைதீவில் அற்புதங்கள் | 29 |
| சாயி அற்புதங்கள் | 31 |
| திரு.ரி.ஜி.கிருஸ்ணமூர்த்தி அவர்களின் யாழ்ப்பாண விஜயம் | 33 |
| ஆன்மீக தந்தை ஆன்மீக மகனுக்கு | 40 |
| ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தெய்வீகக் காட்சி உருவும் தூதுப் பணியும் | 42 |
| ஸ்ரீ சத்திய சாயி கிராம நிகழ்ச்சித் திட்டம் | 50 |
| திருவருள்புரிக சாயி அன்னை | 53 |
| நிறுவனச் செய்திகள் | 54 |

**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# வெறுப்பைக் கையாளுதல் எப்படி?

விருப்பும் வெறுப்பும் பொருள்களிலோ நிகழ்வுகளிலோ இருப்பதல்ல. இவற்றை எவ்வாறு மனம் கிரகிக்கிறதென்பதில்தான் தங்கியுள்ளது. அடி அறிமனதில் முற்பிறப்புகளின் அனுபவங்கள் கருவில் ஏற்பட்ட அனுபவங்கள், இப்பிறப்பில் ஏற்பட்ட அனுபவங்கள் பதிவாகின்றன. இந்த அனுபவங்களின் பதிவிலிருந்து இவை வெறுப்பு, விருப்பு, பாரபட்சம் ஆக வெளிப்படுகின்றன. பொருளிலல்ல கிரகித்தலால்தான் விருப்பு, வெறுப்பு உணர்வுகள் எழுகின்றன. இவை காலத்தாலும் மாறுபடுகின்றன. உதாரணமாக நல்ல அழகான பூ, பின்னர் சருகாக மாறி விடுகிறது. நல்ல ருசியான உணவு காலத்தால் நாற்றமடைகின்றது. நல்லதென்று எப்போதும் நினைத்தால் எல்லாம் நல்லதாகவே தென்படும், கெட்டதென்று எப்போதும் நினைத்தால் கெட்டவையாகவே கிரகிக்கப்படும். உதாரணமாக: தர்மராஜாவினால் ஒரு கெட்டவனைக் காணமுடியவில்லை. இதே போல துரியோதனனால் ஒரு நல்லவனைக் காணமுடியவில்லை. உலகம் மனதின் பிரதிபலிப்பேயாகும் என சுவாமி அடிக்கடி கூறியுள்ளார்.

வாழ்க்கையில் வெறுப்பை, அருவருப்பை உண்டாக்கும் நிகழ்வுகளை நாம் சந்திப்போம் அவற்றை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும்? மனதோ புத்திக் கூர்மையைப் பாவித்து தனது செயலுக்கும், முடிவுக்கும் உசிதமான தர்க்கத்தைக் கொடுக்கும். கொலையாளிகூட தான் செய்த கொலை நியாயமானதென்றே தீர்மானிக்கின்றான். மற்றவைகளில் பிழை, குறை, அதர்மம் காணும் பொழுது எவ்வாறு எதிர்கொள்ள வேண்டுமென்று ஒரு ஆன்மீகவாதி இவ்வாறு கூறியுள்ளார். (புட்டபர்த்தியில் நடந்த சத்சங்கம்)

ஆன்மீக ரீதியில் எல்லோரும் ஒன்றே, பரமாத்மாவே எங்குமுள்ளதென்ற உண்மையில் நினைத்துச் செயற்பட வேண்டும். எவ்வாறு?

- மற்றவருடைய குறையை நாம் மனதால் எம்முள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பின்பு ஆத்மாபிமானத்தில் செயற்பட வேண்டும். இந்த பிழைகளுக்காக (மற்றவரின்) நாம் ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இச் செயற்பாட்டினால் மற்றவரை மன்னிப்பது இலேசாகிறது.
- பின்பு நாம் (குறையுள்ளவரை) மனதார நேசிக்கிறோம் என்று ஆண்டவனிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- இரவு நித்திரைக்குப் போகுமுன் இப்படி 15 நிமிடம் 15 நாள் பிரார்த்தித்தால் மற்றவரில் உன்னத மாற்றம் ஏற்படுவதை நாம் அனுபவிக்கலாம். இதற்கு ஆதாரமாக இரு நிகழ்வுகளைச் சொன்னார்.

முதலாவது தனது திருமணத்தை சுவாமியே நிர்ணயித்து தனது அண்ணனிடம் பொறுப்புக் கொடுத்தார். அண்ணனும் எல்லாம் சீராக செய்தார். பின்பு ஏதோ வகையில் ஒரு மனக்கசப்பு ஏற்பட்டு இரண்டு வருடமாகக் கதைக்கவில்லை. மேற்கூறிய செய்முறையைக் கையாண்டதும் 15 ஆவது நாள் அண்ணன் தானாகவே வந்து அன்புடன் கதைத்தார். அன்று தொடங்கி நாம் அன்புடன் பழகுகின்றோம்.

இரண்டாவது, நான் மண்டபத்தில் சேவாதாளாக (1970ம்ஆண்டில்) கடமையாற்றினேன். அக்காலத்தில் சுவாமி மாலைவேளைகளில் இருதடவைகள் தரிசனம் கொடுப்பார். முதலாவது தரிசனம் முடிந்து அறைக்குள் நேர்காணல் நடாத்த சென்றதும், முன் இருந்தவர்கள் மண்டபத்தை விட்டு போய் விடுவார்கள். அப்போது பின்னுக்கு இருந்தவர்கள் முன்னே வந்து இருப்பார்கள். ஒரு முறை பருத்த தேகமுள்ள ஜேர்மன் நாட்டவர் முன்னுக்கு தள்ளிக் கொண்டு போவதைத் தடுத்தேன். அவர் என்னைத் தள்ளிவிட்டு முன்னேறினார். நான் ஆத்திரமடைந்து, அவரை மேற்பார்வையாளரிடம் முறையிட்டு வெளியேற்ற வேண்டுமென்று சிந்தித்தேன். அப்போது சுவாமி வெளியில் வந்து என்னை நோக்கிப் பார்த்த பார்வை எச்சரிக்கையாகத் தென்பட்டது. எனது பிழையை உணர்ந்து, உடனே அம்மனிதரிடம் ஓடிப்போய் மன்னிப்புக் கேட்டுவிட்டு அவரிடம் அன்பு கொண்டேன். பின்பு சுவாமி என்னை நோக்கிப் பார்த்து புன் முறுவலுடன் கையால் ஆசீர்வதித்தார். மற்றவரின் பிழையை மனதார மன்னித்தால் மனதில் சாந்தி நிலவும்.

இன்னுமொரு சம்பவம். சுவாமியின் பக்தனும் மனநோய் வைத்திய நிபுணரான சாமுவேள் சான்ட்வைஸ் கூறியது: "ஒருநாள் ஒரு மனநோயால் தாக்கப்பட்டு பல நாட்கள் கவனிக்கப்படாத உடம்பு உடுப்புடன் நாற்றத்துடன் நடுநிசியில் அனுமதிக்கப்பட்ட நோயாளியைப் பார்க்கும்படி அழைக்கப்பட்டேன். கிட்ட போகவே முடியாத தோற்றமும், நாற்றத்துடன் இருந்தமையால் எனக்கு அருவருப்பு உண்டாகியது. அடுத்த கணமே இந்நோயாளியும் சுவாமியின் உருவமே என்ற எண்ணம் வந்ததும் அருவெருப்பு நீங்கி, நோயாளியை மிகவும் அன்புடன் பரிசோதித்துப் பராமரித்தேன்" என்று முடித்தார். சுவாமிதான் எல்லோரிலும், எல்லாவற்றிலும் என்ற ஆத்மீகச் சிந்தனையுடன் செயற்பட்டால், வெறுப்பு என்ற சவாலை லேசாக எதிர்கொள்ளலாம்.

"எல்லாம் நானே
எல்லாம் நீயே"

ஜெய்சாயிராம்

ஆசிரியர்

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# பிரசாந்தி நிலையத்தில் இடம்பெற்ற கல்வி மாநாட்டிலிருந்து....

2015 ஆகஸ்ட் 1,2,3 திகதிகளில் நடைபெற்ற கல்வி மாநாட்டில் திருமதி கீதாராம் மோகன் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும்



கேள்வி:
யார் நல்ல குருவென்று அழைக்கப்படலாம்?
நல்ல குருவிற்குரிய இயல்புகள் பற்றி கூறுங்கள்?

பதில்:
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவே நல்ல குரு. என்னைப் பொறுத்த வரை ஸ்வாமியே நல்ல குருவாக அமைய பேறு பெற்றேன். ஸ்வாமி எங்களுடன் இனிமையாகப் பேசுவார், விளையாடுவார் அவர் எங்கள் மேல் அன்பு செலுத்துவார். இதனால் நாங்கள் அவர் மேல் அன்பு செலுத்த ஆரம்பித்தோம்.

நாம் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்தில் புட்டபர்த்தி மந்திரில் பாடுகின்ற பெரியவர்கள் முன்னாலிருக்க நாம் பின்னாலிருப்போம். ஒரு நாள் ஸ்வாமி எங்களிடம் "நீங்கள் ஏன் பாடுவதில்லை?" என்று கேட்டார். அப்போ நாங்கள் இந்தக் காலத்தில் கூறுவது போன்று பெரியவர்கள் இடம் தருவதில்லை என்று முறைப்பாடு தெரிவிக்காது அமைதியாக இருந்தோம். சிறிது நேரத்தின் பின் ஸ்வாமி " நான் பாடல் சொல்லித் தருகிறேன் நீங்கள் பாடுங்கள்" என்றார். ஸ்வாமி சொல்லித் தந்த பாடல் இதுதான்.

மன பங்காரு பர்த்தி பாபா
மன சிருங்காரா வதனா ஸாயி
அந்தர் யாமி ஸாயி
சர்வாந்தர்யாமி ஸாயி

இவ்வாறாக என்னைப் பாட வைத்த ஸ்வாமி பதினாலரை வயதில் பாலவிகாஸ் பிரிவு 1, பிரிவு 11 இற்கு குருவாக இருக்கும்படி கூறினார். நான் குருவாக இருப்பதற்கு எனக்கு இருக்க வேண்டிய குணாதிசியம் என்ன? என்று நான் கேட்டேன். நான் உங்களுக்கு முதலில் சொல்லித் தந்த பாடலில் உள்ள பாபாவின் கருத்தே குருவிற்குரிய குணாதிசியம் . மேலும் ஆங்கிலத்தில் அவர் கூறினார்.

BA - Be Aware அறிந்திரு/ தெரிந்திரு

BA - Be Alert விழிப்புடனிரு

இவ்வாறு கூறிவிட்டு அவர் சென்று விட்டார். ஸ்வாமி கூறியதை நான் புரிந்து கொள்ள சிலகாலம் சென்றது. அதை நான் இப்போது கூறுகிறேன்.

1) தனி மனித அளவில் (personal)

BE Aware - உங்களைச் சுற்றியுள்ள சூழல் பற்றி தெரிந்திருத்தல்

Be Alert - சூழலிலுள்ளவை உங்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைப் பற்றி விழிப்புடனிருத்தல்

உதாரணம்: உனது நண்பர்கள், வீதியை கடக்கும் போது...

2) சமூக அளவில்:

Be Aware: சமூகத்தில் யார், யாருக்கு உதவி/ சேவை தேவை என்பது பற்றி அறிந்திருத்தல். ஒரு குருவானவர் தனது வகுப்பில் ஒவ்வொரு மாணவர்களையும் பற்றி அறிந்திருத்தல்

Be Alert: சமூகத்தில் உள்ளவர்களின் உடனடித் தேவைகள், சேவைகள் பற்றி விழிப்புணர்வுடனிருத்தல், செயற்பட முற்படல், குருவானவர் தனது வகுப்பில் உள்ள மாணவர்களின் நடத்தைகள் பற்றி விழிப்புடனிருத்தல். இங்கு ஸ்வாமியுடனான அனுபவம் ஒன்றை கூறுகின்றேன்.

பெங்களுரில் ஒரு நிகழ்வின் போது மேடையில் 3 ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. ஸ்வாமியினுடைய கதிரைக்கு கீழே சுவாமி பாதம் வைப்பதற்கு ஒரு பீடம் வைக்கப்பட்டிருந்தது. ஸ்வாமி வருவதற்கு முன்னதாக பேராசிரியர் கோகக்கும் கர்நாடக கவர்ணரும் மற்றைய இரு ஆசனங்களில் வந்து அமர்ந்தனர். அந்தோ! மிகக் குள்ளமான தோற்றமுடைய கவர்ணரிற்கு ஆசனம் மிக உயரமாக இருந்தது. அதனால் அவர் ஆசனத்தில் சரியாக அமரமுடியாமல் விளிம்பில் இருந்தார். இதைக் கண்டு கூட்டத்தினர் தமக்குள் சிரித்துக் கொண்டனர். சற்று நேரத்தில் சுவாமி உள்ளே வந்து தரிசனம் தந்தார். நேராக மேடைக்கு வந்து மிகவும் இயல்பாக தனது ஆசனத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம் வைப்பதற்கான பீடத்தை கவர்ணரின் ஆசனத்தின் கீழ் தள்ளி விட்டார். இப்போ கவர்ணர் மிகவும் வசதி யாக உட்கார்ந்தார். இதைக் கண்ட சேவா தளத்தினர் பறந்தோடிச் சென்று மற்றைய இரு ஆசனங்களுக்கு கீழ் வைப்பதற்கான பீடங்களை கொண்டு வந்து வைத்தனர். இங்கே சேவாதளத்தினர் சரியாக மேடை ஒழுங்கு பற்றி தேவை பற்றி அறிந்திருக் கவில்லை. கவர்ணர் வந்தமர்ந்த பிறகும் கூட விழிப்புடனிருக்கவில்லை. ஆனால் ஸ்வாமி Be Aware, Be alert இற்கு உதாரணமாக நடந்து காட்டினார்.

3) ஆன்மீக அளவில்:

Be Aware: ஒவ்வொருவரும் தங்கள் எண்ணங்கள், சொற்கள், செயல்கள் பற்றி தெரிந்திருத்தல்.

Be Alert: அதில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி விழிப்புடனிருத்தல்

எல்லாவற்றிலும் ஸ்வாமியைக் காண் போமாக. ஒரு குருவிற்குரிய உன்னத நோக்கு தன்னையுணர்தலே.

**கேள்வி:**

குருவிற்கு இருக்க வேண்டிய இயல்புகள் எவை என்று கூற முடியுமா?

**பதில்:**

ஸ்வாமி மேல் ஒரு குருவானவர் வைத் திருக்கும் உண்மை அன்பின் நிமித்தம் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். என்னு டைய கற்பித்தலினால் ஸ்வாமி மிகவும் சந்தோசப்படுவார் என்று நினைத்துச் செய்ய வேண்டும்.

- ஒரு மிகச் சிறந்த குரு என்று சொல்லக் கூடியது, ஸ்வாமியை மட்டுமே குருமா ராகிய நாங்கள் அந்த நிலைக்கு ஏறும் ஏணிப்படிகளில் வெவ்வேறு படிநிலை களிலே நிற்கின்றோம்.
- ஸ்வாமி எங்கள் மேல் முழுநம்பிக்கை வைத்து குருவாக இருக்கும் இந்த பொறுப்பைத் தந்திருக்கிறார்.
- உங்களுடைய ஒவ்வொரு வகுப்புக்கும் முன்னர் பாடத்தயாரிப்பு செய்தல் வேண்டும். "ஸ்வாமி என்னை வழி நடாத்துவார்" என்று தயாரிப்பு இல்லாமல் போவது சோம்பேறித்தனம்.

ஸ்வாமியினுடைய புத்தகங்கள் (ஸாயி அருளமுதங்கள், வாஹினிகள்) நன்றாக வாசித்திருக்க வேண்டும். ஸாயி நிலையத்தில் உள்ள பெரியவர்களிடம் இருந்து கற்கத் தயங்கக் கூடாது.

குருவாக இருப்பதற்கு மிகத் தேவையான 3 விடயங்கள்

1) ஸ்வாமியின் மேல் மாறாத அன்பு (love for swami)

2) அறிவு ( knowledge)

3) கற்பிக்கும் திறன் (Teaching skill)

**கேள்வி:**

நாங்கள் ஸ்வாமி மேல் உண்மை அன்பு வைத்திருக்கிறோம் என்று நாங்கள் எப்படி அறியலாம்?

**பதில்:**

ஒவ்வொருவர் ஸ்வாமி மேல் வைத்திருக்கும் உண்மை அன்பை ஸ்வாமி மட்டுமே முழுமையாக அறிவாரெனினும் இங்கு 2 சந்தர்ப்பங்களை நாங்கள் சிந்திக்கலாம்.

1) எந்தக் காரியத்தையும் நாம் செய்யும் போதும் "இதைச் ஸ்வாமி விரும்புவாரா?" என்ற கேள்வி எங்கள் மனதில் இயல்பாக எழுமாயின்.
2) நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் ஸ்வாமியின் பணிக்கு நேரம் ஒதுக்க முடியுமாயின் அல்லது விடுமுறை நாட்களில் பல்வேறு பொழுது போக்குகள் இருக்க ஸ்வாமியின் பணியில் ஈடுபடமுடியுமாயின் சுவாமி மேல் அன்பிருப்பதைக் காட்டுகின்றது.

**கேள்வி:**

1) குருமார்களில் சிலர் உற்சாகத்துடன் நல்ல நோக்கத்தோடு செயற்படுபவர்களாக இருக்கிறார்கள்.
2) சிலர் உற்சாகமின்றி சரியாகச் செயற்பட முடியாதவர்களாக இருக்கின்றார்கள்
3) வேறு சிலர் செயற்பட முடியாதவர்களைக் கண்டும் காணாத மாதிரி அமைதியாக இருக்கின்றார்கள். இவர்களைப் பற்றி ஏதாவது கூறமுடியுமா?

**பதில்:**

முதலாம் வகையினரைப் பற்றி நான் எதுவும் கூறத்தேவை யில்லை. இரண்டாம் , மூன்றாம் வகையினரைப் பற்றி என்னுடைய ஸ்வாமியினுடனான அனுபவத்தைக் கூறுகின்றேன்.

என்னை பதினான்கரை வயதில் குருவாக இருக்கும்படி ஸ்வாமி கட்டளையிட்டார். அந்நேரம் சிறுபிள்ளை விளையாட்டுத் தன்மை யுடன் இருந்த நேரம், குருமாருக்குரிய பயிற்சிகளில் இருக்க விருப்பமிருப்பதில்லை.

எனக்கு 18 வயதாகின்ற போது திருமதி கல்யாணி சுந்தரம் என்பவர் பாலவிகாஸ் இணைப்பாளராக இருந்தார். அவ்வேளயில் பாபா பக்தராக இருந்த நாகம்மா கேசவமூர்த்தி என்பவர் கர்நாடக மாநிலத்தின் கல்வி அமைச்சராக இருந்தார். கர்நாடக மாநிலத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பாலவிகாஸ் கல்வி முறை பற்றி பயிற்றுவிக்க ஸ்வாமி சங்கல்ப்பம் கொண்டார். இந்த ஆசிரியர்கள் சாயி பக்தர்களல்லாதவர்கள், சொற்ப சம்பளத்தில் வேலை செய்பவர்கள், தங்களுடைய கற்பித்தலையே ஊக்கமாகச் செய்ய முடியாதவர்கள்.

ஸ்வாமி இவர்களுக்கு பயிற்சி அளிக்க தெரிந்தெடுத்த குருமாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியலைத் தயாரிக்குமாறு இணைப்பாளர் கல்யாணி அம்மாவிடம் கூறினார்.

தயாரிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் பட்டியலில் என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. கல்யாணி அம்மாவிடம் ஸ்வாமி கேட்டார். ஏன் சேர்க்கப்படவில்லை என்று. கல்யாணி அம்மா "கீதா சிறு பராயத்தவர் (teenage), வயதில் கூடிய ஆசிரியர்களுக்கு அந்தப் பிள்ளையால் கற்பிக்க முடியாது" என்று கூறினார். அப்படியல்ல இளவயதினர் உள்வாங்கப்பட வேண்டும். அவர்கள் உற்சாகத்துடன் செயற்பட ஊக்கமளிக்க வேண்டும். இதனால் இளவயதினரைப் பார்த்து பெரியவர்கள் மேலும் உற்சாகத்துடன் செயற்படுவார்கள். சில நாட்களில் சுவாமி தரிசனத்தின் போது என்னிடம் வந்து "கல்யாணி அம்மா, பயிற்றுவிப்பாளர்கள் பட்டியலில் உன்னைச் சேர்த்துக் கொள்வது பற்றி உன்னுடன் தொடர்பு கொண்டாரா? என்று கேட்டார். உண்மையாக அந்த ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு கற்பிக்க இந்த வயதான பயிற்றுவிப்பாளர்களுடன் செல்ல எனக்கு சிறிதும் விருப்பமிருக்கவில்லை ஆகவே சுவாமியிடம் அதை நான் நேரடியாக மறுக்காமல் "ஆம் சுவாமி ஆனால்.... நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கின்றேன்" என்று இழுத்தடித்து பதிலளித்தேன்.

அதற்கு ஸ்வாமி " ஓ அப்படியா ? ஆம் கல்லூரி என்றால் வகுப்புக்களுக்கு ஒழுங்காகப் போக வேண்டும். நிறையப் படிக்க வேண்டும். நண்பிகளுடன் நேரம் செலவிட வேண்டுமென்று சற்றுச் சிந்திப்பது போல் நடித்தார். எனக்கு உள்ளூர மகிழ்ச்சி ஸ்வாமி என்னுடைய கருத்தை புரிந்து கொண்டு விட்டார் என்று. மீண்டும் என்னிடம் திரும்பி "அப்படியென்றால் நீர் வார இறுதி நாட்களிலும், விடுமுறை காலத்திலும் செயற்படலாம். இதை கல்யாணி அம்மாவிடம் கூறிவிடுகிறேன். கீதாவை கல்லூரி நாட்களில் அழைக்க வேண்டாம் என்று கூறிப் புன்னகைத்தார்.

எனக்கு முதலில் தூக்கி வாரிப்போட்டது போன்று இருந்தது. என்னுடைய விடுமுறை நாட்கள் எல்லாம் என்னிடம் இருந்து பறிபோனது மாதிரி இருந்தது. ஆனால் ஸ்வாமி எனது சற்குருவின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் செயற்பட ஆரம்பித்தேன். அதன் பின் என் வாழ்வில் விடுமுறை என்பது இல்லாமல் போய் விட்டது.

கல்யாணி அன்றி, எனது இணைப்பாளர், ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் என்னை உற்சாகப்படுத்துவார். ஊக்கப்படுத்துவார் எனக்கு ஒரு இளவயது நண்பி போன்று செயற்பட்டு எனது ஆடைகள், எனது தலைமயிர், எனது அலங்காரம் என்பவற்றி லெல்லாம் அக்கறை எடுத்து, எனக்கு ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்துவார். அதுமட்டுமல்லாமல் அவர் குருமாரிடையே பாராபட்சம் காட்டுவதை நான் கண்டதேயில்லை. தன்னுடைய மிகச் சிரேஸ்ட குருவையும், என்னையும் சமமாகவே மதித்தார், நடந்து கொண்டார். அவரை என் வாழ்நாளில் மறக்க முடியாது. ஸ்வாமியே எங்களெல்லோருக்கும் உன்னத உந்து சக்தி

**கேள்வி:**
ஒரு இணைப்பாளருக்கும் குருமாருக்கும் இடையே தோன்றக்கூடிய முரண்பாடுகள் எவ்வாறு கையாளப்படலாம்? (உதாரணம்: நிகழ்வு ஒழுங்கு, குருமாரின் ஆடைகள் பற்றி)

**பதில்:**
குருவுக்கும், இணைப்பாளருக்குமிடையே ஒரு நிகழ்வு அல்லது செயற்பாடு தொடர்பாக முரண்பாடு தோன்றினால் இருபகுதியினரும் அதையிட்டு ஆறுதலாக இரண்டு நாட்களுக்குச் சிந்திக்க வேண்டும். ஒவ்வொருவரும் தம்முடைய கருத்து தமது சொந்தக்கருத்தா அல்லது ஸ்வாமி நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தா என்று சிந்திக்க வேண்டும். ஸ்வாமி ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து என்று நிச்சயப்படுத்திக் கொண்டால் மற்றவருக்கு தனிப்பட மிகவும் அன்பாக தங்கள் கருத்தை புரிய வைக்க முயற்சிக்கலாம். அப்படி புரிய வைக்க முடியாவிட்டால் நல்லது நிறுவனப் பதவியில் மேலுள்ளவர்களின் கருத்துக்குப் பணிய தயங்கக் கூடாது. இங்கே பொறுமை, சாந்தம் முக்கியம். நடப்ப வற்றை ஸ்வாமி பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட வேண்டும்.

ஆடைகளைப் பற்றி ஸ்வாமியிடம் ஒரு முறை கேட்டோம். "ஸ்வாமி வெவ்வேறு நாடுகளில் அந்தத்தக் கலாச்சாரத்தை யொத்த நவீன ஆடைகளை நாம் அணியலாமா?" என்று அதற்கு ஸ்வாமி தந்த பதில் "என் உபதேசங்கள் மனித உன்னதத்திற்கானதே தவிர கலாச்சாரம் சார்ந்ததல்ல" என்றார். ஸ்வாமியின் பணியில் இருப்பவர் சந்தர்ப்பங்களுக்கு மிகப் பொருத்தமான, மிகவும் கண்ணிய மான ஆடைகளை அணிவதே சிறந்தது. ஸ்வாமியை அது மகிழ்விக்கும். விசேடமாக குரு என்ற ஸ்தானத்தில் நீங்கள் சுவாமியின் போதனையைப் போதிப்பவராக இருக்கும் போது, நீங்கள் போதிப்பவர்களின் கவனம் முழுவதும் போதனையில் இருக்க வேண்டுமே யல்லாது உங்கள் ஆடையில் கவனம் செல்லுமாறு இருக்கக்கூடாது. இது இருபாலாருக்கும் பொருந்தும்.

**கேள்வி:**
பாலவிகாஸ் கற்பித்தலில் பிள்ளையின் முன்னேற்றம் குறித்து எவ்வாறு அளவிடலாம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:**
இது பற்றி ஒரு முறை ஸ்வாமியிடம் நாங்கள் கேட்ட போது, ஸ்வாமி தந்த பதில் "பரீட்சைகள் வையுங்கள்" என்றார். மாணவர்களுக்கு பரீட்சைகள் வைக் கலாம். ஆனால் பரீட்சைகளில் சித்தி யடைவது மட்டுமே மாணவர்களின் ஒரே நோக்காக இருக்க இடமளிக்கக்கூடாது. அவர்கள் கற்றதை அவர்கள் வாழ்வில் கடைப்பிடிப்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். எவ்வாறெனினும் இது தொடர்பாக நான் ஸ்வாமியின் கருத்துக்கு மேல் எதுவும் கூற விரும்ப வில்லை. இது தொடர்பாக அந்த நாட்டு தேசிய இணைப்பாளர்களின் முடிவுக்கு விட்டு விடுகிறேன். ஏனெனில் ஸ்வாமி அவர்களில் நம்பிக்கை வைத்தே அந்த பதவியைக் கொடுத்திருக்கிறார் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

**கேள்வி:**
மாணவர்களுக்கு ஸ்லோகங்கள் கட்டாயமாக படிப்பிக்க வேண்டுமா? சில மாணவர்களுக்கு உச்சரிப்புக்கள் சரியாக வருவதில்லை இதற்கு என்ன செய்யலாம்?

**பதில்:**
ஸ்லோகங்கள் நிச்சயமாகச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பிற மதத்தவர்கள், பிற நம்பிக்கைகள் உள்ள இடங்களில் அந்தந்த மதத்திலிருந்து பொருத்தமான பிரார்த்தனைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் தப்பபிப்பிராயங்கள் பாலவிகாஸ் கல்வித் திட்டத்தின் மேல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

உச்சரிப்பைப் பொறுத்தவரை ஸ்லோகங் கள் படிப்பதில் சற்றுக் கூடிய காலம் எடுத்துக் கொள்ளலாம். எட்டரை மாதங்களில் பாடத்திட்டத்தை முடிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஸ்லோகங்களில் உள்ள கருத்து, பிரார்த் தனை அதைச் சொல்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஆறுதலாக விளங்கப் படுத்திக் கூற வேண்டும். ஸ்லோகங்கள் தொடர்பான கதைகள் கூறி மாணவர் களை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும். உச்சரிப்பு இயன்றவரை சரியாகச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். கணிதபாடம் கடினமென்று சொல்லும் பிள்ளைகளுக்கு கணித பாடம் கற்பிக்காமல் விடுகின்றோமா? இல்லை விசேட கவனமெடுத்து மேலதிக நேரம் செலவிட்டுப் படிப்பிக்கிறோம். அதே போன்றே ஸ்லோகங்கள் கற்பித்தலில் சில மாணவர்களில் விசேட கவனம் செலுத்த வேண்டி வரும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக சரியான உச்சரிப்பு வராவிட்டால் பரவாயில்லை, ஸ்வாமி மேல் மாறாத அன்புடன் கருத்துணர்ந்து ஸ்லோகங்களை ஓதினால் ஸ்வாமி நிச்சயம் அதை ஏற்றுக் கொள்வார்.

**கேள்வி:**
சாயி பக்தரல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவனுக்கு ஸ்வாமியை எப்படி அறிமுகப்படுத்தலாம்?

**பதில்:**
எனது சிறுபிராயத்தின் போது ஸ்வாமி எனக்கு விருப்பத்திற்குரிய ஒரு மனிதர் அல்லது ஆசிரியராக இருந்தார். அந்த வயதில் ஸ்வாமி அவ்வப்போது சிருஸ்டித்துத் தரும் இனிப்பு வகைகள், எனக்கு அவர் மேல் விருப்பம் ஏற்படக் காரணமாயிருந்தது.
இதே போன்று குருவும் மாணவர்களை சந்தோசப்படுத்தி நெருக்கமான அன்புப் பிணைப்பை தனக்கும் மாணவர்களுக்கு மிடையே ஏற்படுத்த வேண்டும்.
நான் பாலவிகாஸ் மாணவியாக இருந்த காலத்தில் ஸ்வாமி மாணவர்களை சித்திராவதி மணல் கரைக்கு அழைத்துச் செல்வார். அங்கு தன்னைச் சுற்றி வட்டமாக அமர்ந்திருக்கச் சொல்லி ஒரு சிறு பெட்டியை மாணவர்களிடையே ஒருவர் மற்றொருவருக்கு கைமாறச் சொல்லுவார். இந்த பெட்டியில் தெலுங்கில் பண்புகள் எழுதப்பட்ட பேப்பர் துண்டுகள் இருக்கும். இடையிடையே கைமாற்றலை நிற்பாட்டி பேப்பர் துண்டை எடுக்கும்படி அதை வைத்திருக்கும் மாணவனுக்குக் கூறுவார். எடுத்த துண்டில் நற்பண்பு எழுதப்பட்டிருப்பின் அந்த மாணவனை அழைத்து தன்னருகில் இருத்திக் கொள்வார். தீய பண்பு வந்தால் அந்த மாணவன் தொடர்ந்து வெளி வட்டத்திலேயே இருக்க நேரிடும். இவ்வாறாக விளையாடி இறுதியில் ஸ்வாமி மாணவர்களிடம் "நீங்கள் நற்பண்புகளைக் கடைப்பிடித்தால் எனக்கு பிரியமானவர்களாக எனது அருகில் இருக்க முடியும். தீய பண்புகளை நாடினால் தொடர்ந்து தொலைவிலேயே இருக்க நேரிடும்" என்று விளக்கிக் கூறுவார்.
இப்படியான சின்ன சின்ன விளையாட்டுக்கள் மூலம் மாணவர்களை குருவுக்கு நெருக்கமாகக் கொண்டு வர முடியும். காலம் செல்லச் செல்ல ஸ்வாமியின் போதனைகளை அவரின் லீலைகளுடன் சேர்ந்து படிப்பிக்க அவரை குருவுக்குச்சமமான வராகவும், பின்னர் கடவுளாகவும் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரும். இங்கே முக்கியமானது குருவானவர் ஸ்வாமி மேல் மாறாத அன்புடனிருப்பது. அதுவே ஸ்வாமியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் உகந்த பக்குவத்தைத் தரும்.

**கேள்வி:**
பாலவிகாஸ் மாணவர்களிலே சிலருடைய எண்ணங்கள், போக்குகள் குருவிற்குச் சங்கடமாக இருக்கலாம். இப்படியான சந்தர்ப்பங்களை எப்படிக் கையாளலாம்? (விசேடமாக 3ஆம் பிரிவு மாணவர்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்:
குரு பெரிய வயது மாணவர்களுடன் நட்புறவுடன் பழக வேண்டும். ஆனால் நண்பனாகி விடக்கூடாது. நட்புறவுடன் பழகுவதன் மூலம் அவர்களுடைய எண்ணங்கள், போக்குகளை அறிந்து கொள்ளலாம். அவர்களும் நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள். இதைப் போன்று பெற்றோர்களுடனும் இணைந்து நெறிப்படுத்த முடியும். சில வேளைகளில் பெற்றோரால் அடையாளம் கண்டு கொள்ள முடியாத இயல்புகளை ஒரு நல்ல குருவால் அடையாளம் காண முடியும். அதற்குரிய தீர்வை செயற்படுத்த பெற்றோரின் உதவி தேவைப்படலாம். இதற்கு குருவானவர் பெற்றோருடன் நல்ல நட்புறவைப் பேணுவது அவசியமாகும்.

பாலவிகாஸ் குருவானவர் எவ்வளவு அர்ப்பணிப்புடன் தனது கற்பித்தலில் ஈடுபட்டாலும் அதன் பெறுபேறுகளை உடனடியாக அறிய முடியாது. உங்கள் மாணவர்கள் நல்ல பிரஜையாக வாழ்கிறார்கள் என்பதைக் காண நீண்டகாலம் காத்திருக்க வேண்டியேற்படும். இந்த இடத்தில் என் வாழ்வில் ஏற்பட்ட இரண்டு அனுபவங்களை கூற முற்படுகின்றேன்.

1) நான் அமெரிக்காவில் கலிபோர்ணியாவில் உரையாற்றச் சென்ற போது அங்கே இணைப்பாளராக இருந்தவர் தன் மனைவி, பிள்ளையுடன் என்னை வந்து வணங்கினார். அப்போ நான் "நீங்கள் யார்?" என்று கேட்ட போது "நான் 1976 ஆம் ஆண்டிலிருந்து உங்களது பாலவிகாஸ் மாணவன்" என்று கூறினார். ஒரு பாலவிகாஸ் மாணவன் இணைப்பாளராக வந்ததைக் கண்ணுற்ற போது மிகுந்த நிறைவாக இருந்தது.
2) நான் இளவயதில் குருவாக இருந்த போது என்னிடம் 70 மாணவர்கள் இருந்தார்கள். அதில் 4 பேர் மட்டுமே ஸாயி பக்தர்களின் பிள்ளைகள், ஏனையோர் ஸ்வாமி அறிமுக மில்லாதவர்கள். இதிலே ஒரு மாணவன் எனது வீட்டிற்கு அண்மையில் இருப்பவர். சீனிவாசன் என்பது அவர் பெயர். அவரின் தாயார் வீடு வீடாகச் சென்று வீட்டு வேலைகளைச் செய்து வருமானம் ஈட்டுபவர். தனது ஐந்தரை வயது மகனை தான் வேலைகளுக்கு செல்லும் பொழுது தனியாக இருப்பதைத் தவிர்ப்பதற்காக பாலவிகாஸ் வகுப்பிற்கு அனுப்புவார். சீனிவாசனும் ஒழுங்காக வகுப்புகளுக்கு வருவான். வகுப்புகளில் ஆர்வத்தினால் அல்ல, வகுப்பின் முடிவில் வழங்கப்பட்டு வந்த பிரசாதமே அவனின் பிரதான நோக்கமாக இருந்தது. வகுப்புகளில் ஆர்வமில்லாமல் பிரசாத பாத்திரத்திலேயே தன் பார்வையை வைத்திருக்கும் அவனை படிப்பிப்பதும் ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் நாளடைவில் அவனுடன் அன்புடன் பேசுவதன் மூலம் மேலதிக பிரசாதத்தை 2 ம் முறை, 3ம் முறை வழங்குவதன் மூலம் ஓரளவு கற்க ஆரம்பித்தான்.

ஒருமுறை ஸ்வாமி எங்கள் வீட்டிற்கு வருவதாக அறிவித்தார். மாணவர்களுக்கு ஸ்வாமியின் வருகையைக் குறிப்பிட்டு உற்சாகப்படுத்தினேன். சீனிவாசனும் மிக ஆர்வமாக இருந்தான். இந்தப் பெருஞ்சடையுடையவரின் படத்திற்கே இவ்வளவு பிரசாதம் படைக்கப்பட்டால், அவர் நேரிடையாக வரும் பொழுது அதிக வகையான உணவுகள் கிடைக்கும் என்று எண்ணினான். அதை நேரிடையாக என்னிடம் கேட்டு நிச்சயப்படுத்தியும் கொண்டான். குறித்த நாளன்று மாலை 5.00 மணியளவில் ஸ்வாமி வருவதாக இருந்தார். இதற்காக மாணவர்களெல்லோரும் எனது வீட்டின் கார் கராஜ்ஜில் இருத்தி வைக்கப்பட்டிருந்தனர். அங்குதான் பாலவிகாஸ் வகுப்புக்கள் நடைபெறுவது. சீனிவாசனும் 1ம் வரிசையில் 4 மணியளவிலே வந்து அமர்ந்தான். ஸ்வாமி ஏறத்தாள 6.00 மணியளவில் வந்தார். எமது வீட்டின் ஹாலிற்குள் வந்த அவரை நாம் வீழ்ந்து வணங்கி வரவேற்றோம். நாம் ஏதாவது ஸ்வாமிக்கு குடிக்கக் கொடுப்பதற் கிடையில், ஸ்வாமி மிகவும் அவசரமாக, "எங்கே பாலவிகாஸ் மாணவர்கள்? அவர்களை நான் பார்க்க வேண்டும்" என்றார். அவரை கார் கராஜிற்கு அழைத்துச் சென்றேன். மாணவர்களுக்கு தரிசனம் தந்தார். என்னிடம் திரும்பிக் கேட்டார். "எங்கே சீனிவாசன்" என்று. ஆகா... 1 ம் வரிசையில் இருந்த சீனிவாசன் அங்கில்லை. எங்கே போய் விட்டான். அவனொரு குழப்படிக்காரன். எங்கோ ஓடிவிட்டான் என்று எனது மனதில் எண்ணியவாறு அருகிலிருந்த மாணவர்களிடம் விசாரித்தேன். அவர்களும் சற்று முன்னர் எங்கோ எழுந்து சென்று விட்டான் என்றனர். ஸ்வாமி கோபமடைந்தவர் போல் பாவனை செய்து " ஒரு குருவுக்கு தன் வகுப்பில் உள்ள மாணவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். சீனிவாசன் எங்கு சென்றான் என்பது தெரியாமலிருக்கக் கூடாது." என்றவாறே மீண்டும் ஹாலுக்குள் வந்தமர்ந்தார். நான் குழப்பமடைந்தேன். இந்த சீனிவாசன் என்னிடம் சொல்லாமல் எங்கே சென்றான், நான் ஸ்வாமி முன் அவமான மடைய நேரிட்டதேஎன்று வருந்திக் கொண்டிருந் தேன். ஸ்வாமி சற்றுப் பொறுத்து என்னை அழைத்து "இன்னும் அரைமணி நேரத்தில் சீனிவாசனும், தாயும் இங்கு வருவார்கள்" என்றார்.

ஆம் ஸ்வாமி கூறியபடி அரைமணி நேரத்தில் சீனிவாசனும், தாயும் ஓடோடி வந்து ஸ்வாமியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். ஸ்வாமி சீனிவாசனுக்கு விபூதி கொடுத்து நன்றாகப்படி, நல்லவனாக இரு என்று ஆசீர்வதித்தார்.

இதன் பின்புலத்தில் நடந்த சம்பவம் இதுதான். சீனிவாசன் அன்றைய தினம், தான் படங்களில் கண்ட அந்த சடையுடன் கூடிய மனிதனைக் காணப் போகின்றோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆர்வத்தில் இருந்தான். ஆனால் தாயோ அன்று மதியம் சினிமா ஒன்றைப் பார்ப்பதற்காக அவனை தனது குடிசையினுள் வைத்து கதவைப் பூட்டிச் சென்று விட்டாள். 4 மணியாகி விட்டது, அம்மா 6 மணிக்கு முன்னர் வரமாட்டார் என்ன செய்யலாம் என்று யோசித்தான். குடிசையின் யன்னலை உடைத்துக் கொண்டு வெளியேறினான். அந்த மாமனிதர் 5 மணிக்கு வருவார். அவர் வந்தபின் பிரசாதம் உண்டு விட்டு சரியாக 6 மணிக்கு அம்மா வருவதற்கு முன்பாக வீட்டிற்கு மீண்டும் வந்துவிடலாம் என்று எண்ணி தனது குருவின் வீட்டிற்கு சென்றான். ஆனால் ஸ்வாமி வரும் போது 6 மணிக்குப் பிந்தியதால், அம்மா தன்னைத் தேடக்கூடும் என்று பயந்து வீடு திரும்பினான். மறுபக்கம் தாயானவள் மகனை வீட்டில் பூட்டி வைத்து விட்டு சினிமா பார்த்தாள் சினிமா முடிந்து வீட்டிற்கு வீதி வழியே சினிமாப் பாட்டை பாடிக்கொண்டு வந்தாள். அப்போ திடீரென்று அவளருகில் காரொன்று வந்து நின்றது. காரின் யன்னல் கண்ணாடி பதிந்தது, உள்ளே பெரும் சடையுடன் சிவந்த அங்கி அணிந்தவர் இருந்தார். "அம்மா எங்கே போகிறாய்? உன் மகன் எங்கே?" என்று அவர் கேட்டார். "நான் சினிமா பார்த்து விட்டு வீடு செல்கிறேன். நல்ல படம், நல்ல பாடல்கள். என் மகன் வீட்டிலிருக்கிறான்" என்றாள். "ஓடு ஓடிப்போ அங்கே உன் குடிசை எரிந்து கொண்டிருக்கிறது, ஓடிப்போய் அவனைக் காப்பாற்று" என்று அந்த மனிதர் கூறிவிட்டு அவர் காரில் சென்று விட்டார். அந்தத் தாய் பதறிப் போனாள். ஓடிப் போனாள். அங்கே அவள் கண்டது எரிந்த குடிசையை. என் மகன் எங்கே என்று துடி துடித்தாள். அவ்வேளையில் தான் சீனிவாசன் வீடு திரும்பினான். அங்கே தாய் அழுவதைக் கண்டு தாயிடம் ஓடிச் சென்றான். தாய் மிக்க மகிழ்ச்சியுற்று கட்டி அணைத்தாள். அவ்வேளையில் மகன் தாயிடம் கெஞ்சினான் "அம்மா, அந்த பெரிய மனிதர் இன்னமும் வரவில்லை. நான் அவரைக் காண வேண்டும். என்னை அனுமதிப்பீர்களா?" என்று. தாய் சற்று சிந்தித்துவிட்டு கீதா அம்மாவின் வீட்டில் இருக்கும் படத்திலுருப்பவரும் தான் காரில் கண்டவரும் ஒருவராக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் மேலோங்க மகனை அழைத்துக் கொண்டு கீதா அம்மா வீட்டிற்கு வந்தார். அங்கே ஸ்வாமியைக் கண்டதும் தான் காரில் பார்த்தவர் தான் அவர் என்று அறிந்ததும் வீழ்ந்து வணங்கினாள். மகனைக் காப்பாற்றியவருக்கு நன்றி கூறினாள்.

இந்நிகழ்வுகள் நடந்து பல வருடங்கள் உருண்டோடின. நானும் அமெரிக்காவிற்கு சென்று விட்டு ஒரு விடுமுறை காலத்தில் புட்டபர்த்திக்கு வந்தேன். தரிசனத்தின் போது ஸ்வாமி என்னிடம் வந்து "கீதா எப்போ வந்தாய்" என்றார். நேற்று இந்தியா வந்து இன்று புட்டபர்த்தி வந்தேன் ஸ்வாமி என்று பதிலளித்தேன். "ரொம்ப சந்தோசம். முதலில் ஸ்வாமியைப் பார்க்க வந்தாயா? நல்லது. நாளை நான் கொடைக்கானல் செல்கிறேன். நீயும் கொடைக்கானல் வா" என்று ஸ்வாமி கூறினார். கொடைக்கானலுக்கு நான் ஒருமுறை தானும் சென்றதில்லை. அங்கே எங்கே தங்குவது என்று எனக்குத் தெரியாது ஆனால் ஸ்வாமியின் வார்த்தைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு என் அம்மாவுடன் காரில் கொடைக்கானல் சென்றேன்.

அங்கே மந்திருக்கு சற்று தொலைவில் காரை நிறுத்த, அந்த நேரம் தரிசன நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால், காரில் இருந்து இறங்கி தரிசன வரிசையில் போய் நின்றோம். அந்நேரம் திடீரென்று ஸ்வாமியின் மந்திர் கேற் திறந்தது. வெள்ளை உடைகளுடன் ஒரு பெரிய மனிதர் ஓடி வெளியே வந்தார். நேராக வந்து என் கால்களில் விழுந்து வணங்கினார். எனக்கு சங்கடமாகி விட்டது. இந்த மனிதர் ஏன் என் கால்களில் விழ வேண்டும் என்று யோசித்தேன். அவர் எழுந்து "என்னைத் தெரியவில்லையா? நான் தான் சீனிவாசன், பெங்களூரில் உங்கள் வீட்டிற்கருகில் இருந்தவர். உங்கள் மாணவன். எங்கள் குடிசை எரிந்த போது ஸ்வாமி என்னைக் காப்பாற்றினார்." என்று அடுக்கிக் கொண்டே போனார். "அப்படியா ரொம்ப நல்லது. இங்கே தமிழ்நாட்டில் என்ன செய்கிறீர்?" என்று கேட்டேன். "எனக்கு உங்கள் வீட்டில் ஸ்வாமி விபூதி தந்து நன்றாகப் படி என்று சொன்னதிலிருந்து நன்றாகப் படித்தேன். இப்போ கோயம்புத்தூர் இந்தியன் வங்கியில் வேலை செய்கிறேன், கோயம்புத்துர் ஸாயி சேவா தளத்துடன் சேவைக்காக இங்கு வந்தேன். ஸ்வாமி தன் அறைக்குப் பொறுப்பான இருவரில் ஒருவராக என்னை நியமிக்கும்பாக்கியம் கிட்டியது. தற்போது தரிசனத்திற்கு ஸ்வாமியை அழைப்பதற்கு ஸ்வாமியின் அறைவாசலில் நின்றிருந்தேன் அப்போ ஸ்வாமி திடீரென்று கதவைத் திறந்து என்னை விளித்து "ஓடு, ஓடிப்போய் வாசலில் உன் குரு நிற்கிறார் அவரை வணங்கி , அவர் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்" என்று கூறினார் அது தான் வந்தேன் என்று சீனிவாசன் கூறிமுடித்தார்.

ஒரு குருவாக இருந்ததினால் எனக்கு ஏற்பட்ட அந்த அனுபவம் அற்புதமானது. மறக்க முடியாதது.

ஜெய் சாயிராம்

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில உலக கல்வி மாநாட்டில் கேட்டவை . . .

SAI SPIRITUAL EDUCATION Conference

**2015 ஆகஸ்ட் 1,2,3 திகதிகளில் நடைபெற்ற கல்வி மாநாட்டில் கலந்து கொண்ட பேச்சாளர்களின் உரைகளிலிருந்து.**

அகில உலக சத்திய சாயி ஆன்மீக கல்வி மாநாடு 2015 ஆகஸ்ட் மாதம் 1ம், 2ம், 3ம் திகதிகளில் சுவாமியின் கருணையினால் புட்டபர்த்தியில் பூரணசந்திரா அரங்கில் இடம்பெற்றது. பல நாடுகளிலிருந்தும் 500 இற்கு மேற்பட்ட குருமார்கள் கலந்து கொண்டனர். இம் மாநாட்டின் தாரக மந்திரமாக "மனித விழுமியங்கள்" (Human Values) காணப் பட்டன.

இவ் ஆன்மீக கல்வி மாநாட்டில் கலந்து கொண்ட பேச்சாளர்கள் சத்திய சாயி ஆன்மீகக் கல்வியின் முக்கியத் துவத்தையும் அக் கல்வி எவ்வாறு மாணவர்களை நல்வழிப் படுத்துகின்றது என்பது பற்றியும் தங்கள் அனுபவங்களையும் எடுத்துக் கூறினார்கள். அவ்வாறு கூறிய விடயங்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சாதாரண கல்விக்கும் (Education) மனித மேம்பாட்டுக் கல்விக்கும் (Educare) இடையே உள்ள வித்தியாசம் என்ன? மனிதமேம்பாட்டுக்கல்வி ஏன் அவசியமாகின்றது என்ற வினாக்களுக்கு டாக்டர்.நரேந்திரநாத் ரெட்டி அவர்கள் பின்வருமாறு கூறினார்.

1) சாதாரண கல்வி தகவல் தொடர்பானது (Information). மனித மேம்பாட்டுக்கல்வி உயர் மன மாற்றத்திற்கானது. (Transformation)
2) சாதாரண கல்வி தலையிலிருந்து தலைக்குப் பரிமாற்றப் படுகிறது (head to head) ஆனால் மனித மேம்பாட்டுக் கல்வி இதயத்திலிருந்து இதயத்திற்கு பரிமாற்றப்படுகிறது (heart to heart).
3) சாதாரண கல்வி புத்தக அறிவு சார்ந்தது (Bookish knowledge). மனிதமேம்பாட்டுக்கல்வி அனுபவ அறிவு சார்ந்தது (Practical knowledge)
4) சாதாரண கல்வி உலகியல் விஞ்ஞானத்தோடு (meterial science) தொடர்புடையது. ஆனால் மனித மேம்பாட்டுக்கல்வி ஆத்மீக விஞ்ஞானத்தோடு (Athmic science) தொடர்பு டையது.

**சுவாமி கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்றார்.**

1) கல்வி தாயின் மடியிலும் தந்தையின் தோளிலும் ஆரம்பிக் கின்றது.
2) ஒழுக்கமில்லாத கல்வி பயனற்றது.
3) கல்வியின் நிறைவு ஒழுக்கம்
4) மேம்பாடுகளுடன் கூடிய கல்வியைக் கற்று அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
5) கல்வியின் சாரம் என்னவெனில் மன ஒருமைப்பாட்டை அடைதலாகும். (Essence of education is con centration).
6) கல்வியின் நோக்கம் அதை எமது வாழ்க்கைக்குப் பயன்படுத்துவது அல்ல. அதை நாம் வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும்.
7) கல்வியின் நோக்கு அல்லது இலட்சியம் என்பது தன்னை உணர்தலும் மனித விழுமியங்களைக் கடைப்பிடித்தலும் ஆகும். இதுவே உண்மையான விழுமியக்கல்வி.

உண்மையான கல்வி 4 தூண்களைக் கொண்டது.

1) நிறுவனம்
2) ஆசிரியர்
3) மாணவர்
4) பெற்றோர்

**இவற்றுள்**
**நிறுவனம் என்று கூறும் போது அது.**

1) இலவசக் கல்வியை வழங்க வேண்டும்.
2) மேம்பாடுகளுடன் கூடிய கல்வியை வழங்க வேண்டும்.
3) மாணவர்களை சிறந்த உதாரண





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷர்களாக உருவாக்குதல் வேண்டும்.
4) சிறந்த ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதாக இருக்க வேண்டும்.

**ஆசிரியர் / குரு எனும் போது**

1) முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.
2) எண்ணம், சொல், செயலில் ஒருமைப் பாடு இருத்தல் வேண்டும்.
3) ஒன்றை மாணவர்களுக்கு கூறுவதற்கு முன்பு அதை தானே கடைப்பிடிக்க வேண்டும்.
4) ஆழ்ந்த சிந்தனையாளராக இருக்க வேண்டும்.
5) இவர்கள் பகவான் பாபாவினால் ஆன்மீகக் கல்வியைக் கற்பிக்கும் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள்.
6) மாணவர்களை தங்கள் செயற்பாட்டின் மூலம் விழிப்படையச் செய்ய வேண்டும்.
7) பகவான் மீது விசுவாசமுள்ளவர் களாக இருத்தல் வேண்டும்.
8) உலகிற்கு ஒளியூட்டுபவர்களாக இருத் தல் வேண்டும்.
9) மாணவர்களில் உயர் மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.
10) கற்பித்தலை சாதனையாக மேற் கொள்ள வேண்டும்.

**மாணவர் எனும் போது**

1) கற்றதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
2) சுவாமி மீது அசையாத அன்பும், நம்பிக்கையும் உடையவராக இருத்தல் வேண்டும்
3) அதி உயர் மனமாற்றம் ஏற்படல் வேண்டும்.

மாணவர்கள் கற்றதை ஒரு காதால் கேட்டு மறுகாதால் விடுவதாக இருக்கக் கூடாது. அல்லது காதால் கேட்டு வாயால் சொல்வதோடும் நின்றுவிடக் கூடாது. காதால் கேட்டதை வாழ்வில் நடை முறைப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

**பெற்றோர் எனும் போது**

1) பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பாலவிகாஸ் கல்வியைக் கற்பித்தல் வேண்டும்
2) வீட்டிலே நல்ல சூழலை பிள்ளைக்கு ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
3) சிறந்த வழிகாட்டியாகவும், பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் முன்னுதாரணமுமாக இருத்தல் வேண்டும்.

**எப்படி சத்திய சாயி ஆன்மீகக் கல்வியை வலுவூட்டலாம் என்றால்**

1) சவால்களுக்கு முகம் கொடுத்தல்
2) ஆசிரியர்கள்/ குருமார்களுக்கு பயிற்றுவித்தல்
3) பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக இருத்தல் (Teachers' Trainee)

சத்திய சாயி ஆன்மீகக் கல்வியானது மாணவர்களை வயதின் அடிப்படையில் 4 பிரிவுகளாக பிரித்து கற்பிக்கப்படுகிறது. இதற்குரிய பாடத்திட்டம் வரையறைக்கு உட்படுத்தப்பட்டதல்ல. மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஆனால் பின்வரும் 5 முக்கிய அம்சங்களை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

1) பகவான் மீது அசையாத நம்பிக்கை - Faith
2) ஆன்மீகம் தழுவியதாக இருக்க வேண்டும் - Sprituality
3) நல்லொழுக்கம் - Morality
4) சமயம் தழுவியதாக - Religiously
5) மனித மேம்பாடுகளை உள்ளடக்கியதாக - Human values

தற்காலக் கல்வி விஞ்ஞானரீதியாக முன்னேற்றம் அடைந்து வருகிறது. அதுமட்டுமல்ல பிள்ளைகள் புத்திக்கூர்மை உள்ளவர்களாக இருப்பதுடன் அவர்களது செயற்பாடுகளில் தொலைக்காட்சி, கணணி என்பன மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்வதால் வீட்டுச்சூழலிலும் மாற்றம் ஏற்படுகிறது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு நாம் கல்வி கற்பிக்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

**தற்போது சத்திய சாயி ஆன்மீகக் கல்வியில் பிரிவு 3, 4 இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கு காரண ங்களாவன:**

1) பிள்ளைகள் வேறுபட்ட விடயங்களில் ஆர்வம் செலுத்துதல் உதாரணம்: பொழுதுபோக்கு, நண்பர்கள், விளையாட்டு
2) பெற்றோர்கள் பிள்ளைகளின் தேவைகளை விளங்கிக் கொள்வதில்லை. பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து விலகியிருத்தல். இதனால் பிளவு ஏற்படுகிறது.
3) பெற்றோர் பாடசாலைக் கல்விக்கு மட்டுமே முன்னுரிமை வழங்குதல்
4) பாடங்களை உற்சாகத்துடன் கற்பிக்காத ஆசிரியர்களும், பொருத்தமற்ற பாடங்களும் (Boring teachers and inappropriateession)

**பிரிவு 3, 4 இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை கூட்டுவதற்கு என்ன செய்யலாம்?**

1) திறமை வாய்ந்த ஆசிரியர்களை தெரிவு செய்தல் - அவர்கள் பிள்ளைகளின் தேவைகளை அறிந்திருக்க வேண்டும்.
2) பிள்ளைகள், பெற்றோரால் கட்டாயப்படுத்தப்பட்டு வகுப்பிற்கு வருதல் என்ற உணர்வு ஏற்படக்கூடாது.
3) ஆசிரியர் பிள்ளைகளுடன் நல்லுறவை வளர்த்தல் வேண்டும்.
4) பிள்ளைகளை, பகவான் மீது அன்பை/ இணைப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். உதாரணமாக: பஜனை, இசைக்கச்சேரி, நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றில் ஈடுபடுத்துதல்

5) இளம் குருமார்களை ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்தல், ஏனெனில் இவர்கள் பிள்ளைகளின் தேவைகளையும் பிரச்சினைகளையும் இலகுவில் அறிந்து கொள்வர்.
6) கவர்ச்சிகரமான கற்பித்தல் நுட்பங்களை உபயோகித்தல். உதாரணமாக: விளையாட்டு, கணணி பயன்பாடு, வீடியோ காட்சி
7) பிள்ளைகளை வகுப்பிற்கு அனுப்புதல் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடல்.

**பிள்ளைகளை வகுப்பிற்கு அனுப்புவதில் பெற்றோரின் செயற்பாட்டை எவ்வாறு தூண்டலாம்?**

1) சத்திய சாயி ஆன்மீகக் கல்வி பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் பெற்றோருக்குத் தெரியப்படுத்தலாம்.
2) ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே சிறந்தது என்றும், அதுவே பிள்ளையைப்பாதுகாக்கும் என்பதையும் விளக்க வேண்டும்.
3) நிலைய சேவைகளிலும், ஆத்மீக செயற்பாடுகளிலும் பெற்றோரைப் பங்கு பற்ற ஊக்குவித்தல்
4) வீட்டுச் சூழலை பிள்ளைகளுக்கு நல்லதாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
5) பெற்றோரை கல்வி வட்டம் என்பவற்றில் கலந்து கொள்ளச் செய்தல்.

**குருமாருக்கான பயிற்சியை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்?**


1) பயிற்சியை இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.
2) பாடத்திட்ட செயற்பாட்டை தேசிய கல்வி இணைப்பாளருடன் இணைந்து செயற்படுத்துதல்
3) ஒவ்வொருவரும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் செயற்பாட்டை ஏற்படுத்துதல்.
4) வெவ்வேறு பிரிவினருக்கு வெவ்வேறாகப் பயிற்சி கொடுத்தல்
5) இளம்குருமார்களைப் பிரிவு 3, 4 இற்கு உள்வாங்குதல்.
6) பயிற்சிமுடிவில் குருமாருக்குச் சான்றிதழ் வழங்குதல்.

**குருமாருக்கு இருக்க வேண்டிய 4 'C'**

1) Cohesion between Sai Organisation and Institute. சாயி நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பை/ இணைப்பை வைத்திருத்தல் வேண்டும்.
2) Credibility establishment. நம்பகத்தன்மையை உருவாக்குதல்
3) Communication effectiveness. தொடர்பாடல் சரியானதாக அதாவது நற்பயனளிக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.
4) Confident and Competent teaching. உறுதியானதும் தகுதியானதுமான கற்பித்தல்.

கற்பிக்கச் செல்லும் குருவிற்கு இருக்க வேண்டிய பண்புகள்:

1) சுவாமியிடம் சரணடைதல்
2) தன்னம்பிக்கையை ஏற்படுத்தல்
3) அன்றைய பாடத்தை முன் தயாரிப்புச் செய்திருத்தல்
4) வகுப்பு தொடங்குவதற்கு 15 நிமிடத்திற்கு முன் குரு வகுப்பில் இருக்க வேண்டும்.
5)வகுப்பை தெய்வீகமயமாகவும் கவர்ச்சியாகவும் வைத்திருத்தல்.
6) பிள்ளைகளை அன்புடன் வரவேற்றல் (மாணவன் 5 நிமிடத்திற்கு



முன்னரே வகுப்பிற்கு வருகை தரல் வேண்டும்)
7)பிள்ளைகள் சுவாமியின் அன்பை குருவின் மூலமே உணர்ந்து கொள்வதால் குருவானவர் சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும்.
8)குரு எப்போதும் பிள்ளைக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறக் கூடாது.
9)கற்பித்தலை மெருகூட்டுவதற்காக கவர்ச்சிகரமான நுட்பங்களை கையாளுதல்
10) குருவானவர் எப்போதும் நிலைமையை அறிந்து கொள்பவராகவும், விழிப்புடன் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
11) குரு அர்ப்பணிப்பு, தியாகம், அன்பு போன்ற நற்குணங்களை உடையவராக இருத்தல் வேண்டும்.

இதனாலேயே சுவாமி பாலவிகாஸ் குருமாரைவிட மேலான ஆசிரியர்கள் இல்லை என்று கூறுகின்றார்.

No teacher greater than Balvikas teacher

ஆகவே சுவாமி மீது அன்பு செய்ய அவரது பணியில் இணைந்து செயற்படுவோமாக.

ஜெய் சாயிராம்

தொகுப்பு:
டாக்டர்.தாரணி சிவகோணேசன்
யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திய சாயி ஆன்மீகக் கல்வி

சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தினால் 2015 ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட "சாயி ஆன்மீகக் கல்வி" என்ற புத்தகத்திலிருந்து தொகுக்கப்பட்ட சில கருத்துக்கள்

எமது இறுதி நோக்கை ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளைப் பின் பற்றுவதன் மூலம் அடையலாம். பகவான் றுறுறு என்று சுருக்க வடிவத்தில் கொடுத்ததன் கருத்து Work - Worship - Wisdom என்பதேயாகும். இதில் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற மூன்றும் அடங்கியுள்ளன. இறுதி நோக்கை அடைவதற்குரிய முயற்சியை சிறு வயதிலேயே தொடங்க வேண்டும். இதற்காகத்தான் பாலவிகாஸ் கல்வித் திட்டத்தை 1967 ஆம் ஆண்டு அறிமுகம் செய்தார்.

பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சியை ஐந்து வயதிலேயே தொடங்க வேண்டுமென்று,நெறிப்படுத்தியுள்ளார். இதைத்தான் சுவாமி நேரத்துடன் தொடங்கி மெதுவாகச் செலுத்தி, போகும் இடத்திற்கு பாதுகாப்பாக போய் சேர வேண்டுமென்று கூறியுள்ளார். உதாரணமாக: பிரகலாதன் தாயின் கர்ப் பத்திலிருக்கும் பொழுதே நாரத முனிவர் ஆன்மீக உண்மைகளைக் கற்றுக் கொடுத்துள்ளார். இலட்சியமான சாயி ஆன்மீகக் கல்விக்கு

இலட்சியமான ஆசிரியர்
இலட்சியமான பெற்றோர்
இலட்சியமான மாணவர்

என்றும் அறிந்துள்ளோம்.

**இலட்சிய ஆசிரியர்:**

1) சாயி ஆன்மீகக் கல்வியில் ஈடுபடுதல் ஏனைய சாதனைகளைவிடச் சாலச்சிறந்தது.
2) இதில் வரும் மாணவர்கள் ஆசிரியரின் பிரேம புத்திரர்களாவார்.



3) ஆசிரியர் தண்ணீர் தாங்கியைப் போலவும் மாணவர் பைப்புக்கள் போலவும் என சுவாமி உவமை கூறியுள்ளார். ஆசிரியர் எப்படியோ மாணவரும் அப்படியேயாவார்கள்.
4) கற்பித்தலை அன்புடன் அன்புக்காகவே நடத்த வேண்டும்.
5) சர்வமத சூழலை ஏற்படுத்த வேண்டும். எல்லா மதங்களும் உத்தமமானவையென்றும், அவற்றின் தத்துவங்களைக் கற்பிக்க வேண்டும். மிளிரும் சுடர்தான் ஏனைய விளக்குகளில் சுடரை ஏற்படுத்தலாம்.

**இலட்சிய பெற்றோர்:**

1) தாயே பிள்ளையின் முதல் ஆசிரியை.
2) தாய்மார் பாலவிகாஸ் வகுப்புகளை வீட்டிலும் நடத்தலாம்.
3) அவர்கள் 5 அடிப்படை மனிதமேம்பாடுகளை வாழ்க்கையில் பின் பற்றி ஆசிரியராக வரலாம்.

**இலட்சிய மாணவன்:**


1) எப்போதும் பணிவாக இருக்க வேண்டும்.
2) மென்மையாகவும் , இனிமையாகவும் உண்மையைப் பேச வேண்டும்.
3) மௌனத்தில் இருக்க பழகிக் கொள்ள வேண்டும்
4) ஆசைகளுக்கு வரம்பு வைத்தல் வேண்டும்
5) வளங்களை வீண்விரயம் செய்யாதிருக்க வேண்டும்.
6) மின் ஊடகங்களுக்கு அடிமையாகாமலிருக்க வேண்டும்.
7) சமூக சேவையில் ஈடுபட வேண்டும்.

**பாலவிகாஸ் குருவைப் பற்றி மேலும் கூறியிருப்பதாவது:**

1) தண்ணீர்தாங்கிக்கு ஒப்பீட்டுப் பார்க்க வேண்டும்.
2) சிற்பியாகவும், தோட்டக்காரனாகவும் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3) சிறந்த தாயாக செயற்படுதல்.
4) வழிகாட்டியாகவும் மெழுகுதிரியின் ஒளியைப் போல் இருளை அகற்ற வேண்டும்.
5) ஆசைக்கு வரம்பு வைத்தலை வலியுறுத்த வேண்டும்.
6) எல்லாவிதமான சந்தர்ப்பங்களிலும் மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும்.
7) வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.
8) புலனடக்கம், கட்டுப்பாடு இவற்றைப் பழக்க வேண்டும்.
9) மென்மையாகவும், இனிமையாகவும் உண்மையைப் பேசிப்பழக வேண்டும்.
10) சிறு பிள்ளைக் கல்வியைப் பற்றி சகல தத்துவங்களையும் அறிந்து பயிற்சியும் பெற வேண்டும்.

**பாலவிகாஸின் நோக்கம்:**

1) தர்மத்தை நிலை நாட்டுதல்.
2)எளிமையாகவும், பணிவாகவும் கட்டுப்பாட்டுடன் வாழப் பழகுதல்.
3) தூய்மையான, தெளிவான மனச்சாட்சியை விருத்தி செய்தல்.
4) பெற்றோரையும் முதியவரையும் மதிக்கப் பழக்குதல்.
5) இத்திட்டம் மாணவனையும்,குருவையும் உன்னத நிலையை அடைவதற்காகவே நிர்ணயிக்கப்பட்டது.

**வரலாறு:**

1967 - இல் பாலவிகாஸ் கல்வி ஆரம்பமாகியது.
1974 - இல் சுவாமி பாலவிகாஸ் ஆசிரியரை குருவென்று அழைக்கத் தொடங்கினார்
1981 - பாலவிகாஸ் பயிற்சி 5 நாட்களுக்கு பிரசாந்தி நிலையத்தில் நடாத்தப்பட்டது.
- சுவாமி அன்பிலும் நம்பிக்கையிலும் மூச்சாயிருக்க வேண்டும் என்றார்.
- பின்பற்றுவதே போதிப்பதிலும் பார்க்க மேன்மையானது
1983 - தனது கல்வித் திட்டத்திற்கு தனது பெயரை எப்போதும் குறிப்பிடச் சொன்னார். மனித மேம்பாட்டுக் கல்வி மாநாடு நடந்தது.
2000 - சுவாமி எஜூகெயர் என்ற பதத்தை பிரயோகிக்கத் தொடங்கினார்.

**எழும் சவால்கள் என்ன?**


1) சக்தி, உற்சாகம் குறைந்து விடல். இதனால் ஏற்படும் பதற்றம்.
2) சரிவரச் செய்ய முடியாதமையும், தடைகளும்.
3) கற்பிக்கும் முறைகளையும் யுக்திகளையும் விளங்க முடியாதிருத்தல்.
4) வித விதமான முறைகளை உபயோகித்தாலும் பயன் கிடைக்காமல் போவது.
5) தடைகளை எதிர் கொள்ள முடியாமை.
6) இவற்றை எதிர் கொள்ள சக ஆசிரியர்களினதும், நிர்வாகிகளினதும் ஆதரவும், உதவியும் இல்லாமலிருப்பது.
7) கிழமைக்கு ஒரு தடவையாவதுஆசிரியவாண்மையை வளர்ப்பதற்கு கூட வேண்டும். இது இல்லாமலிருப்பதும் சவாலேயாகும்.

**வினாக்களுக்கு விடை காணுதல்:**

**மாணவர்களிடமிருந்து எதை நான் (குரு) எதிர்பார்க்கிறேன்:**
- மரியாதை, ஒற்றுமை, நம்பிக்கை, விளக்கம் வகுப்புக்களுக்கு வருவதற்குரிய உந்துதல்கள் என்ன. கற்றதை வழுவாது பின்பற்றுதல். உயர் உன்னத மாற்றத்திற்குரிய அறிகுறிகள்.

**எனது சக குருமாரிடமிருந்து எதிர்பார்ப்பவை என்ன?**
- ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்பது.
- அனுபவங்களையும், வளங்களையும் சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**எமது சத்திய சாயி கல்வியை நெறிப்படுத்தும் தலைவர்களிடமிருந்து எதிர்பார்ப்பவை:**
- குருமார்களின் நலனில் அக்கறை கொண்டு, வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டும்.
- ஆதரவுவு, நம்பிக்கை, புரிந்துணர்வு, தட்டிக் கொடுத்தல், தெளிவான தொடர்பாடல், தகுந்த நேரத்தில் மெச்சுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- முன்மாதிரியான தலைமை.
- வளங்களின் தேவையைப் பூர்த்தி செய்தல். தெளிவான, சுருக்கமான வழிகாட்டல்கள்.

**குரு மேன்மேலும் விருத்தியடைதல்:**

1) தனிப்பட்ட ஆன்மீக சாதனை
2) சத்திய சாயி கல்வி முறையை நன்றாக பல கோணங்களில் விளங்க வேண்டும்.
3) வகுப்பு மேலாண்மை
4) கற்பித்தல் சிந்தனைகளை ஏனையோருடன் பகிர்தல்
5) அனுபவக் கற்றலை ஊக்குவித்தல் . உள்ளிருப்பதை வெளிக் கொணர வேண்டும்.

**ஆசிரிய வாண்மையின் படிப்படியான ஏற்றங்கள்:**

| பிள்ளைகள் | ஆசிரியர் |
|---|---|
| கீழ்ப்பிரிவு/ முதற்பிரிவு | தாய்மையுடன் செயற்படுதல்.<br>அன்பு - கட்டுப்பாடு.<br>சரிக்கு உபகாரம்,<br>பிழைக்குத் தண்டனை.<br>செயலினால் முன்னேற்றம்.<br>Doing & Making |
| இரண்டாம் பிரிவு | ஆசிரியராகச் செயற்படல்<br>ஒழுங்கு, விதிகளை கடைப்பிடித்தல்.<br>Doing & Thinkining |
| மூன்றாம், நாலாம் பிரிவு | சிநேகபூர்வமான செயற்பாடு<br>திட்டமிடல், நோக்கை அடைதல்<br>Planing & Achivement |


சாயி ஆன்மீகக் கல்விக்கும், சத்தியசாயி மனிதமேம்பாட்டுக் கல்விக்கும் இடையிலான வித்தியாசம், தத்துவம், செயல்முறைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**ஆளுமை விருத்திக்கும் 5 அடிப்படை மனித மேம்பாட்டுக்கும் உள்ள இணைப்பு**

| | |
|---|---|
| புத்தி | சத்தியம் |
| உடல் விருத்தி | தர்மம் |
| மன நிலை விருத்தி | சாந்தி |
| உள விருத்தி | அன்பு |
| ஆன்மீக விருத்தி | அஹிம்சை |

மனச்சாட்சியின் குரலே புத்தியாகச் செயற்பட வேண்டும்.

ஜெய் சாயிராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# தெய்வீகப் பயணம்

பகவான் பாபாவின் அளப் பெருங்கருணையினால் நானும் எனது குடும்பமும் 2015 ஆம் ஆண்டு குருபூர்ணிமா தினத்தை முன்னிட்டும் சர்வதேச பாலவிகாஸ் மாநாட்டை முன்னிட்டும் புட்டபர்த்தியை சென்றடைந்தோம். புட்டபர்த்திக்கு இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் சென்றிருந்தேன். ஆனால் இந்தத் தடவை வித்தியாசம் என்னவெனில் சுவாமி சமாதியடைந்த பின் செல்லும் முதல் பயணமாகும். என் மனதில் பற்பல கற்பனைகளையும் சுவாமி ஸ்தூல உருவில் இல்லாத நிலையில் புட்டபர்த்தி எவ்வாறு இருக்கும் என்ற சிந்தனையும் மனதைத் துளைக்க புட்டபர்த்தியை சென்றடைந்தோம்.

புட்டபர்த்தி நுழைவாயிலை அடைந்ததும் என் மனதில் அமைதி நிலவியது. அத்துடன் என்மனதில் தோன்றிய சந்தேகம் அதைக் குலைக்க முற்பட்டது. அது என்னவெனில் சுவாமி புட்டபர்த்தியில் ஸ்தூல உருவில் இருந்த சமயம் அவரின் தரிசனத்தையும் அவரின் அன்பொழுகும் பார்வையையும் அவரது சிருஷ்டிகளையும் நேரில் பார்த்து அனுபவித்த எனக்கு இப்போது சுவாமி சமாதி அடைந்த நிலையில் எவ்வாறு அத்தகைய அனுபவங்களை அனுபவிக்க முடியும்? என்ற எண்ணம் என் மனதை நெருடியது. உள்ளே எங்கள் பயணப் பொதிகளுடன் சென்று கொண்டிருந்த போது நகரசங்கீர்த்தனம் எம் காதுகளை நிரப்ப எமக்குரிய தங்குமிட அறையை அடைந்து, நீராடி, உடைகளை மாற்றிக் கொண்டு குல்வந் மண்டபத்தை அடைந்தோம்.

அங்கே அப்போது வேதபாராயணம் ஆரம்பமாகியது. மண்டபத்தினுள்ளே சென்றதும் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சுவாமி ஸ்தூல உருவில் இருந்த போது அங்கே எவ்வாறு நிகழ்வுகள் நடைபெற்றனவோ அவ்வாறே தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுவாமி முன்பு கதிரையில் வந்து இருக்கும் இடத்தில் அவரது சமாதி அமைக்கப்பட்டிருக்கிறது. சுவாமி ஸ்தூல உருவில் இல்லையானாலும் சூட்சும வடிவில் சமாதியிலிருந்து எம்மை ஆட்கொள்வதை உணர்ந்து கொண்டேன்.

பஜனை முடிவில் சமாதி தரிசனத்தை ஒவ்வொருவரும் பெறமுடியும். நானும், எனது சகோதரர்களும், எனது அப்பா ஒவ்வொருவரும் "சாயி காயத்ரீ" மந்திர உச்சாடனத்துடன் சமாதியில் எமது தலையை வைத்து வணங்க முடிந்தது. அப்போது தெய்வீக அதிர்வலைகள் என்னுள் ஊடுருவிச் செல்வதை நான் நேரடியாக அனுபவித்தேன். அந்தக் கணத்தை என்னவென்று சொல்ல முடியும். சுவாமியின் அன்பான அணைப்பு மனதை உருக்கி விட்டது. சுவாமி ஸ்தூல உருவில் இல்லாத வெறுமை தெரியவில்லை. அவர் தற்போது எல்லா இடத்திலும் வியாபித்து எம்மை ஆட் கொள்கின்றார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

நாங்கள் சென்ற மறுநாள் குருபூர்ணிமா தினமாகும். அன்று காலை "குல்வந்" மண்டபத்தை அடைந்த போது நாங்கள் "பூலோகத்திலா" அல்லது "சுவர்க்கலோகத்திலா" உள்ளோம் என்ற ஐயம் எங்களுக்கு ஏற்பட்டது. ஏனெனில் அந்த அளவிற்கு "குல்வந்" மண்டபம் அலங்கரிக்கப் பட்டிருந்ததை பார்க்கும் போது குபேரனது அழகாபுரியை விஞ்சி விடும் அளவிற்கு அலங்கரிப்புச் செய்திருந்தனர். சுவாமி அமர்ந்திருக்கும் கதிரை தங்க நிறத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தது. அன்று வழமையான வேதபாராயணம், பஜனை என்பவற்றுடன் விசேட பேச்சுக்கள் மற்றும் சுவாமியுடனான தங்கள் அனுபவங்களை சிலர் எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்பது சுவாமி இருப்பது போல் இருந்தது. அன்று சமாதி தரிசனத்தை பெற்ற பின் உள் மந்திரினுள் தியானம் இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. என் மனதில் அமைதி, ஆனந்தம் அதை எவ்வாறு கூறுவதென்றே தெரியவில்லை. எங்கு காணினும் தெய்வீக அலை என்னைத் தழுவுவதை உணர்ந்து கொண்டேன்.

அன்று மாலை மீண்டும் குல்வந் மண்டபத்தை அடைந்தோம். மாலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக வேதபாராயணம், பஜனை, மற்றும் இசை நிகழ்வு என்பன நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து சமாதி தரிசனம் பெற்று வெளியே வந்தோம். எனது தம்பி தனக்கு சரியான தலைவலியாக இருக்கின்றது என்று கூறினார். குல்வந் மண்டபத் திலிருந்து வந்தபின் உணவுச்சாலைக்குச் சென்றோம். அங்கே சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. எனது தம்பி தலைவலி காரணமாக தனக்கு உணவு வேண்டாம். தான் அறையில் சென்று ஓய்வெடுக்கப் போவதாகக் கூறி அப்பாவிடம் அறை சாவியை வாங்கிச் சென்றார். இவ்விடத்தில் நான் புட்டபர்த்தியில் பெற்ற அனுபவத்தை உங்களிடம் பகிர விளைகின்றேன்.

நாங்கள் தம்பியை அனுப்பி விட்டு வரிசையில் நின்று உணவருந்தி விட்டு எமது அறையை நோக்கி சென்றோம். அறை கதவை தட்டினால் தம்பி எழும்பவேயில்லை. கதவைத் திறக்கவுமில்லை. அரை மணித்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலத்திற்கு மேலாக கதவைத் தட்டுவதும், கூப்பிடுவதுமாக நாங்கள் மட்டுமல்ல பக்கத்து அறைகளில் உள்ளவர்களும் வந்து விட்டனர். கதவைத் திறக்க முடியவில்லை. ஒரே பதற்றமாக இருந்தது. அப்போது பக்கத்து அறையிலிருந்த தாய்லாந்திலிருந்து வந்திருந்த அன்ரி "கீழே சேவாதாள் நிற்பார்கள் அவர்களிடம் கூறினால் ஏதாவது உதவுவார்கள்" என்று கூறினார்.


நாங்கள் பதற்றத்துடன் ஓடிச் சென்று சேவாதாளிடம் விடயத்தை கூறினோம். அவர்கள் எங்களைப் பார்த்து பயப்பட வேண்டாம் என்று கூறினார்கள். பின் அவர்கள் விபூதி வாசலில் வைக்கப் பட்டிருக்கும் பகவானின் படமிருக்குமிடம் சென்று முன்னால் விழுந்து பிரார்த்தனை செய்தனர். பின்னர் எம்முடன் எமது அறைக்கு வந்து பார்த்துக் கதவைத் திறக்க முயற்சி செய்தனர். கதவைத் திறக்க முடியவில்லை. பின் பக்க யன்னலால் கூப்பிடுவோம் என்றார். யன்னலால் கூப்பிடுவதென்றால் மேலே ஏற வேண்டும். அவர்கள் பின்பக்கம் சென்று மேலே ஏற ஆயத்தப்படுத்தும் போதே அவர்களது பிரார்த்தனை வேலை செய்யத் தொடங்கியது. எனது தம்பி தானாகவே எழுந்து கதவைத் திறந்தார். நான் அறையினுள் ஓடிச் சென்று மேலே ஏறுவதற்காக நின்ற சேவாதாளிடம் எனது தம்பி எழும்பி விட்டார் எனச் சத்தமிட்டுக் கூறினேன். அவர்கள் "சாயிராம்" என பகவானுக்கு நன்றி கூறினர். இதிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடம் என்னவெனில் நாம் எக்காரியத்தைச் செய்யும் போதும் முதலில் பகவானைப் பிரார்த்தித்துச் செய்ய வேண்டும். இது எமக்குத் தெரியும் என்றாலும் சிலவேளைகளில் நாம் அதைச் செய்வ தில்லை. இது நாம் அங்கு நின்ற சேவாதாள்களிடமிருந்து கற்றுக் கொண்ட பாடமாகும்.

இவ்வாறு புட்டபர்த்தியில் ஒரு வாரம் தங்கி சுவாமியின் தரிசனத்தை காலையும், மாலையும் தவறாது பெற்றுக் கொண்டோம். அங்கே இரட்டைமாடி கட்டிடத்தில் (double decker) நடைபெறும் விசேட உரைகளையும் கேட்க வாய்ப்பு ஏற்பட்டது. அது மட்டுமல்ல ஒரு நாள் இரவு சுவாமியின் முன்னாள் பாலவிகாஸ் மாணவியும் தற்போதய பாலவிகாஸ் இணைப்பாளராக பல இடங்களில் செயற்பட்டுவரும் திருமதி கீதா ராம் அவர்களுடன் சுவாமியினுடனான அனுபவங்களையும், தான் எவ்வாறு பாலவிகாஸ் குருவாக வந்தார் என்றும், தனது பாலவிகாஸ் வகுப்பில் தான் பெற்ற அனுபவங்களையும் கூறக் கேட்டேன். மிகவும் அருமையாக இருந்தது. எமக்கு அவரைப் போல் பாக்கியம் கிடைக்கவில்லையே என்று மனம் வருந்தினேன். ஆனால் நான் ஒரு பாலவிகாஸ் மாணவனாக இருந்ததால் தான் சுவாமி இப்படியொரு நல் உரையைக் கேட்பதற்குச் சந்தர்ப்பத்தை தந்துள்ளார் என பகவானை நன்றிப் பெருக்கோடு நோக்கினேன்.

இப்படியாக எனது புட்டபர்த்திப் பயணம் மூலம் பல அனுபவங்களையும், அற்புதங்களையும் பெற்ற மகிழ்ச்சியுடன் பகவானை வணங்கி, அவரது முன்னைய அவதாரமான சீரடி சாயியின் தரிசனம் பெற சீரடிக்குச் சென்றோம். அதுவும் ஓர் புனிதமான ஸ்தலமாகும். அமைதியான இடமாகவும் இருந்தது. அங்கும் சீரடி சாயிபாபாவின் சமாதியிலிருந்து கிடைக்கும் அதிர்வலைகளை பெற்றுக் கொண்டு எனது தெய்வீகப் பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் இலங்கை திரும்பினேன். திரும்பும் போது நினைத்தேன். பகவானது அன்பும், அழைப்பும் கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ? மீண்டும் புட்டபர்த்தி செல்ல அவரது அழைப்பு எப்போது வரும் என ஆவலுடன் காத்து நிற்கிறேன்.

ஜெய் சாயிராம்

சி.மனாமிர்தன்
பாலவிகாஸ் மாணவன்
யாழ்ப்பாணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சமயம் முக்கியமா?



லியோனட்டோ பொவ் (Leonardo Boff) பிரேசில் நாட்டைச்சேர்ந்த இறைஞானிக்கும் தலாய்லாமா (Dalai Lama) ஞானிக்கும் இடையில் நடந்த சம்பாசணை

**கேள்வி:**
பரிசுத்தமானவரே எது சிறந்த மதம்?

**பதில்:**
அவர் புன்னகையுடன் தன் கண்ணூடாகப் ஊடுருவிப் பார்த்தார். "எது ஆண்டவனிடம் நெருக்கமாகக் கொண்டு சேர்க்கிறதோ அதே சிறந்த மதம். அதுவே உன்னை உன்னதமாக்கி விடும்." என்று பதிலளித்தார்.

**கேள்வி:**
என்னை உன்னதமாக்குவதென்றால் என்ன?

**பதில்:**
அதாவது முன்னரிலும் பார்க்க
கூடிய கருணை,
கூடிய நல்லறிவான உணர்வை,
அதிகளவான பற்றின்மையை,
அதிகளவான அன்பை,
அதிக மனிதத்துவத்தை,
அதிக பொறுப்புணர்வை,
அதிகளவான அறநெறி ஆகியவற்றைத் தருகின்ற மதமே சிறந்த மதமாகும்.

நண்பனே நான் நீர் எந்த மதத்தை சேர்ந்தவரென்றோ அல்லது சமயப் பற்றுள்ளவரென்றோ பார்ப்பதில்லை. எது முக்கியமென்றால் உமது நடத்தை. சக மனிதர்களுடன், குடும்பத்துடன், தொழிலுடன், சமூகத்துடன், உலகத்துடன் எப்படியுள்ளது என்பது தான் முக்கியம்.

பிரபஞ்சமானது எமது எண்ணங்களையும், செயல் களையும் பிரதிபலிக்கின்ற ஒன்றேயாகும். செயலும் அதன் எதிர்ச்செயலும் என்றவிதி பௌதிக அறிவியலுக்கு மாத்திரமல்ல, அது மனிதனிடையில் ஏற்படும் தொடர்புகளுக்கும் பொருந்தும். நான் நல்லதைச் செய்தால் நல்ல விளைவுகளும், கெட்டதைச் செய்தால் கெட்ட விளைவுகளுமே எமக்கு ஏற்படும்.

எமது மூதாதையர்கள் சொன்னது சத்தியமேயாகும். "அதாவது மற்றவர்களுக்கு எது கிடைக்க வேண்டுமென்று எண்ணுகிறாயோ அதுவே உனக்குக் கிடைக்கும். ஆனந்தமாயிருப்பது என்பது விதியல்ல: அது எங்களின் தெரிவேயாகும்" என்பதேயாகும்.


முடிவாகச் சொன்னால்:
"எண்ணங்களைக் கவனி,
அவையே சொல்லாக வெளிப்படும்.
சொற்களைக் கவனி
அவையே செயலாக வெளிப்படும்
செயல்களைக் கவனி
அவையே பழக்கமாகி விடும்.
பழக்கங்களைக் கவனி
அதுவே உனது ஒழுக்கமாகி விடும்.
ஒழுக்கமே உனது விதியாகும்.
விதியே உனது வாழ்வு.
சத்தியத்தைவிட உயர்ந்த மதமில்லை."

என பதிலளித்தார் ஞானி தலாய்லாமா.




**சுவாமி தந்தது**

Watch Your Words
சொற்களை அவதானி
Watch Your Actions
செயல்களை அவதானி
Watch Your Thoughts
எண்ணங்களை அவதானி
Watch Your Character
ஒழுக்கத்தை அவதானி
Watch Your Heart
இதயத்தை நோக்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக சாதனா முகாம்

கிழக்குப் பிராந்தியத்தில் 19.09.2015, 20.09.2015 திகதிகளில் ஆன்மீக சாதனா முகாம் "சாயி அனுக்கிரகம்" நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கிழக்குப் பிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் திரு.லோகிதகுமார் தலைமை வகித்தார். ஓம்காரம், சுப்ரபாதம், வேத பாராயணத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி பின்வரும் செயற்பாடுகளும் உரைகளும் நிகழ்ந்தன.

- ஓம்காரத்தின் விளக்கம்
- ஓம்கார சாதனை
- காயத்ரீ மந்திர விளக்கமும் சாதனையும்
- சாயி பக்தர்களுக்கு ஆன்மீக சாதனையின் முக்கியம்
- உயர் மன மாற்றம்
- நாம மகிமை
- நாளாந்த வாழ்வில் ஆத்மீகத்தைக் கைக் கொள்வதில் ஏற்படும் தடைகளும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிகளும்
- வேதத்தின் மகிமையும் அவசியமும்
- 9 ஒழுக்க கோட்பாடுகளும் விழுமியங்களும்
- நகர சங்கீர்த்தனம்
- காயத்ரீ ஜெபம், நாம ஜெபம்
- சேவையூடாக ஆன்மீகம்
- சுவாமியுடனான அனுபவமும் அற்புதங்களும்.
- உன்னத மாற்றத்தின் அளவீடு
- 45 நாள் சாதனை அறிமுகமும் அறிவிப்பும்.

உரைகள் சிலவற்றின் சாராம்சம் இவ் வெளியீட்டில் உள்ளன.



## சேவையூடாக ஆன்மீகம்

"ஓம் ஸ்ரீ சாயி அவ்யக்த ரூபிணே நம:"

"நாம் எல்லோரும் தெய்வீக அனுபவம் உள்ள தெய்வீக ஆத்மாக்கள். இதை அனுபவபூர்வமாக உணர்வதே ஒரேயொரு ஆசையாக எம்மிடமிருக்க வேண்டும். எல்லாம் ஒன்று என்ற பேருணர்வு நிலையே ஆன்மீகம் ஆகும். இதை அடையும் வழியே ஆத்ம வித்தியாவாகும். இதை நாம் வேதாந்தம் மூலமாக ஓரளவு விளங்கிக் கொள்ளலாம். வேதாந்தத்தின் சாரம் பகவத்கீதையில் தரப்பட்டுள்ளது.

பிரபஞ்சத்தில் உள்ளது பரமாத்மா. உடலுள் அடங்கிய பகுதியை ஜீவாத்மா என்று சொல்கின்றோம். உதாரணமாக வெளிக்காற்று பரமாத்மாவென்றால், பலூனில் அடைக்கப்பட்டது ஜீவாத்மா ஆகும். பலூன் உடைந்ததும் இரண்டும் இரண்டறக் கலந்து விடுகின்றன.

சுவாமி "நீ ஒருவனில்லை, உன்னில் மூன்று மனிதர்கள் இருக்கிறார்கள். அவையாவன:
1) நீ உன்னை யார் என்று நினைப்பது. - ஸ்தூல சரீரம்
2) மற்றவர்கள் உன்னை யாரென்று நினைப்பது - மனம்
3) உண்மையில் நீ யார் என்பது - ஆத்மா

மனிதனில் ஆத்மா மனச்சாட்சியாகச் செயற்படுகின்றது. அது எப்போதும். சத்தியத்தையே வெளிப்படுத்தும். அதை ஒரு திசை கருவிக்கு ஒப்பிடலாம். எப்போதும் அது வடதிசையே காட்டும். ஆனால் திசைகாட்டிப் பெட்டியின் கண்ணாடி அழுக்கடைந்தால் திசையைப் பார்க்க முடியாது. எமது மனமும் அழுக்கடைவதால் மனச்சாட்சியின் வெளிப்பாடு மங்கிப் போகிறது அல்லது தெரிவதில்லை. மனம், புலன்கள் , ஆத்மா இவற்றில் யார் அதிபதி இதுவே எமது திசையை நிர்ணயிக்கும். புலன்களின் ஆதிக்கத்தில் மனம் இயங்கினால், அது உலகை நோக்கும். மனம் ஆத்மாவுடன் சேர்த்து புலன்களை அடக்கினால் ஆன்மீகமாகும். புலனடக்கம் இல்லாவிட்டால் பிறப்பும் இறப்பும் மாறி மாறி நிகழும்.

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா ஒரே நாடாவில் ஆக்கப்பட்ட இசை போன்றது. காணமுடியாதது. ஆனால் அறியக்கூடியது. இதற்கு மனம் ஆத்மாவழி திரும்ப வேண்டும். ஆத்மா அழிவற்றதும், அன்பு மயமானதும், பேரானந்தமானதுமாகும். ஆத்மாவை உணர்வதற்கு "நான் யார்?" என்ற ஆத்ம விசாரணை செய்ய வேண்டும். இதற்குத் தடையாயிருப்பது தேகாபிமானமேயாகும். எமக்கு சரீரம் தரப்பட்டது அகங்காரத்தை வளர்ப்பதற்காக அல்ல: சேவை செய்வதற்காகவேயாகும்.

இறைவனுக்கு அர்ப்பணிப்பு என்ற மனப்பாங்குடன், தேவைகள் உள்ள ஒருவருக்கு தன்னலமின்றி செய்யும் உதவியே சேவையாகும். தன்னலமற்ற சேவையென்றால், ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல், நான் செய்கிறேன் என்ற உணர்வுமில்லாமல், தூய உள்ளத்துடன் தூய அன்பிற்காகச் செய்யும் சேவையேயாகும்.

கொடுப்பவரும் ஆண்டவன், எடுப்பவரும் ஆண்டவன், கொடுப்பதும் ஆண்டவனின் பரிசு, கொடுக்கும் இயக்கமும் ஆண்டவன் என்ற விளக்கம், உணர்வு இருக்க வேண்டும். சேவையினால் பிரயோசனப்படுபவர் நீயேதான். இது உன்னைச் சீர்த்திருத்த வேண்டும் என்பதற்காக ஈடுபடும் ஆன்மீகச் செயற்பாடு. எமது சீர்திருத்தத்திற்கு எமது முயற்சியும், ஆண்டவனின் அருளும் தேவை.

பகவானின் கூற்றுக்கள்:

**" நீ என்னை நோக்கி ஓர் அடி எடுத்து வை**
**நான் உன்னை நோக்கி நூறு அடிகள் எடுத்து வைப்பேன்"**

**"நீ உனது தயார் நிலையைத் தெரியப்படுத்து**
**நான் உனக்கு செயற்திறனைத் தருவேன்"**

**"உன்னால் முடிந்தவரை உதவி செய்**
**உனக்கேற்ற சிறந்த திறமையுடன் செய்**
**எவ்வளவு மௌனமாகச் செய்ய முடியுமோ செய்**
**எவ்வளவு அன்பாகச் செய்ய முடியுமோ அவ்வளவு அன்பாகச் செய்"**

**"சேவைக்கு வாய்ப்பளித்த அந்த இறைவனிடம் சமர்ப்பி"**

நாம் எப்போது , எங்கே சேவை செய்தோம் என்பதை இறைவன் கேட்பதில்லை. அவர் என்ன உள்நோக்கத்துடன் செய்யப்பட்டதென்பதையே அவதானிப்பார். சேவை செய்வதற்கான ஊன்று கோலாக அமைந்தது எது என்பதையும் அவதானிப்பார்.

எமது நேரத்தையும் சக்தியையும் தினந்தோறும் இறவனுடன் சங்கமமாக்கும் சாதனைகளாவன:

நாமஸ்மரணை
பஜனை
சத்சங்கம்
தியானம்
சேவை

ஆன்மீக சாதனைகள், தன்னலம், ஆசைகளை நீக்கி திரிகரண சுத்தியை ஏற்படுத்தும். இதனால் சேவைக்கேற்ற மனப்பாங்கை விருத்தி செய்யலாம். செய்யும் சேவையைவிட சேவை தமக்கு என்ன செய்தது, உன்னத மாற்றத்தை ஏற்படுத்தியதா என்பதே முக்கியம். சேவையின் மூலம் தன்னை அறிதல் என்ற ஆத்ம விசாரணையை இலகுவாக்கலாம்.

தன்னை அறியவேண்டுமென்ற ஒரே ஒரு ஆசையே இருக்க வேண்டும். நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கு செல்ல வேண்டுமென்பதை உணர வேண்டும்.

திரு.லோ.பிரபாகரன்.
மத்திய சபைத் தலைவர்.

## ஆன்மீகத்தில் சாதனைகளின் முக்கிய த்துவம்:

ஆன்மீகமென்றால்:
உள்ளிருக்கும் தெய்வீகத்தை உணர்தல்
எங்கும் உள்ளதென்பதை உணர்தல்
வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பவையேயாகும்.

தெய்வீகம் என்றால் அன்பு என்னும் மகாசக்தியேயாகும். இந்த மகாசக்தியைப் பற்றி மகாவிஞ்ஞானியான அல்பேட் ஜூன்ஸ்ரைன் (Albert Einstein) மகனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அன்பின் அடிப்படிடையிலே ஏனைய அடிப்பட்டை மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, அஹிம்சை வெளிப்படுகின்றன. இந்த 5 மனித மேம்பாடுகள் எமது சிந்தனை, சொல், செயலில் வெளிப்பட வேண்டும். எந்நேரமும் படைப்பிலும் , உள்ளும் இறைவனுள்ளான் என்ற பேருணர்வில் வாழ வேண்டும். பகவானுடன் இணைவதே எமது இறுதி நோக்காகும்.

"இறைவனை உள்ளிருத்தி. அவர் மேல் அன்புகாட்டி, அவருக்காகவே அவருடனேயே வாழ்ந்து இறுதியில் இறைவனுடன் இணைவதே ஆன்மீகம்"

எமது இயல்பை சுவாமி எங்களை எவ்வாறு அழைத்திருக்கிறாரென்பதில் பிரேம சொரூபிகளே!, ஆத்ம சொரூபிகளே!, ஆனந்த சொரூபிகளே என்பவற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம். இதை அடைவதற்கு நம்பிக்கை, மனஉறுதி, அர்ப்பணம் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிக்காவும், ஆனந்தத்திற்காகவும் மனதை ஒருமைப்படுத்துவதற்காகவும், நாளாந்த வாழ்வில் ஆன்மீகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மனமே எமது எதிரியாகவும் பெரும் உதவியாளருமாகச் செயற்படும். சிந்தனையின் சேர்க்கை, ஆசைகளின் கூட்டு என்றும் மனதைக் கூறுகின்றோம். அடி அறி மனதில் தேகாபிமானத்தில் எழுந்த ஆறு உள் எதிரிகளும், உணர்வுகளும், கர்ம வினைகளும் பதிவாகியுள்ளன. அடி அறிமனதை தூய்மைப் படுத்துவதற்கு 5 அடிப்படை மனித மேம்பாடுகளைப் பின் பற்ற வேண்டும். அப்போது மனச் சாட்சியின் குரல் வலுப்படுத்தப்படும். நேர் மறை எண்ணங்கள் தடையில்லாது எழும்.

ஆன்மீக சாதனைகளின் மூலம் எமது பதிவுகளை மீள் திட்டமிட்டு மாற்ற வேண்டும். துயில் விட்டு எழும் போதும் நாளாந்த செயற்பாடுகளின் போதும், துயில் கொள்ளப் போகும் போதும் இறை சிந்தனையுடன் செல்ல வேண்டும். இல்லங்கள் ஆலயங்களாக தொழிற்பட வேண்டும். எண்ணம், சொல், செயலில் தூய்மையும் ஒருமையும் ஏற்பட வேண்டும்.

மகாத்மா காந்தியின் கூற்று:
" நான் முழுமையானவனல்ல
முழுமையை நோக்கிச் செல்கிறேன்"
எமக்கும் பொருந்தும்.

டாக்டர்.வி.ஜெகநாதன்,
மத்திய சபை தலைவர்.

## ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகள்

பகவானால் எமது ஆன்மீக முன்னேற்றத்திற்காக தரப்பட்ட ஒழுக்கக் கோட்பாடு (பக்தியுடன் இனிமையாக இசை மூலம் இதைப் பற்றி வெளிப் படுத்தினார்) பகவானுக்கு பக்தர்கள் தான் இருக்கிறார்கள். சீடர்கள் இல்லை. 9 கோட்பாடுகளில் சில தனிநபர் சாதனைக்கும் சில குடும்ப சாதனைக்கும் சில சமூக சாதனைக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் முன்னேற வேண்டுமானால் தெய்வபிரீதி, பாபபீதி, சங்கநீதி ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும். ஒன்பது கோட்பாடுகள் ஒன்பது செயற்பாடுகளாகப் பரிணமிக்கும்.

ஜெய் சாயிராம்
திரு.இரா சண்டேஸ்வரன்
ஆன்மீக இணைப்பாளர், கிழக்குப் பிராந்தியம்

## ஜோதி தியானம்

உகண்டா என்ற நாட்டின் தலைநகரமான கம்பாலாவில் வைத்தே சுவாமி ஜோதி தியானத்தைச் சொல்லிக் காட்டினார்.
தியானத்தின் பயன்களாவன:
1) ஒரு முக மனக்குவிப்பு
2) ஞாபக சக்தி அதிகரிக்கும்
3) மன அமைதி -
4) விசால மனப்பாங்கு
5) உள்ளுணர்வு விருத்தி
6) பிரபஞ்ச மனப்பாங்கு
7) மூன்று வகைச் சாதனையையும் உள்ளடக்கும்
ஓம் - காயத்ரீ - தியானம்
துவைதம் - விசிட்டாத்துவைதம் - அத்வைதம்

தியானத்திற்குரிய ஆயத்தமும் படிகளும்
1) நேரம் - பிரம்மமுகூர்த்தம்
இடம் - தூய்மையான, அமைதியான, வழக்கமானது
ஆசனம் - பாய், துணி
விளக்கேற்றல் - மின் குமிழி சரிவராது
சுடர், தீபம் ஏற்ற வேண்டும்.

2) முதுகை நேராக வைத்திருக்க வேண்டும்.
சுடரை கண்வெட்டாது பார்த்தல் (12 செக்கன்கள்)
கண்களை இலேசாக மூடுதல்

3) புருவ மத்திக்கு சுடரை கொண்டு வருதல்
தலை உச்சி வரை பிரகாசம்
இதயத்திற்குள் இறக்குதல்
இதயம் தொடங்கி தலை உச்சி வரை பிரகாசம்
இனி உடம்பு முழுவதும் ஒளி மயமாகுதல்

4) உடம்பிலிருந்த ஜோதி தலை உச்சியிலிருந்து விரிவடைந்து பிரபஞ்சம் முழுக்கச் சென்றடைகிறது.

5) நிறைவு செய்தல்
" முதலில் நான் ஒளியிலிருந்தேன்
பின்பு ஒளி என்னுள் உதித்தது
கடைசியில் நானே ஒளியானேன்"

திரு.எஸ்.ஆர்.சரவணபவன்
தலைவர் - வடபிராந்தியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம மகிமை

நாம் எழும்பும் போது நாமத்துடன் எழவேண்டும். நாமத்தின் பெறுமதி வரை யறையற்றது. இறைவனுக்கு அவரின் நாமமே மகிமை அளிக்கின்றது. இறை சக்தியை வெளிப்படுத்துவதும் இறை நாமமேயாகும். நாமத்தினால் உள்ளுணர்வு விருத்தியடைவதுடன் மனத் தெளிவும் உண்டாகும். மது அருந்திய தேள் கொட்டி குரங்கைப் போல அலையும் மனதை வழிப்படுத்த வல்லது இறை நாமமேயாகும்.

கலியுகத்திற்கு சிறந்த உகந்த சாதனை நாமஸ் மரணையே என்று சுவாமி சொல்லியுள்ளார். நாம சங்கீர்த்தனம் அல்லது பஜனையும் இதில் அடங்கும்.

நம்பிக்கை அளிப்பது இறை நாமமேயாகும். கடலில் பறக்கும் பறவைகள் கப்பல் ஒன்று தென்படும் என்ற நம்பிக்கையில் பறக்கின்றன. கப்பல் ஒன்று வருமென்றும், போனாலும் இன்னொன்று வருமென்ற நம்பிக்கை யுண்டு. இந் நம்பிக்கை அவைகளின் இயல்பு. உலகிலுள்ள பிரச்சினைகளும் இறை நாமத்தால் தீர்ந்து விடும்.

எனது சொந்த அனுபவம். பதினொரு வருடங்களுக்கு முன்பு எனது இதயத்தில் இரத்த ஓட்டம் குறைவென்ற நிலை இருந்தது. சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமென்று வைத்திய நிபுணர்கள் கூறினார்கள். நான் நம்பிக்கையுடன் இடைவிடாத தொடர்ச்சியான நாமஸ் மரணையிலிருந்தேன். கடந்த மாதம் வைத்திய பரிசோதனைகள் செய்த போது இதயத்தில் ஒரு குறையுமில்லையென்றும் மருந்துகள் எடுப்பதையும் நிறுத்தச் சொன்னார்கள்.

இறை நாமம் பாதுகாப்பு அளிக்கும். இறைநாமம் புத்துணர்வு மகிழ்ச்சி ஆகியவையைத் தரும். இறைநாமம் பல பக்தர்களை சங்கடங் களிலிருந்து விடுவித்துள்ளது.

ஜெய் சாயிராம்

திருமதி. சுபா. சக்கரவர்த்தி
கிழக்குப் பிராந்தியம்

## வேதத்தின் மகிமை

வேதம் என்ற சொல்லின் கருத்து ஞானம். வேத ஒலி புனிதமானது என்றும் நிலையானது போற்றத்தக்கது. எங்கும் உள்ளது. இவற்றுடன் இறைவனின் மூச்சுமேயாகும்.

சப்தபிரம்மன் இடம், காலத்திற்கு அப்பாற்பட்டது . ஆனந்தம் அளிப்பது. கருத்துப் புரியா விட்டாலும் கவனத்துடன் கேட்டால் பயன் கிடைக்கும். எம்முள் இருக்கும் 65 சக்திகள் அதிகரிக்கும்.


வேத ஒலிகள் ஞானிகள் உயர் நிலையிலிருக்கும் போது கொடுக்கப்பட்டு அவர்களால் எங்களுக்குத் தரப்பட்டு ள்ளது. வேதம் ஓதினால் மூளையின் எல்லாப் பகுதிகளும் வேலை செய்யும். சாதாரணமாக நாம் மூளையின் 10 சதவீதத்தை தான் உபயோகிக்கிறோம். இந்த வீதத்தை வேதபாராயணம் அதிகரிக்கும்.

காஞ்சிப்பெரியார் வேத பாராயணம் மூலம் ஞானம் அடைந்தார் என அறிந்துள்ளோம். சூழல் தூய்மைப் படுத்தப்பட்டு ஐம்பூதங்களிலுமுள்ள மாசு நீக்கப்படும் என சுவாமி கூறியுள்ளார். வேத ஒலி குழந்தைக்கு தாயின் தாலாட்டுப் போன்றது. எமக்கு அமைதியைத் தரும்.

எம்மைச்சுற்றியுள்ள மின்காந்தப் பரப்பு தூய்மையடைந்ததாயும், நேர் மறை எண்ணங்கள் நிறைந்ததாயும் இருப்பதாக கிரிலியன் புகைப்படங்கள் (Kirlian Photography) காட்டுவதாகக் கண்டு பிடித்துள்ளார்கள்.

வேதம் இந்துக்களுக்கோ பாரதியர்களுக்கோ மட்டும் சொந்தமானதில்லை. விஞ்ஞான விதிகளைப் போன்று உலக மக்கள் அனைவருக்கும் சொந்தம். இன, மத, வயது வேறுபாடின்றி சகலரும் பாராயணம் செய்யலாம். பெண்கள் கூட வேதபாராயணம் செய்யலாம். அவர்கள் செய்தால்தான் நாடும் உன்னத நிலையை அடையும். இதற்கு உணவுக் கட்டுப்பாடு உள்ளதா? ஞானிகள் சைவ உணவையே வலியுறுத்துகிறார்கள். சுவாமியும் தனது பக்தர்களை மதுபானம் குடித்தல், புகைத்தல், மாமிசம் புசித்தல் ஆகிய மூன்றையும் விடச் சொல்லியுள்ளார். சுவாமியின் அருகாமையிலிருக்க வேதம் ஓதி சரணடைய வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நாளும் ருத்ரம் ஓதப்பட வேண்டும். நாமம் ஜெபம் எம்மைக் காப்பாற்றும். காலையில் 108 தடவை நாமமும், ஒரு தடவையாவது ருத்ரமும் சொல்லப்பட வேண்டும். இதைத்தான் சுவாமி தனது மாணவர்களுக்கு வலியுறுத்தி, இதனால் சாயி இராம ராஜ்ஜியம் உண்டாகுமென்று கூறியுள்ளார்.

டாக்டர். சி.சிவகோணேசன்,
தேசிய ஆன்மீக இணைப்பாளர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னத மன மாற்றம்

உன்னத மன மாற்றம் மனித உன்னதமாக மாறி பூரணத்துவத்தை அடைதலே எமது இறுதி நோக்காகும். மனிதனில் மூன்று கூறுகள் உள்ளன. அவையாவன:
உடல் + மனம் + ஆத்மா ஆகும்.


மனமாகிய உளம் உடலைச் சார்ந்தால் பற்று, பிறப்பு ஏற்படும். உளம் ஆன்மாவைச் சேர்ந்தால் பற்றின்மை, விடுதலை அல்லது முக்தி கிடைக்கும். இதற்கு உதாரணமாகத் திறப்பையும் பூட்டையும் சுவாமி கூறியுள்ளார். திறப்பு என்ற மனம் வலது பக்கம் திரும்பினால் இதயம் என்ற பூட்டு திறக்கும். அதே திறப்பு இடது பக்கம் திரும்பினால் பூட்டு பூட்டப்படும்.

தெய்வீக நிலையை அடைய வேண்டுமென்றால் தெய்வீக நிலையென்பது எதைக் குறிக்கிறது என்பதை அறிய வேண்டும். இதை பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

சத் - சித் - ஆனந்தம்
சத்யம் - சிவம் - சுந்தரம்
பிரம்மம் - ஆத்மா - பரபிரம்மம்
மனச்சாட்சி - பிரபஞ்ச விழிப்புணர்வு
புலனடக்கம்
உள்ளுணர்வு விருத்தி
விழிப்புணர்வு நிலை ஏற்றம்
எளிதான கூற்று 5 அடிப்படை மனித மேம்பாடுகளின் வெளிப்பாடு.


இந்நிலையை அடைவதற்கு இருக்கும் தடைகளாவன:
தேகாபிமானம் - புலனாதிக்கம்
6 உள் எதிரிகளின் ஆதிக்கம்
சோம்பல், சந்தேகம்
அஞ்ஞானம், உணர்ச்சி வசப்படல்
தீயவர் சேர்க்கை
பயம்,
துவைத நிலை என்பனவாகும்.

எமது மனம் இரு நிலைகளில் தொழிற்படலாம். கீழே தரப்படும் மாதிரிப் படம் இதை விளக்குகிறது.




செயல்களுக்கு ஆதாரம் எண்ணங்களே. எண்ணங்களின் கூட்டே மனம். இதைவிட மனதிற்கு ஞாபகம், மீட்டெடுத்தல், கற்பனை, சிந்தனை ஆகிய தொழில்களும் உண்டு. இதற்கு கீழே தரப்படும். படம் விளக்கத்தைக் கொடுக்கும்.

**மனிதத் தொழிலகம்**
**உடம்பு**




அடி அறிமனதிலுள்ள பதிவுகள் (முற் பிறப்பு, இப் பிறப்பு) தான் எமது விருப்பு, வெறுப்பு பாரபட்சத்திற்குக் காரணமாககின்றன. இது அறிமனதில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதனால் செயல்கள் உணர்ச்சிவசப்பட்டவையாகவே இருக்கும். உயர் அறிமனம் ஆதிக்கம் செலுத்தினால் செயல்கள் பகுப்பாய்வுச் செயல்களாகவும் உள்ளுணர்வுச் செயல்களாகவும் இருக்கும். அடிஅறிமனதைத் தூய்மைப்படுத்த ஆன்மீக சாதனைகள் முக்கியம். தூய்மைப் படுவதே உன்னத மனமாற்றம். எண்ணம், சொல், செயலில் தூய்மையும் ஒருமையும் ஏற்படுவதே உன்னத மனமாற்றத்திற்கு ஓர் அளவு கோல். உன்னத மனமாற்றத்திற்கு தடையாக இருப்பது மனதிலுள்ள ஆறு உள் எதிரிகளாகும் (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சர்யம்) இவற்றிற்கு ஆதாரம் ஆத்மாவேயாகும். ஆத்மாவிலிருந்து எழுந்த ஆறு உள் எதிரிகள் ஆத்மாவின் இயல்பான 5 அடிப்படை மனித மேம்பாடுகளை வெளிப்பட விடுவதில்லை. இதற்கு உதாரணம்: சூரியனால் உண்டாகிய முகில்களே சூரிய வெளிச் சத்தை மறைக்கின்றன.

பகவான் தந்த சாதனை வகைகளாவன:
தனிமனிதன் - சங்கல்ப்பம் பூணுதல்
முயற்சி - விடா முயற்சி
இயலுமைக்கேற்ற முயற்சி
பயனுள்ள முயற்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக தேவை
சிந்தனைத் தெளிவு
- 9 கோட்பாடுகளைப் பின்பற்றுதல்.
- பாலவிகாஸ், மனித மேம்பாட்டுக் கல்வி
- எண்ணம், சொல், செயல் தூய்மையும் ஒருமையும்.
- ஆண்டவனின் கிருபை கட்டாயம் வேண்டும்.
- பகவான் தந்த உன்னத மனமாற்றப் படிகளாவன:
தூய்மை - பொறுமை - விடாமுயற்சி
ஒற்றுமை
ஒன்று என்ற தத்துவம் - தூய்மை - தெய்வீகம்

வேதத்தில் கூறப்பட்ட மனதின் குறைபாடுகளாவன:
1) மாலா - வாசனைகள் (முற்பிறப்பு, இப்பிறப்பு)
2) விக்சேப - அலையும் மனம்
3) ஆவரண - அஞ்ஞானம் - தெளிவின்மை
அல்லது மாயை

விழிப்புணர்வேற்றம் ஏற்படும் போது நான் எனது என்பது நீங்கி நாங்கள் எங்களுடையது என்று மாறி எல்லாம் அவனே. எல்லாம் அவனதே என்ற மனப்பாங்கு ஏற்படும்.



ஸமஸ்த லோகா சுகினோ பவந்து

டாக்டர். இ.கணேசமூர்த்தி

## ஓம்காரத்தின் உட்பொருள்

இந்து மதத்தின் சின்னமாக விளங்குவது ஓரெழுத்து மந்திரமாகிய ஓம்காரம். இந்த "ஓம்" என்று தான் தொடங்கும். இந்த ஓம்காரத்தின் உட்பொருளை சிவபெருமானுக்கே முருகன் உபதேசித்ததாக புராணங்கள் கூறுகின்றன. இப்படியாக தனது மகனையே பரீட்சித்துப் பார்த்தார் சிவன். பிரம்மாவிற்கே விளங்காத ஓம்காரம் எமக்கு விளங்காவிடினும் பரவாயில்லை என்று இராது நாமும் எம்மால் இயன்றவரை முயல வேண்டும். பொருள் உணர்ந்து உபாசனை செய்யும் போது ஆழமாக, விரிவாக உணர முடியும். ஆகவே நான் உணர்ந்த சில கருத்துக்களை உங்களுடன் பகிர்வதன் மூலம் மேலும் ஆழமாக நீங்களும் சிந்திக்க முடியும்.

முதலாவதாக ஓம்காரத்தின் தோற்றத்தை சிந்திப்போம். பல கோடி வருடங்களுக்கு முன்பாக இந்த கோள்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பிரமாண்டமான கோளாக இருந்தது. அது "ஓம்" என்ற சப்தத்துடன் வெடித்து சிதறிய போது ஏற்பட்ட அசைவினால் காற்று உண்டாகியது. வெப்ப மயமான நடுப்பகுதி சூரியனாகி வெப்பம் ஏற்பட்டது. வெப்பம் குளிர்ந்ததால் நீர் உண்டாகியது. இறுகிய பாறைகள் நலமாகியது. இதுவே பஞ்ச பூதத்தின் தோற்றமென வேதத்தில் கூறப் பட்டுள்ளது. இக்கருத்தை நவீன விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கிறது. "Big Bang Theory" என்று கூறப்படும் தத்துவமும் "Bang" என்ற சப்தத்துடன் இந்தப் பிரமாண்டமான கோள் வெடித்துச் சிதறியது என்று கூறுகிறது. இந்த ஓம்கார ஒலிதான் இன்றும் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

எமக்குள்ளே எப்படி ஓம்காரம் உருவாகிறது என்பதை எம்மை நாமே உற்று நோக்குவோம்.நுரையீரலில் காற்று உள்ளது. இந்தக் காற்றை மூலாதாரத்தில் இருந்து எழும் ஒரு உந்து சக்தி நுரையீரலை அழுத்தி வெளியேற்றுகிறது. வெளியேற்றப்பட்ட காற்று தொண்டைக்கு வந்து அங்குள்ள தசை நார்களில் அடிபட அதிலிருந்து ஒரு சப்தம் எழுகிறது. அது "அ அ அ..." என்ற சப்தமாகும். திறந்திருக்கும் வாய் மெதுவாக மூடும் போது அந்த சப்தம் "உ உ உ..." என்று மாறுகிறது. வாய் முற்றாக மூடியதும் காற்று மூக்கு வழியாக வந்து "ம் ம் ம்....." என்று மாறுகிறது. ஆகவே எமக்குள் எழும் சப்தம் 3 விதத்தில் ஒலிக்கிறது. "அ+உ+ம்" இதுவே ஓம்காரத்தின் உட்பொருள் இதுவே உலகின் எந்தப் பாகத்தில் இருப்பவர்களுக்கும் எந்த பாஷை, எந்த இனம், மதம் என்ற வேறுபாடு இன்றி மனித குலம், மிருகங்கள், பறவைகள் ஆகிய எல்லாவற்றிற் குள்ளிருந்தும் எழும் ஒலியாகும். இதுவே ஆதி சப்தம்.

அடுத்து உலக மொழிகளுக் கெல்லாம் இந்த ஓம்காரமே ஆதி சப்தமாக இருப்பதைப் பார்ப்போம். இந்த அடிநாதமாகிய ஓம்காரத்தை வைத்து நாக்கு, உதடு, பல், மேல், கீழ்தாடை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை உபயோகித்து வெவ்வேறு ஒலிகள் எழுப்புகிறோம். இதுவே மொழியானது. உதாரணமாக “தண்ணீர்” என்ற சொல்லை எடுப்போம். “தண்ணீர்” என்ற சொல்லை சொல்லிப் பாருங்கள், உங்கள் நாக்கு, உதடு, பல், தாடைகள் எப்படி அசைந்து இந்த “தண்ணீர்” என்ற சப்தம் வருகிறது. என்று உற்று அவதானியுங்கள். இதே தண்ணீரை ஆங்கிலத்தில் “Water” என்று சொல்லும் போது எப்படி வேறுபட்ட வித்தில் நாக்கு, உதடு, பல், தாடை என்பன அசைந்து “வாட்டர்” என்ற சப்தத்தை ஏற்படுத்து கிறது என்று உற்று அவதானியுங்கள்.

இதையே சிங்களத்தில் “வத்துற” என்று சொல்லும் போது எப்படி இந்த உறுப்புக்கள் அசைகின்றன என்பதை அவதானியுங்கள். இப்படியே உலகத்தில் எத்தனை மொழிகள் உள்ளனவோ அத்தனைவித சப்தங்கள் ஒலிகள் ஏற்படும். தண்ணீரில் எந்தவித மாற்றமும் இல்லை. உதாரணமாக ஒரு ஹார்மோனியம் வாசிப்பவர் ஒரு சுருதியை ஏற்படுத்திக் கொண்டு வெவ்வேறு கட்டைகளை அழுத்துவதன் மூலம் நல்ல இசையை எழுப்புகின்றனர். இது போலத் தான் உலகமொழி அத்தனைக்கும் மூலாதாரமாக உள்ளது இந்த ஓம்காரமே.

அடுத்ததாக இந்த அ+உ+ம் என்ற சப்தங்களை விழிப்புநிலை, கனவுநிலை, ஆழ்ந்த உறக்கநிலை என்று எமது 3 நிலைகளையும் ஒப்பிட்டுள்ளார்கள் எமது ஆத்ம விஞ்ஞானிகளான முனிவர்கள், ரிஷிகள் ‘அ’ என்பது விழிப்பு நிலை. இதில் எமது 24 தத்துவங்களும் தொழிற் படுவதால் எமது நாளாந்த வேலைகளை செய்கிறோம். அடுத்து படுக்கைக்கு செல்கிறோம். உடம்பு அசதியால் தூங்கி விடுகிறது. ஆனால் மிகவேகமாக தொழிற்படும் மனம் உடனே உறங்காது. வேகமாக செயற்படும் வாகனத்தை உடனே நிறுத்தி விட முடியாது. சிறிது தூரம் ஓடித்தான் அது நிற்கும். அதுபோலத்தான் உடம்பு தூங்கி விட்டாலும் மனம் சிறிது நேரம் தொழிற் படும். இதுவே கனவு நிலை என்பது. இங்கு எமது ஐந்து புலன்களும் தூங்கி



# அன்புக் கட்டளையை நிறைவேற்றுவோம்

வாருங்கள் வாருங்கள் அன்னையின் அன்புக் கட்டளை
பெருமையாய் அகிலமெல்லாம் பரப்பிடுவோம் வாருங்கள்
மக்கள் சேவை மகத்தான மகேசன் சேவையென்பார்
மதிவதனர் ஆற்றிய அறிவுரையை கேளுங்கள்
சேவையால் பெறும் இன்பம் இறைவனின் வரப்பிரசாதம் – அது
மேலான நிம்மதி தரும் நிலையான சக்தி
அன்புடனே ஆற்றுவோம் தூய சேவைதனை
இன்பமாம் ஆனந்தம் பெற்று மகிழ்ந்திடுவோம்
இருளில் கண் பார்வை இழந்து நொந்து வாழ்பவர்
ஒளிபெற்று மறுவாழ்வு வளமாய் வாழ்ந்திட
வாய் பேசி நெஞ்சம் திறந்து நிம்மதி பெற
கரங்கள் வலிமையிழந்து கவலையுறுவோர்
நிரந்தரமாய் வழங்கிடவே முடங்கிய கால்கள்
முன் வைத்து நடந்திட கரம் நீட்டி மகிழ்ந்திடுவோம்
மனமுடைந்து கண்ணீரும் கம்பலையுமாய் கலங்குபவர்
இனங்கண்டு இடுக்கண் தீர்க்க ஆவல் கொள்வோம்
மகேஸ்வர பூசை மனநிறைவாய் ஆற்றி
தகுதியுடையோரை சேர்த்து பகிர்ந்து உணவு அருந்திடுவோம்
சாயி சேவையில் தயங்காமல் இணைந்திடுங்கள்
சாயி சேவா வங்கியில் தயங்காமல் சேமிப்பை ஆரம்பியுங்கள்

தொகுப்பு:
சத்யா கந்தவனம்
தெகிவளை

நீங்கள் பஜனையில் பெறும் மகிழ்ச்சி தற்காலிகமானது.
சேவையில் நிலையான ஆனந்தம் பெற்று மகிழ்வீர்கள்.
– பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடும். இப்புலன்களின் தலைவராகிய மனம் மட்டும் வேலை செய்து பல்வேறு அனுபவங்களைப் பெறும். வெளிநாடு உறவினர்களுடன் கதைக்கலாம், உணவு உட் கொள்ளலாம். விரும்பிய இடங்களுக்கு செல்லலாம் இப்படி கனவு அனுபவங்கள் எத்தனையோ. ஆனால் அவற்றில் உடம்பு ஈடுபடுவதில்லை. மனம் மட்டும் ஈடுபட்டு தனது அனுபவங்களை அடுத்த நாள் தூங்கி எழுந்ததும் விபரிக்கிறது. இதனை "உ" என்ற எழுத்து குறிக்கிறது. அடுத்து "ம்" என்ற எழுத்து ஆழ்ந்த உறக்கத்தைக் குறிக்கிறது.

இதற்கு அப்பால் ஓம்காரத்திற்கும் மற்ற ஓம்காரத்திற்கும் இடையே உள்ள நேரம் மிக முக்கியமான நேரம் இதனை "துரியம்" என்று அழைக்கப்படும். துரிய நிலையில் , விழிப்பு நிலை (உடம்பு) கனவு நிலை(மனம்) ஆகிய ஒடுங்கி ஆழ்ந்த உறக்க நிலை (ஆத்ம நிலை) இதற்கு அப்பால் வரும் துரிய நிலையின் போது உடம்பு, மனம் ஆகியன ஒடுங்கி ஆத்ம நிலையில் இருக்கும் போது உள்நோக்கி அவதானித்தால் ஏதோ ஒன்று எம்மை உற்று நோக்கியவாறு இருப்பதை உணரலாம். இதுவே ஆத்மா. எமது ஆத்மாவை நாமே தரிசிக்கலாம். இது மிகவும் குறுகிய காலம். ஒரு விநாடியோ இரண்டு விநாடி மட்டுமே கிடைக்கும். இந்த நேரத்துள் எம்மை உள்நோக்கிப் பார்த்து இதனை உணரப் பழக வேண்டும். ம் ம் ம்.... என்பதன் போது நுரையீரலில் உள்ள காற்று முழுவதையும் வெளியேற்றிய பின் புதிய காற்றை மீண்டும் உள் இழுக்காமல் சிறிது நேரம் இருக்க முடியுமானால் சிறிது நேரம் கூடுதலாக இந்த உணர்வை அனுபவிக்கலாம். இந்த துரிய நிலையை ஆத்ம உணர்வு நேரம் எனக் குறிப்பிடலாம்.

இன்னும்பல கருத்துக்களை ஓம்காரத்துள் நாம் உணரலாம். நேரம் போதாமையால் இத்துடன் நிறைவு செய்வதுடன் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் மேலும் விரிவாகப் பார்க்கலாம்.

எஸ்.ஆர்.சரவணபவன்.

## உயர் மன மாற்றத்திற்கான அளவு கோல்

நாம் பயணம் செய்யும் போது, எமது பயணத்தில் எவ்வளவு தூரம் சென்று விட்டோமென்று வரைபடமூலம் கணிப்போம். இதே போல் எமது ஆன்மீகப் பயணமாகிய உன்னத மன மாற்றத்தில் எமது நிலையை மதிப்பிட வேண்டும். ஆன்மீகப் பயணத்தில் குருவைப் பார்க்கிலும் குறியே மிகவும் முக்கிய மென்று பகவான் கூறியுள்ளார். "நான் நான் தான்" என்ற பேருணர்வையடைவதே எமது குறி யாகும்.

எமது நிலையைச் சுயமதிப்பீடு செய்ய வேண்டும். நித்திரைக்குப் போகுமுன் சுயமதிப்பீட்டுக் கையேடுகளில் குறிப்பிடலாம். இதற்கு ஓர் சுயமதிப்பீட்டு கைநூல் தயாரிக்கப்பட்டு விற்பனையில் இருக்கிறது.

நான் யாரென ஆத்ம விசாரணை செய்யும் போது பின்வரும் நிலையில் எங்கேயுள்ளேன். என்று ஆராய வேண்டும்.

1) நான் உடம்பல்ல - எனது அபிப்பிராயம்
2) நான் மனமனல்ல - ஏனையவர் அபிப்பிராயம்
3) நான் ஆத்மாவே - நித்தியமான நிலை

நான் முகக் கண்ணாடியில் பார்க்கும் போது எமது உடம்பைக் காணமுடியாதிருந்தால் மிகவும் நன்று. மேலும் எனது படத்தை மேசையில் வைத்து நான் இந்த உடம்பல்ல என்பதில் தெளிவு இருக்க வேண்டும். நான் என்ற வார்த்தையை தவிர்க்கப் பழக வேண்டும்.

ஏனையோர் எம்மில் இருக்கும் குறைகளை இலேசாகக் கண்டுபிடித்து விடுவார்கள். அவர்கள் சொல்லச் சொல்ல அதை மனதில் பதித்து குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

நான் ஆத்மாவே என்ற பேருணர்வு எழ வேண்டும். ஆழ்ந்த சிந்தனை போல ஏதோ ஒரு விதத்தில் எம்மிலுள்ள சக்தி நிலையும் அளவு கோலாகலாம். எமது சக்தி நிலை கூடும் . இதற்கான சந்தர்ப்பங்களை விலக விடக் கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக எனது மரண வீட்டில் என்னைப் பற்றி என்ன சொல்ல வேண்டுமென்பதை எழுதி வைத்து விடவேண்டும். இந்த மரணச் செய்தியை ஆறு மாதத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்
டாக்டர்.இ.கணேசமூர்த்தி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்ச அன்பு

அல்பேட் ஜுன்ரைன் (Albert Instein) 14.03.1879 இல் பிறந்து 18.04.1955 இல் காலமானார். இவர் ஓர் மகா விஞ்ஞானி. இவர் வாழும் பொழுது 1400 கடிதங்கள் எழுதியுள்ளார். இக் கடிதங்களை அவவரது மகள் லிசேறி (Lieseri) ஹிப்று (உநடிசநற) பல்கலைக்கழகத்திற்கு 1980 இல் கையளித்துள்ளார். இக் கடிதங்களை தான் இறந்து 2-3 தசாப்தங்களின் பின்பே வெளியிடப் படலாம் என்று குறிப்பிட்டுள்ளார். அக்கடிதங்களுள் ஒன்று "பிரபஞ்ச அன்பு" என்பதைப் பற்றி மகளுக்கு எழுதியுள்ளது. அதன் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.



"நான் சார்பியல் கோட்பாட்டை" (Theory of Relativity) முன் வைத்த போது மிகச் சிலரே விளங்கிக் கொண்டார்கள். நான் இப்போது வெளியிடப் போகும் இன்னொரு உண்மையும் பலரின் பாரபட்சத்தாலும், விளங்காத் தன்மையாலும் ஏற்கப்படாமல் போகலாம். ஆகவே நான் இறந்த பின்பு பல தசாப்தங்கள் சென்றாலும் மனிதவர்க்கம் ஏற்கக்கூடிய மனப்பாங்கை அடைந்தவுடன் இக் கடிதத்தை வெளியிடலாம்.

விஞ்ஞானத்தினால் அறிய முடியாத மகாபெரும் சக்தி இருக்கிறது. இச் சக்தி ஏனைய சக்திகள் அனைத் தையும் உள்ளடக்கியுள்ளது. பிரபஞ்சத்தி லுள்ள சகல இயக்கங்கங்களை இயக்கும் சக்தியாயுள்ளது. இதுவே சகலதிற்கும் ஆதார மாயுள்ளது. இச் சக்தியை விஞ்ஞானிகளான நாம் இனம் காண வில்லை. இப் பிரபஞ்ச சக்தியானது வேறொன்றுமில்லை. அன்பு தான் இச் சக்தி. விஞ்ஞானிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கும் ஒரு கோட்பாட்டை (Theory of Everything) முன் வைக்க எத்தனித்த போது இம் மகா சக்தியை மறந்து விட்டார்கள். இம் மகாசக்தி ஒளிமயமானது. இச் சக்தியைப் பகிர்வோருக்கு ஞானம் ஏற்படுகின்றது. இது புவியீர்ப்புச் சக்தியைப் போன்று மற்றவர்களை ஈர்க்கின்றது. இது இருக்கும் சகல சக்திகளையும் பன்மடங்காகப் பெருக்கக் கூடியது. தன்னல எழுச்சியால் மனித வர்க்கம் அழியாது பாதுகாக்கின்றது. இதற்கு மேலும் பல விளக்கங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் உள்ளது. இச் சக்தியான அன்புதான் கடவுள். கடவுளே அன்பு தான்.


இச் சக்தி அனைத்தையும் விளங்க வைத்ததுடன் வாழ்வுக்கு ஓர் அர்த்தத்தையும் கொடுக்கிறது. இதன் வியாபகத் தன்மையை நாம் அறியாமல் விட்டு விட்டோம். ஏனென்றால் எமக்குள் ஒரு பயம் இருந்திருக்கலாம். இச் சக்தியை நாம் எமது கட்டுப்பாட்டில் வைக்க முடியாதென்பதே அப்பயமாயிருக்கலாம்.

இதற்கு ஓர் விளக்கத்தைக் கொடுக்க நான் முன் வைத்த சமன்பாட்டில் (E=MC2) இவ்வுலகத்தைச் சீர் திருத்தும் சக்தியை ஒளியின் வேகத்தால் பெருக்கினால் அது வரையறை அற்ற முடிவைத் தரும். ஆகவே இது ஒரு மகா சக்தியாகும்.

எமக்கு எதிராக அழிவை உண்டாக்கும் சக்தியை விஞ்ஞானிகளால் நன்மைக்கும் பயன்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியவில்லையாதலால் நாம் எமது கவனத்தை வேறொரு சக்தி மேல் திருப்ப வேண்டும். மனித வர்க்கம் வாழ வேண்டுமெனில், சகல ஜீவராசிகளையும் உலகையும் காப்பாற்ற வேண்டுமெனில் நாம் இச்சக்தியை விருத்தி செய்ய வேண்டும். இது எம்மில் இருக்கும் வெறுப்புணர்வு, பேராசை, தன்னலம் ஆகியவற்றை தவிடு பொடியாக்கிவிடும். அணுகுண்டைப் போல அன்புக் குண்டொன்றை எம்மால் தயாரிக்க முடியாவிட்டாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு வருக்குள்ளும் இருக்கும் இச் சக்தியை ஆற்றல் உள்ளதாகப் பெருக்க முடியும். இச் சக்தி தன்னை வெளிப்படுத்த எப்போதும் ஆயத்தமாயுள்ளது.

அன்பான லிசேறி மகளே!
நாம் அன்பை மற்றவர்களுடன் பகிரப் பழகிக் கொண்டால் அன்புக்கும் அடைக்கும் தாழில்லையென்பதை உறுதி செய்ய முடியும். இது எல்லாவற்றிற்கும் அப்பாலுள்ளது. இது உயிரின் சாரமேயாகும். எனது இதயத்தில் துடித்துக் கொண்டிருந்த அன்புச் சக்தியை உனக்கு வெளிப்படுத்தாததையிட்டு வருந்து கின்றேன். மன்னிப்புக் கோரவும் காலம் போய் விட்டது. காலமோ சார்புடை யாதலால் இப்போது வெளிப்படுத்து கின்றேன்.

"நான் உம்மை இதய பூர்வமாக நேசிக்கிறேன்.இந்தக் கடைசி உண்மை யான அன்புச் சக்தியை நான் அடைவதற்கு நீ உதவியுள்ளாய். இதற்காகவும் நான் நன்றி கூறுகிறேன்"
உமது தந்தை அல்பேட் ஜுன்ஸ்டீன்.

"அன்பே சிவம்" - திருமூலர்


"அன்பு ஈனும் ஆர்வம் உடமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" (குறள்: 74)

அன்புதான் மனித சமுதாயத்தின் அடிப்படை

நாளை அன்புடன் தொடங்கு
நாளை அன்பினால் நிரப்பு
நாளை அன்புடன் செலவழி
நாளை அன்புடன் நிறைவு செய்
இதுவே கடவுளை அடையும் வழி
- சத்திய சாயி பாபா

"சமயம் இல்லாத விஞ்ஞானம் நொண்டி
விஞ்ஞானம் இல்லாத சமயம் குருடு"
- அல்பேட் ஜுன்ஸ்டீன்

பிரமாண்ட நாயகா கலண்டர் - 2016



4 பக்க வர்ணக் கலண்டர்கள்
தற்போது பெற்றுக்கொள்ளலாம்
50/-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்**

கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +94 21 225 5086
E mail - saischoolmail@yahoo.com



**சாயி சிறுவர் இல்லம் - கூமாங்குளம் - வவுனியா**

நாட்டில் அனாதரவான சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இச் சிறுவர் இல்லம் மிகவும் சிறப்பாக கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.


தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@srisailanka.org





**புற்றுநோயாளர் காப்பகம் - ஹன்வல, மகரகம**

வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் புற்றுநோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப்படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 715 678 332
E mail - info@srisailanka.org
Web: www.srisailanka.org



**சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு**
**(உத்தேச கட்டிட மாதிரி)**



இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டுள்ளது. கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 4 கோடி ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இச் சேவைப்பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 0094 112687014,
0094 777316935
E mail - info@srisailanka.org
website: www.srisailanka.org

## தேசிய சேவைத் திட்டங்கள்

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# காரைதீவில் அற்புதங்கள்


பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆராதனா மஹோற்சவத்தை கொண்டாடுவதற்காக தயாராராகிக் கொண்டிருந்த வேளை 19.4.2015 ஆம் திகதி காரைதீவு சத்திய சாயி நிலையத்தில் முதல் முறையாக சுவாமியின் திருவுருவப் படத்தால் விபூதி வரத் தொடங்கியது அன்று பாலவிகாஸ் வகுப்புக்கள் இடம் பெறுவதற்கு முன்பதாகப் பாலவிகாஸ் மாணவர்கள் பூசை ஒழுங்குகளை மேற் கொண்டு இருந்த வேளையில் இவ் அற்புத நிகழ்வு இடம் பெற்றது. சுவாமி பாலவிகாஸ் மாணவர்களை மையமாகக் கொண்டு, இவ் அற்புதத்தை தொடர்ச்சியாக நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

இவ்வாறு விபூதி வந்து கொண்டிருந்த வேளையில் அதே படத்தினால் குங்குமமும் வரத் தொடங்கியது. இவ்வாறு ஒரு படத்தினால் மட்டும் விபூதி வந்து கொண்டிருந்த சமயம் 19.8.2015 திகதியன்று சுவாமியின் இரத ஊர்வலத்தில் கொண்டு செல்லும் படத்தில் விபூதி வந்ததும், 22.8.2015 திகதி பிறிதொரு மஞ்சள் அங்கி அணிந்த படத்தினாலும் பீடத்தில் வைக்கப்பட்டுள்ள பிரதான படத்தினாலும் குங்குமமும், விபூதியும் வரத் தொடங்கியது. அத்துடன் சுவாமிக்குப் போடப்பட்ட ஆசனத்திலும் விபூதி வரத் தொடங்கியது.

23.8.2015 திகதி மீண்டும் பாலவிகாஸ் வகுப்பு ஆரம்பமாகவிருந்த வேளையில் மாணவர்கள் மண்டபத்திற்கு வெளிப்புறத்தில் நின்று கொண்டிருந்த வேளையில் அவர்களின் கால், கைகளில் விபூதி பூக்கத் தொடங்கியது. இதனைக் கண்டு அஞ்சி மாணவர்கள் கை, கால்களை நீரினால் கழுவி விட்டு மீண்டும் வந்தபோது மீண்டும் மீண்டும் விபூதி பூக்கத் தொடங்கியது. குறும்பு நிரம்பிய மாணவர்கள் கிசோர் எனும் மாணவனை மண்டபத்தினுள் அனுப்பித் தியானம் இருக்கும்படி கூறிவிட்டு ஏனைய மாணவர்கள் வெளியே நின்ற சமயம் எவரும் அடிக்காமல் மணி ஓசை கேட்டது. அப்போது தியானத்தில் இருந்த கிசோர் சுவாமியின் ஆசனத்தைப் பார்த்த போது சுவாமியின் அழகிய பாதங்கள் கண்களில் தெரிந்தது. மீண்டும் கண்களை மூடிக் கொண்ட மாணவனுடைய தலையில் ஏதோ ஊர்வது போன்ற உணர்வு ஏற்பட்ட போது தலையில் கை வைத்துப் பார்த்ததும் தலையில் விபூதி காணப்பட்டும் சுவாமி தனக்கு முன்னால் நின்று தரிசனம் வழங்கியும் ஆசீர்வதித்ததோடு சுவாமி நின்றதற்குரிய அடையாளமாக சுவாமியின் இரு பாதங்களும் விபூதியில் பதிந்து காணப்பட்டன. இதனைத் தொடர்ந்து சுவாமி ஆசனத்தில் அமர்ந்து காட்சியளித்துத் தரிசனம் வழங்கினார்.

24.8.2015 திகதி திங்கட்கிழமை வழமைபோன்று மாணவர்கள் சாயி நிலையத்திற்கு சமூகமளித்து சுவாமியின் பூஜைப் பணிகளைச் செய்து விட்டுத் தங்களது பிரத்தியேக வகுப்பிற்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றார்கள். அங்கு பிரத்தியேக வகுப்பு இடம்பெறாத காரணத்தால் மாணவர்கள் மீண்டும் சாயி நிலையத்திற்கு சமூகமளித்தனர். அப்போது நேரம் காலை 9.45 மணி.

அச்சமயம் மாணவர்கள் கண்ட காட்சியோ அதிசயிக்கத்



தக்கதும் அற்புதமுமான நிகழ்வாக சுவாமி மண்டபத்தினுள் இறங்கி வந்து கொண்டிருந்தார். அப்போது மாணவர்கள் சுவாமியின் அருகாமையில் சென்று சுவாமியின் கால்களை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டனர். அப்போது சுவாமி எல்லோருக்கும் பாத நமஸ்காரம் வழங்கி, தலையில் கை வைத்து ஆசீர்வாதம் வழங்கினார். சுவாமி தலையில் கை வைக்கும் போது சுவாமியின் கை கனமாக இருந்ததோடு குளிர்ச்சியாகவும் இருந்ததாக மாணவர்கள் கூறினார். அதன் பிற்பாடு மாணவர்கள் அறிந்திராத பாஷையினால் சுவாமி உரையாடியதாகவும், இறுதியாக "தாதாவஸ்து" என்கின்ற ஒரு சொல்லைக் கூறியதாகவும் இச் சொல் மட்டுமே தமக்கு ஞாபகத்தில் இருப்பதாகவும் மாணவர்கள் கூறியதோடு இதன் பிற்பாடு சுவாமி அனைவருக்கும் நிழலாகக் காட்சியளித்ததோடு மாணவர்களுக்கு மட்டுமே தமக்கு ஞாபகத்தில் இருப்பதாகவும் மாணவர்கள் கூறியதோடு இதன் பிற்பாடு சுவாமி அனைவருக்கும் நிழலாகக் காட்சியளித்ததோடு மாணவர்களுக்கு மட்டும் பல்வேறு வடிவங்களில் அதாவது புல்லாங்குழல் கொண்டு கிருஷ்ணராகவும், தண்டாயுதம் கொண்டு விஷ்ணுவாகவும், சிங்கத்தின் மேல் சக்தியாகவும், ஆதிஷேடன் மீது பள்ளி கொண்டும் காட்சியளித்ததோடு பல நாமங்களையும் உருவங்களையும் சுவாமி வெளிக்காட்டினார். இவ்வாறு நிகழ்வுகள் பலவாறும் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது ஊர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அறிந்து பல திசைகளிலிருந்தும் பலரும் வந்து கூடினார். இந் நிகழ்வு களைக் கண்டு தரிசித்தனர்.

இவ் அற்புதங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த சமயம் 26.8.2015 திகதி மாலை விசேட பஜனை இடம் பெற்று முடிந்த பிற்போடு மாணவர்கள் ஓடோடி வந்து சுவாமி களைப்பாக இருக்கின்றார். சாமரை வீசும்படி சுவாமி கூறுகிறார் என்று கூறினார்கள். இவ்வாறு கூறியதும் எமது சாயி நிலையத்திற்குச் சொந்தமான சாமரை எடுத்துக் கொடுத்த போது அதில் தூசு இருப்பதாகவும் அது தமக்கு வேண்டாம் என்றும் சுவாமி கூறியதாகவும், தமக்கு இப்போது சாமரை வீச வேண்டும் இல்லாவிட்டால் தாம் இவ்விடத்தை விட்டுப் போய் விடுவ தாகவும் சுவாமி கூறுகிறார் என்று மாணவர்கள் கூறக் காரைதீவு காரையடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து சாமரை யைப் பெற்று வீசிய போது அதில் உள்ளடக்கப்பட்டிருந்த கவரி போதாதென சுவாமி முகம் சுளித்ததாகவும், தனக்குக் கவரி கூடிய சாமரை வீசும்படி சுவாமி கூற ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து சாமரை கொண்டு வரப்பட்டுச் சாமரை வீசப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மீண்டும் சுவாமி சாயி நிலையத்தில் நிற்பவர்களை வீடுகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும், வெளியில் உள்ள சாயி அங்கத்தவர்கள், ஏனைய சாயி நிலையத் தலைவர், செயலாளர், அங்கத்தவர்களையும் அழை க்கும்படியும் இன்று இரவு அகண்ட பஜனை இடம்பெற வேண்டும் என்றும் நள்ளிரவு 12.00 மணிக்கு "லிங்கம், கிருஷ்ணர், சீரடி" ஆகிய சிலைகளுக்கு அபிஷேகம் இடம்பெற வேண்டும் அத்தோடு புள்ளிக் கோலம் போடும் படியும் சுவாமி கூறியதாக மாணவர்கள் கூறினார். எல்லோரும் யாரைக் கொண்டு கோலம் போடலாம் என சிந்தித்துக் கொண்டிருந்த வேளை சுவாமி செல்வி ரவீந்திரன் மிதுரேகா அவர்கள் பாலவி காஷ் கற்ற போது அங்கு சொல்லிக் கொடுத்ததாகவும் அவருக்கு அது



தெரியும் எனவே அவரைக் கொண்டு செய்விக்கும்படியும் கூறினார்.

உடனடியாக ஆலயத்திற்குச் சொந்தமான தீபங்கள் அனைத்தும் கொண்டுவரப்பட வேண்டுமென சுவாமி கூறியதாக மாணவர்கள் கூறினார். அத்துடன் அபிஷேகம் முடிவுற்றதன் பிற்பாடு 108 அஷ்டோத்திரம் சொல்லப்பட வேண்டும். 108 அஷ்டோத்திரம் சொல்லும் போது குங்குமம் அர்ச்சனையும் போடப்பட வேண்டும் என்றும் சுவாமி கூறிக்கொண்டு இருப்பதாகவும் அஷ்டோத்திரம் சொல்லும் போது 3 மாதுளம் பழத்திலுள்ள முத்துக்களைக் கொண்டு அர்ச்சிக்கும்படியும் சுவாமி கூறுகின்றார் என மாணவர்கள் கூறினர். இவ்வாறு நிகழ்வுகள் அனைத்தும் மிகத் துரித வேளையில் இடம் பெற்றுக் கொண்டிருந்த சமயம் சுவாமியினால் சொல்லப்பட்ட அனைத்து விடயங்களையும் செய்து முடிப்பதனால் ஒரு சாதாரண விடயமாக இருந்தால் இவ்வாறான பொருட்களைத் தேடுவதில் நேரகாலம் தேவைப்படும் என்பது நிச்சயமாக மறுக்க முடியாத உண்மை. இவ்வாறு இருந்தும் அனைத்துப் பொருட்களும் சுவாமியின் எண்ணப்படியே துரித கதியில் வந்து சேர்ந்தது. அத்துடன் குங்குமமும் கிடைக்கப் பெற்றது.

குங்குமம் பற்றிக் கூறும் போது குங்குமம் தயாராக இருந்த போதும் சுவாமி மாணவர்கள் ஊடாக குங்கும அர்ச்சனையில் "வைலட்" குங்குமம் தான் குங்கும அர்ச்சனைக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் எனச் சுவாமி ஆணித்தரமாகக் கூறினார். எல்லாவற்றிற்கும் மேலாக நேரமோ இரவு 8.00 மணியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. ஆனால் அவ்வாறு இருந்தும் சுவாமியின் எண்ணப்படி கல்முனை நகரிலிருந்து வைலட் குங்குமம் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு சுவாமி கூறியபடி எண்ணியபடி அனைத்து விடயங்களும் அனைத்து நிகழ்வுகளும் இனிதே இடம்பெற்றது. இவ்வாறு சுவாமி கூறியபடி அதிகாலை 4.00 மணிக்கு 21 தடவை ஓம்காரம் சொல்லப்பட்டுச் சுப்ரபாதம் பாடப்பட்டு இந்நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

ஜெய் சாயிராம்


தொகுப்பு:
சாயி சகோதரன் துளசி
காரைதீவு
செப்டம்பர் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி அற்புதங்கள்



ஒளி மயமாகப் பிரகாசிக்கும் எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதாரவிந்தங்களை வணங்கிக் கொண்டு தொடர்ச்சியாக கண்டுகளிக்கும் பகவானின் அற்புதக்காட்சிகள், லீலைகள் சிலவற்றை கூறுகிறேன்.

சுவாமி அறையில் நான் வைத்து வணங்கும் பகவானின் படத்தின் நடுவில் ஒரு ஒளிவட்டம் எந்நேரமும் தோன்றியபடி இருக்கும். சுவாமியின் பக்தையாகிய எனக்கு இக்காட்சியைக் காட்டி பேரானந்தம் அடையச் செய்யும் கருணைக் கடவுள் "பக்தவத்சலன்" பர்த்தீசனை போற்றித் துதிக்கின்றேன்.


எல்லாப் படங்களுக்கும் பூ வைத்து வணங்கும் போது, அன்போடும் பக்தியோடும் வைக்கும் பூக்களை ஏற்று மாலையோடு காட்சி காட்டும்படி பிரார்த்திப்பேன். இந்த அடியாளின் இன்பான வேண்டுதலை ஏற்று பெரிய மாலையோடு சாயி கிருஷ்ணர் தோன்றுவார். நான் செய்த பாக்கியம் என நினைத்து நன்றி கூறித் துதிக்கின்றேன். சாயி சக்தியாகவும் பல வர்ண ஆடை அலங்காரங்களுடனும் காட்சி கொடுப்பதையும் தினமும் கண்டு களிக்கின்றேன்.

01.01.2015 வியாழக்கிழமை வருடம் பிறக்கும் நேரம் சுவாமியின் அற்புதக்காட்சி கிடைத்தது. இரவு 12.00 மணிக்கு குத்துவிளக்கு ஏற்றினேன். திரிச்சுடரிலிருந்து ஒளிக்கதிர் மேலெழுந்து போக, சாயி சக்தி அதிலிருந்து தோன்றி எனக்கு முன்னால் வந்து நின்று புன்சிரிப்போடு ஆசீர்வதித்த காட்சி மறக்க முடியாத சம்பவம். ஆனந்தக் கண்ணீர் சொரிய அப்படியே நின்று விட்டேன். பின்பு கதிரையில் இருந்தபடி கண்மூடிப் பிரார்த்திக்க, பகவான் சிரித்தபடி பிரகாசமாகத் தோன்றி வாயசைத்துக் கதைத்து பாதநமஸ்காரமும் தந்தருளினார்.

என்னை ஆட்கொண்டருளிய தெய்வத்தின் அன்பைக் கண்டு உள்ளம் உருகி கண்ணீர் சொரிய ஆனந்தமயமானேன்.

சாயி எல்லாத் தெய்வங்களும் ரூபமும் நிறைந்த ஒளி மயமான ஒரே தெய்வமானவர். சாயி விநாயகா, சாயி முருகா, என்று சொல்லி சகல தெய்வங்களையும் வணங்குவேன். எல்லா தெய்வீகக் காட்சிகளையும் காட்டி அன்புமழை பொழிகின்றார் பகவான். ஒரு நாள் தியானம் செய்யும் போது பாபா படத்தில் இருந்து பெண் மயில் தோன்றி சுவரின் மேல் முருகன் படத்திற்கு அருகில் வந்து நின்றது. விநாயகர் படத்திலிருந்து ஆண்மயில் வந்து அடுத்த பக்கம் தோகை விரித்தபடி நின்றது. சாயி முருகன் படத்திலிருந்து மேலெழுந்து சுவரில் நின்றார். இந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்து ஆனந்த பரவசமடைந்தேன். அதி அற்புத நிகழ்ச்சிகளைக் காட்டி கருணை புரிகின்றார் என் அன்பு இதயவாசி.

ஒருமுறை சாயிக்கண்ணன் மினுங்கல் கல் பதித்த வெண்ணிற மஞ்சள் கலந்த பச்சைநிற சேலை உடுத்து போர்த்துக் கொண்டு சக்திரூபமாக எனக்கு முன்னால் ஒரு வட்டமாகச் சுற்றி வந்து, என்னை திரும்பிபார்த்து அழகான புன்சிரிப்போடு கையசைத்து, வாயசைத்து ஏதோ சொல்லிக் கொண்டு சுவரில் மறைந் தருளினார். இதே போல் ஒரு சேலை வாங்கி உடுக்கும்படி கூறுகின்றார் என விளங்கிக் கொண்டேன். ஆனால் அதே போல் சேலை கிடைக்கவில்லை. வேறு கடை ஒன்றில் பார்க்கும் போது, அங்கேயும் காட்டிய முதல் மூன்று சேலை களையும் வேண்டாமென்று திருப்பிவிட நான்காவதாக ஒன்றை எடுத்து இதைப் பாருங்கோ என்று காட்டினார்கள். என்ன அதிசயம்! ஆச்சரியமாகவும் இருந்தது. சுவாமி காட்டிய அதே சேலையாகவே இருந்தது. மனதில் நன்றி கூறியபடி அவற்றை சந்தோசமாக வாங்கி வந்தேன். சுவாமி வழிபாடு செய்யும் போது கண்ணனின் அன்பின் வெளிப்பாடான அற்புத லீலையை நினைத்துப் போற்றித் துதித்து நன்றி கூறினேன். சாயி சக்தியும் தோன்றி ஆசீர்வதித்து பாதநமஸ்காரமும் தந்து இரட்சித்தருளினார். சூட்சும ரூபத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திலும் அன்புப் பரிசாக சேவை கிடைக்கச் செய்த மகிமையை எண்ணி நெஞ்சு நெகிழ்ந்து நிற்கின்றேன்.

நான் இனி பர்த்தி யாத்திரை செல்ல முடியாது. சுவாமியின் சமாதியில் தலை வைத்து வணங்கும் பாக்கியம் கிடைக்கவில்லையே என்று ஒருநாள் இரவு நினைத்தேன். மறுநாள் பகல் விளக் கேற்றிப் பிரார்த்திக்கும் போது, சமாதிப் படத்திலிருந்து பகவான் எழுந்தருளி நிலத்தில் ஒரு விபூதிக் குவியலில் சமாதியான நிலையில் இருந்தபடி மெல்ல மெல்ல அசைந்து வந்து எனது பாதத் திற்கு அருகில் நின்ற காட்சி மெய் சிலிர்க்க வைத்தது. உடனே எழுந்து அச் சமாதியில் தலை வைத்து உள்ளம் உருகி கண்ணீர் பெருக சுவாமியை வணங்கி நின்றேன். இந்த அடியாளின் விருப்பத்தை நிறைவேற்றிய கருணைக் கடவுளுக்கு எனது தூய அன்பு உள்ளத்தை அர்ப் பணித்து நன்றி தெரிவிக்கின்றேன்.

ஒருநாள் தியானம் செய்யும் போது சாயி சக்தி எனக்கு அருகில் வந்து, வலது பக்கத்திற்குச் சென்று பூவாக இதயத்தில் இருந்தகாட்சி அற்புதம் நிறைந்தது. பாபாவும் இதயத்தில் தோன்றி மறைந்து சென்று திரும்ப நெஞ்சோடு வந்து காட்சி கொடுக்கும் லீலை அளப் பெரியது.

3.4.2015 வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணியளவில் ஒரு கனவு கண்டேன். ஒரு குழந்தை வந்து எனக்கு அருகில் நின்று ஒரு கன்னத்தில் முத்தம் கொடுத்தது. இன்னொரு குழந்தை வந்து அடுத்த பக்கத்தில் முத்தம் கொடுத்தது. இருவரும் என்னை இறுக்கி அணைத்துக் கொள்ளவும் நான் விடுவிக்க முடியாத நிலையில் சக்கர மாகச் சுழன்றபடி கீழே போய்க் கொண் டிருக்கின்றேன். அப்போ திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். இது ஏதோ அதிசயமான கனவு என எண்ணிக் கொண்டேன். மறுநாள் காலை 6.30 மணிக்கு வழக்கம் போல் கண் மூடிப் பிரார்த்திக்கும் போது சக்கரம் சுழன்றபடி சாயி கிருஷ்ணர் மேலெழுந்து பாம்பு சுற்றிப் படமெடுக்கும் காட்சி கொடுத்தார். பின் சர்ப்பம் கீழிறங்கி ஊர்ந்து வந்து எனக்கு முன்னால் வளைந்து நாலைந்து சுற்றாக, எனது வலது பக்கத்தால் சுற்றி வந்து இடது பக்கத்துக் கையில் ஏறி பாம்பணை மேல் பள்ளி கொண்ட காட்சி காட்டப்பட்டது. இதனை காட்டுவதற்காக தான் முதல்நாள் கனவில் காட்டிய காட்சி அது என நினைத்துக் கொண்டேன்.

23.4.2015 வியாழக்கிழமை இரவு நித்திரையிலிருந்து தியானிக்கும் போது சீலிங் முற்றாக மறைந்து வெண்முகில் கூட்டம் நிறைந்த வானமாகத் தெரிந்தது, அதில் கிருஷ்ண அவதாரம் பத்தும் காட்டியருளினார். என் அன்புத் தெய்வம், கிருஷ்ண ஜெயந்தி தினத்திலும் எல்லாப் படங்களிலும் கிருஷ்ணராகவே புல்லாங்குழல் வாசித்தபடி தோற்றம் கொடுத்தார். கண்ணன் யசோதா அம்மாவிற்கு வாயைத் திறந்து தனது ரூபத்தைக் காட்டியதை எனக்கும் காட்டி ஆனந்தம் அடையச் செய்தார். சமித்தியிலும் வணங்கும் போது சாயி கிருஷ்ண ரூபத்திலே படத்திலிருந்து இறங்கி வந்து பாத நமஸ்காரமும் கொடுத்தார் அன்பே உருவான கருணாகரன்.

கண் மூடினாலும்சரி விழித்துக் கொண்டாலும் சரி கருட பகவான் தினமும் சுவரில் தோன்றி மறைவதைக் காண்கின்றேன். வரலஷ்மி பூஜை அன்று சுவாமி அறைச்சுவரில் சர்வ லக்ஷ்மியும் வரிசையாக தோன்றியதைப் பார்த்து மகிழ்ச்சியோடு போற்றித் துதித்தேன்.

ஒருநாள் எலும்பு நோவைத் தாங்க முடியவில்லை. கஷ்டமான நிலையில் சாயி நாமம் சொன்னபடி கண்ணீர் சொரிய அழுதபடி படுத்திருந்தேன். அப்போது சிவநடனக்காட்சியில் தோன்றிய பகவான் சர்ப்பத்தினால் ஒளியை அனுப்பி நோவைக் குறைத்து நித்திரை கொள்ளச் செய்து விட்டார். இவ்விதம் கருணை புரியும் சாயீசனை இதயத்தில் வைத்து பூசிக்கிறேன்.

தேகநிலை சரியில்லை, இன்று பஜனைக்குப் போவ தில்லையென்று நினைத்தால் சுவாமி முன்னால் பிரசன்னமாகி "நானிருக்கப்பயமேன்" போய் வா என்று கூறுவது போல் தெரியும். என்ன வருத்தமாக இருந்தாலும் வியாழக்கிழமை விஷேட தினம் மகளிர் பஜனை, இல்ல பஜனை எல்லாவற்றிற்கும் தவறாது போய் வருகிறேன். எல்லாம் அவர் சங்கல்ப்பத்தினால் நடைபெறு கின்றது. பகவான் பக்தர்களுக்கு அளிக்கும் லீலை மதிக்க முடியாத வெகுமதிதான். அவர் அடியார்களுக்கு பாரிஜாத மலர். சூட்சும ரூபத்திலும் அற்புதம் புரிந்து அன்புடன் பக்தர்களை அரவணைத்துக் கொள்கின்றார்.

ஜெய் சாயிராம்

திருமதி.பொன்மணி கனகசபை
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T.G.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் யாழ்ப்பாண விஜயம்

இவர் சாயி பகவானின் நெடுங்கால பக்தன். இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டு மாநிலத்தின் சத்திய சாயி நிறுவனத்தின் தலைவராகப் பலவருடங்கள் செயற்பட்டுள்ளார். அவர் கார்ச்சாரதியாக இருந்து சுவாமியைப் பலதடவைகள் சென்னைக்கு கூட்டி வந்துள்ளார். 1993 ஆம் ஆண்டு 6 மாதங்கள் வரை சுவாமியின் அறைக்குப் பாதுகாவலராகவும் தொண்டு செய்துள்ளார். பல உரைகள் சுவாமியின் முன்னிலையில் நிகழ்த்தியுள்ளார். சுவாமியைப் பற்றி பல நூல்களும் வெளியிட்டுள்ளார். அவர் ஒரு தொழிலதிபரு மாவார். இவர் 11.9.2015 மாலை பருத்தித்துறை சாயி மந்திரிலும், 12.9.2015 காலை சத்திய சாயி பாடசாலையிலும், மாலை யாழ்ப்பாண நிலையத்திலும், 13.9.2015 காலை மீண்டும் யாழ்ப்பாண நிலையத்திலும் சாயி பக்தர்களை சந்தித்தார்.

12.9.2015 திகதியன்று யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நிகழ்த்திய உரையின் சாராம்சம்

வடபிராந்திய சாயி நிறுவனங்களின் தலைவர் திரு.எஸ்.ஆர்.சரவணபவன் திரு.ரீ.ஜி.கிருஸ்ணமூர்த்தி அவர்களை அறிமுகம் செய்து வைக்கும் போது, சுவாமியுடன் அண்மையிலிருந்து நெருக்கமாகத் தொண்டாற்றியவர் திரு.ரி.ஜி.கிருஸ்ணமூர்த்தி அவர்கள். சுவாமியின் போதனையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுவாமி சத்திய சாயி நிறுவனத்தை ஸ்தாபித்ததன் நோக்கம், நாம் எவ்வாறு செயற்பட வேண்டும்? நிறுவன அமைப்பு என்பவற்றைப் பற்றி எமக்கு விளக்கவுள்ளார் அதற்கு முன்னர் இலங்கை சத்திய சாயி நிறுவனங்களின் தலைவர் வைத்திய கலாநிதி.வி.ஜெகநாதன் அவர்கள் சிறிது உரையாற்றுவார்.

டாக்டர்.ஜெகநாதன் அவர்கள் திரு.ரி.ஜி.கிருஸ்ணமூர்த்தி அவர்களை சுவாமியே அனுப்பியுள்ளார். அவர் பல வருடங்களுக்கு முன்பு முன்னாள் கௌரவ அமைச்சர் திரு.இராஜதுரையுடன் இலங்கைக்கு வந்துள்ளார். தற்போதய வருகையின் போதே யாழ்ப்பாணத்திற்கு முதல் வருகையாகும். கடந்த இரண்டு நாட்களாக அவருடன் கலந்துரையாட வாய்ப்புக் கிடைத்தது. அவரிடம் ஆழமான அறிவுண்டு சமஸ்கிருத சுலோகங்கள், இதிகாசங்கள் நன்றாக அறிந்தவர். சுவாமியிடமிருந்தே பல படிப்பினைகளைப் பெற்றவர். அவர் கூறப்போகும் ஒவ்வொரு வசனத்தையும் உன்னிப்பாக கேட்போம். அவரை வந்து உரையாற்றுமாறு சாயி பக்தர்கள் சார்பில் அன்புடன் அழைக்கின்றேன்.

## திரு. ரி. ஜி. கிருஸ்ணமூர்த்தி அவர்களின் உரை:

சாயிராம்! சாயிராம்!! சாயிராம்!!!

பக்தர்கள் எப்போதும் சுறுசுறுப்பாயிருக்க வேண்டும். சுவாமி சொன்ன வார்த்தை BE Alert, BE awake. Be aware ஐ கடைப்பிடிக்க வேண்டும். இருட்டில் அறியாமையில் இருந்த



என்னை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார்.

சாயி என்றால் என்ன அர்த்தம்? சா என்றால் சத்குணம். ஆயி என்றால் தாய். இதன் கருத்து சத்குணமுள்ள தாய் என்பதேயாகும். பாபா என்ற சொல் தந்தை என்பதைக் குறிப்பிடுகிறது. ஆன்மீகக் கூற்றுக்களுக்கு மறைமுகமான கருத்துக்களும் உண்டு. சாயி என்றால் மூன்று குணங்களுக்கப்பாலுள்ளவர் என்ற கருத்தும் உண்டு. இராமபிரான் போதனை ஒன்றும் செய்யவில்லை. யாராயினும் தர்மத்தைக் கடைப்பிடித்தால் ஆசீர்வாதம் அருளினார். கிருஸ்ணபிரான் பல லீலைகள் புரிந்தார். அத்துடன் போதனையும் செய்தார். தான் அவதாரம் என்றும் அறிவித்தார். சுவாமி தான் அவதாரம் என்று சொல்லியும், எங்களையும் சொல்ல வைத்தார். கலியுகத்தில் கடவுள் தான் கடவுளென்று சொல்ல வேண்டியுள்ளது. சந்தேகம் நிறைந்த காலம் கலியுகமாகும்.

சுவாமி 1964 ஆம் ஆண்டு பிரசாந்தி வித்வான் மகா சபையை ஸ்தாபித்தார். இவர்கள் மாதத்திற்கு ஒரு முறை கூடி சத்சங்கத்தில் ஈடுபடுவார்கள். 1967 ஆம் ஆண்டில் சத்திய சாயி சமித்தியை நிறுவினார். வியாழக்கிழமை களில் பஜன் பாடுவதும், 3 கிழமைக்கு ஒரு தடவை நகர சங்கீர்த்தனமும் நடந்தன. சமித்தி என்றால் சம (சமமானவர்கள்) இதி (சமமானதை விரும்புபவர்கள்) என்ற இரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களாலானது. உதாரணமாக கட்டிடங்கள் கட்டப்படும் இடங்களில், சீமெந்து மணல், கல்லு, நீர் எல்லா வற்றையும் சேர்த்துக் கலக்கும் மெசின் உண்டு. அதனில் வெளிவருவது கொங்கிரீட் என்று சொல்லுவோம். கல், மணல், சீமெந்து என்ற வேறுபாடு மறைந்து விடுகிறது. இதே போல பல விதமான மக்கள் சமித்திக்கு வந்ததும் வேறுபாடுகள் மறைந்து "சாயி அடியார்கள்" என்று சொல்லிக் கொள்வார்கள். கொங்கிரீட் கொண்டு தூண்கள் கட்டப்படும் இத்தூண்கள் கடினமாவதற்கு 21 நாட்கள் நீர் ஊற்ற வேண்டும். இதே போல சமித்தியில் முரண்பாடுகளினால் சூடேறாமல் அன்பு என்ற நீர் எப்போதும் ஊற்ற வேண்டும். எல்லோரும் ஒருவரை ஒருவர் "சாயிராம்" என்று சொல்லி அன்பைத் தெரிவிக்க வேண்டும்.

நிறுவனத்தில் தரப்படும் பதவி பொறுப்பெடுப்பதற்காகவே அன்றி அதிகார பிரயோகத்திற்காகவல்ல. பொறுப்புடன் பதவியிலிருக்கும் போது சோதனைகள் வரும். ஒருவர் முரண்பாட்டிற்கு வந்தால் அவரைத் திட்டினால் பரீட்சையில் தோல்விதான். வேறுபாடோ முரண்பாடோ இருக்கக் கூடாது. தலைவர் சொன்னபடி செய்ய வேண்டும். குறைகள் இருந்தால், அல்லது தீர்மானம் பிழையென்றால் வெறுப்பில்லாது பணிவுடனும் அன்புடனும் சொல்ல வேண்டும். அதற்கும் செவி சாய்க்காவிடில் சுவாமியிடம் பிரார்த்திக்க வேண்டும். கெட்ட புத்தியென்பது கறையான் மாதிரி, மரத்தையே அழித்து விடும். இதை உடனே அகற்றிவிட வேண்டும். எல்லோரும் தப்புச் செய்யலாம். தப்புச் செய்யாத மனிதரேயில்லை. ஆகையினால் தப்புக்களை குற்றங்களை பெரிதாக்கக் கூடாது. நாம் நிறுவனத்தில் சேர்ந்தது தரவுகளுக்காக மட்டுமல்ல. உன்னத மாற்றத்திற்கேயாகும். எங்களைப் பாதுகாக்க சுவாமிக்குத் தெரியும். நாங்கள் பொறுமையாக மௌனமாக வந்து அப்படியே போக வேண்டும். மாலைகள் போடுவிப்பதும், பிரபல்யப் படுத்தவும் வேண்டாம். சுவாமி தான் எமது தலைவர். இந்த சந்தர்ப்பத்தை விட்டால் மறுபடியும் பிறக்க நேரிடும்.

எமது அகந்தையை அழிப்பதற்காகவே சுவாமி சேவையை முன் வைத்தார். பிரசாந்தி நிலையத்தில் பெரிய உத்தியோகத்தர்கள் சேவாதாள்களாகச் சேவை செய்கிறார்கள். இதில் மகாராஷ்டிரா மாநில முதலமைச்சரும் அடங்குவார்.


சுவாமி பாலிவிகாஷ் என்ற கல்வியையும் நிறுவினார். பாலவிகாஷ் என்றால் பிள்ளைகளின் மலர்ச்சி என்பதாகும். அதாவது உள்ளத்தை விரிவடையச் செய்தல். விதை முளைத்து வளரும் போது அதை நேராக வளரவிட வேண்டும். பாதுகாக்க வேண்டும். இதே மாதிரி பாலகர்கள் நேராக வளர வேண்டும். இதைச் செய்வது பெரியோர்களின் கடமை. வளர்ந்தபின்பு பூச்சிகள் தாக்கத் தொடங்கி விடும். இது விடத்தல் பருவத்தில் வெளிப்படும். இதற்கு எதிராகத்தான் கிராம சேவையை சுவாமி பாலவிகாஷ் மூன்றாம் பிரிவில் சேர்த்துள்ளார். சேவாதாள்களாகப் பணிபுரிய வேண்டும். இல்லாதவனுக்குத் தொண்டு செய்தல் சிறு செடி வளர்ந்து பெரிய மரமாகிறது மரணமானதிற்குப் பின் அது சகலருக்கும் உதவுகிறது. 1969 ஆம் ஆண்டு பூரணச்சந்திரா மண்டபம் கட்டப்பட்டது. அப்போது பக்தர்கள் கல்லைத் தூக்கி வந்து கட்டப்படும் பகுதியில் போடுவார்கள். நானும் இச்சேவையிலீடுபட்டேன். இரண்டு கற்களை தலைமேல் வைத்துத் தூக்கி வரும் பொழுது காலில் முள் ஒன்று குத்தி விட்டது. கல்லைக் கீழே போட முடியவில்லை. ஏனென்றால் சுவாமி முன்னின்றார். அவர் போகவுமில்லை. என்னால் முள் எடுக்கவும் முடியவில்லை. சுவாமியும் இன்னொருவரும் கிட்ட வந்து என்னைப் பிடித்தார்கள். சுவாமி குனிந்து முள்ளை இழுத்தெடுத்தார். நான் சேவையைத் தொடர்ந்து செய்தேன். உள்ளத்தோடு சேவை செய்யும் பொழுது கஷ்டம் வந்தால் சுவாமியே உதவி செய்வார்.

நான் முல்லைத்தீவிற்கு போயிருந்தேன். அங்கேயுள்ள அனாதை இல்லத்திற்கு சென்றிருந்தேன். 8 வயதுள்ள குழந்தையிடம் தாயின் பெயர் என்ன என்று கேட்டேன். சாயி மாதா என்று பதிலளித்தாள். ஒரு சிறுவனிடம் தந்தையின் பெயர் என்னவென்று கேட்ட போது அவன் சாயி பாபா என்று சொன்னான். அப்போது தான் சுவாமியின் மகிமையை உணர்ந்தேன். கடவுள் மீது பயபக்தி இருக்க வேண்டும். அப்போது அறிவு வரும். பின்பு ஞானம் மிளிரும். புத்தம் புது வடிவமைப்புகளில் ஈடுகொள்ளாது, தூய்மையாக துப்பரவாக இருக்க வேண்டும். வாய்ப்புக்கிடைத்த போதெல்லாம் சேவை செய்ய வேண்டும். இன்று உலகிலுள்ள 185 நாடுகளில் சத்திய சாயி நிலையங்கள் உள்ளன. சுவாமி சில சமயங்களில் தனது விரலை சுற்றிக் காட்டுவார். எமது மனதின் அலையும் நிலையையே அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

சுவாமி தொலைவிலுள்ள நாடுகளில் பிரசன்னமாகி வழிநடத்தியுள்ளார். ஒரு முறை துருக்கி நாட்டிலிருந்து 400 பக்தர்கள் பிரசாந்தி நிலையத்திற்கு வந்து பஜன் பாடி ஆடி மகிழ்ந்தார்கள். இப்போது வாரம் ஒரு முறை மாநிலங்களிலிருந்து பக்தர்கள் வந்து நிகழ்வுகள் நடாத்துகிறார்கள். "எங்கெல்லாம் எனது புகழைப் பாடுகிறார்களோ அங்கெல்லாம் நான் பிரசன்னமாவேன்" என்று சுவாமி கூறியுள்ளார். இதனால் தான் நாம் வழிபாட்டு மேடையில் எப்போதும் ஒரு கதிரை வைப்போம். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஜனை பாடும் போது சுவாமி தாளம் போடுவார். அதன் மூலம் நாம் பஜனைக்கு வருவதும் போவதுமாக இருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்கேயாகும்.

மனமும் செயலும் இசைவோடு சேர்ந்தால்தான் சேவை செய்யலாம். மனித ஜென்மம் அருமையானது. அது பட்டப்படிப்பின் கடைசி ஆண்டைப் போலவாகும். எமது கர்மங்களின் வினைப்படி சித்திரங்களை வரைவதைத்தான் சித்திரகுப்தனின் செயலென்று கூறுகிறோம். உண்மையில் நாம் தான் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறோம். நல்ல வருங்காலத்தை உருவாக்க வேண்டும். இதற்கு பாலவிகாஷ் முதற்படி நாம் பிறந்ததே இனிமேல் பிறவாதிருப்பதற்கேயாகும். "சுவாமியுடன் சேர வேண்டுமென்பதே" எமது இறுதி நோக்காக இருக்க வேண்டும். எமது நடத்தையைப் பார்த்து பலர் மாறுகிறார்கள். மனித ஜென்மம் தியாகத்திற்காகவே எடுக்கப்படுகிறது. இந்தத் தத்துவத்தையே ஆராத்தியும் வெளிப்படுத்துகிறது. ஆராத்தியில் "ஆ" என்பது இறைவனைக் குறிக்கிறது, "ரதி" என்பது பற்றை அன்பைக் குறிக்கிறது. வெளி ஜோதியான ஆத்மா உள்ளுறையும் பரம்ஜோதியைப் பார்க்கிறது என்பதும் ஓர் அர்த்தமாகும். இதனால்தான் வழிபாடு மண்டபத்திற்குள்ளே வந்த பிறகு நேரத்தைப் பார்க்கக்கூடாது. கடவுள் நிகழ்வை முடிக்கும் வரை பொறுமையுடன் இருக்க வேண்டும். நாம் மிருக குணத்தை விட்டு மனித குணத்துடன் வாழ்ந்து தெய்வமாக மாற வேண்டும். மனிதனும் தெய்வமாகலாம். "நானும் கடவுள், நீயும் கடவுள் இது எனக்குத் தெரியும் ஆனால் உனக்குத் தெரியாது" என்று சுவாமி அடிக்கடி கூறுவார்.

கிருஸ்ண பரமாத்மா 16000 கோபியர்களுடன் நடனம் ஆடினார் என்பதன் விளக்கம் என்ன? எமது மனதிற்கு 1000 சுவிச்சுகள் உண்டு. ஒவ்வொரு சுவிச்சுக்கும் 16 தொழில்கள் உள்ளன. இதையே 16000 குறிக்கிறது. தென் அமெரிக்காவிலுள்ள கம்யூனிஸ்ட் நாடான வெனிசுலாவிலிருந்து பக்தர்கள் கூட்டம் பிரசாந்தி நிலையத்திற்கு வந்தார்கள். சுவாமியின் செயற்பாடுகளை நாம் விளங்க முடியாது.

நான் ஒருமுறை மத்திய கிழக்கு நாடான அபுதாபிக்கு சென்றிருந்தேன். அந்நாட்டு கல்வி அமைச்சரைச்சந்தித்தேன். என்னிடம் சாயி நிறுவன அடையாளச் சீட்டுத்தான் வைத்திருந்தேன். அதைக் கொடுத்தனுப்பியதும் என்னை உள்ளே வரவழைத்து நன்றாக உபசரித்தார். நான் அவரின் நாட்டின் சிறப்பைப் பற்றிச் சொன்னேன். முடிவில் கேட்டார் எப்படி சாயி பாபா? நான் அவரைச் சந்திக் கலாமா? நான் அதற்கான ஒழுங்குகள் செய்யலாமென்று கூறினேன். அவர் பிரசாந்தி நிலையத்தில் ஒரு இரவு தங்கி மறுநாள் காலை ஒரு மணித்தியாலம் சுவாமியுடன் பேசினார். சுவாமி பல மதங்களையும் இணைத்து அன்பு மதத்தையே போதிப்பது என்னைக் கவர்ந்தது என்று சொன்னார்.

"வெகுதூரத்திலிருந்து பக்தர்கள் வருகின்றார்கள், அருகிலிருப்பவர்கள் பலர் ஏன் வருவதில்லை என்று பகவானிடம் கேட்டேன்" அதற்கு அவர் "விளக்கின் ஒளி தூரத்தில்தான் பிரகாசிக்கும். அடியில் இருட்டாகத்தானிருக்கும்" என்று பதிலளித்தார்.

மனிதனுக்கும் மிருகத்திற்கு முள்ள வித்தியாசத்தை பகுப்பாய்வு செய்யும் ஆற்றலேயாகும். சுவாமியின் தரிசனத்தால் பக்தி உயரும். "இந் நிறுவனம் என்னால் நிறுவப்பட்டது. வருங்காலத்தில், ஒவ்வொரு கிராமத் திலும் எனது புகழ் பாடப்படும்" என்று பிரகடனம் செய்துள்ளார்.

பிரசாதம் என்றால் என்ன? "பிர" என்றால் நிலையானது. "சாத" என்றால் தடைகளில்லாதது. என்றும் ஒரு தடங்கலு மில்லாது இயங்குவது. இயங்க வைக்கும் தத்துவப் பொருள். சைவர்கள் விபூதியால் மூன்று குறி போடுவார்கள் ஏனெனில் மூன்று குணங்களுக்கப்பாலுள்ளதை இது குறிக்கும். வைஷ்ணவர்கள் நாமம் போடுவார்கள். இரண்டு வெளிக் கோடுகளும் ஆத்மா, பரமாத்மாவைக் குறிக்கிறது. நடுக்கோடு பற்றைக் குறிக்கிறது. பற்று அழிந்தால்தான் ஆத்மா பரமாத்மாவுடன் இணைய முடியுமென்பதே இதன் தத்துவம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உடம்பில் 9 வாசல்கள் உள்ளன. மரணத்தின் போது ஆவி எந்த வாசலால் போனதென்பதே அடுத்த ஜென்மத்தை நிர்ணயிக்கிறது. தலையின் உச்சத்தால் போனால் மறுபிறப்பிருக்காது என்பது நம்பிக்கை. இதைக் குறிக்கவே நமது முன்னோர்கள் உச்சியில் குடும்பி வைத்திருந்தார்கள்.

பாகவதம் என்றால் (ப-பக்தி, க-ஞானம், வ- வைராக்கியம், தம் -தத்துவம்) பக்தி,ஞானம், வைராக்கியம், தத்துவத்தை தருவது. இதைத் தான் பாகவத தர்மம் என்று கூறுகின்றோம். எப்போதும் கருத்துத் தெளிவு இருக்க வேண்டும். நம்மைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும்.

நம்மாழ்வார் தமிழ்நாட்டுத் தென்பகுதியிலே பிறந்தார் (கி.மு 3059) பிறந்ததன் பின்பு அழவுமில்லை, பால்குடிக்கவுமில்லை, கண்ணைத் திறக்கவுமில்லை. பெற்றோர் ஆழ்வாரை திருவனகிரியிலுள்ள ஸ்ரீ ஆதி நாதரின் பாதத்தில் வைத்துச் சென்று விட்டார்கள். குழந்தை மெதுவாக ஒரு புளியமரத்தின் பொந்தில் உள்ளிட்டு பத்மாசனத்தில் கண்ணைமூடியபடி அசைவற்று 16 வருடங்கள் இருந்தது. யாராவது கல்லெறிந்தாலும் அசையாது இருந்தது. வட இந்தியாவிலுள்ள மதுரகவி ஆழ்வார், ஒரு ஞானியினால் வழிகாட்டப்பட்டு இம் மரத்தடியை வந்தடைந்தார். அவரும் சிறுகல்லொன்றை வீசினார் சிறுவன் கண் திறந்தான். அவரின் ஞானநிலையை அறிவதற்காக நொடிப் பாங்கில் "செத்தையில் பிறந்ததற்கு முக்தி கிடைக்குமோ?" என்று கேட்டார். அவ்விளைஞன் "செத்தையில் பிறந்தது முயற்சி எடுக்காவிட்டால் இருக்கும்" என்று பதிலளித்தான். மதுரகவி ஆழ்வார் இச்சிறுவனை அழைத்துக் கொண்டு ஆழ்வார்களின் ஆச்சிரமத்திற்குக் கூட்டிச் சென்றார். அங்கு பல ஆன்மீகக் கேள்விகளுக்கு தெளிவான பதிலளித்தார். இவரின் பெயர் ஒருவருக்கும் தெரியாதாதலால் எல்லோரும் "நம்மாழ்வார்" என்று அழைக்கத் தொடங்கினார்கள். (இதைக் கூறிவிட்டு முன் வரிசையில் இருந்த இளைஞனுடன் பேசினார், என்ன வேலை செய்கிறீர்? என்ன மாதிரியான வேலை? வேலையைப் பற்றிய அறிவு இருக்கிறதா? என்றெல்லாம் கேட்டு பெயரையும் அதன் கருத்தையும் கேட்டார். இவ்வளவு கேள்விகளாலும் அவ்விளைஞனிடம் கோபம் எழாததைக் கண்டு வியந்தார்)

அக்காலத்தில் மூக்குத்தி பெண்கள் அணிவது ஏன்? அவர்கள் அறைகளிலேயே இருப்பார்கள். அங்கிருக்கும் காற்றை மூக்குத்தி சுத்தம் செய்யும் என்ற நம்பிக்கை என்று சொன்னார்.

சாயி நிறுவனத்தில் சேர்ந்தால் "மனிதனும் தெய்வமாகலாம்" சுவாமியுடன் சேர்ந்தால் ஆறு உள் எதிரிகளும் விலகி விடுவார்கள். என கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து மங்களாராத்தி இடம் பெற்றது.

**13.09.2015 திகதியன்று யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நிகழ்த்திய உரையின் தொகுப்பு.**

சாயிராம்! சாயிராம்! சாயிராம்!

தேவ தேவ ஜெகநாதா
புண்ணிய சிரவண கீர்த்தனம்
ஜனோர்த்தம உத்தம சுலோக
நாராயண நமோஸ்துதே.

தேவ தேவர்களுக்கெல்லாம் ஆதி புருஷரே! உள்ளத்தால் கீர்த்தனம் செய்கின்றோம். உலக ஜீவராசிகளிலெல்லாம் வசிக்கின்றவருக்கு வணக்கம். கடவுளைப் பற்றி வர்ணிக்கும் போது அதற்குத் தகுந்த வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும்.

உள்ளத்தால் கீர்த்தனம் செய்வதென்பதற்கு ஒரு நிகழ்வு. நாம் மூவர் சுவாமியுடன் அறையில் உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது மண்டபத்தில் எம்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார் பாடிக் கொண்டிருந்தார். சுவாமி திடீரென நான் வெளியே போய் 5 நிமிடத்தில் ஆராத்தி எடுத்து விட்டு வருவேன், இங்கேயே இருங்கள் என்று சொல்லி விட்டுப் போனார். 15 நிமிடங்களாகியும் வரவேயில்லை. நாம் மெதுவாக வெளியே வந்து பார்த்தோம். சுவாமி சுப்புலட்சுமி பாடுவதைக் கேட்டு இரசித்துக் கொண்டிருந்தார். இடையே நின்றதும் சுவாமி எம்.எஸ்.சுப்புலட்சுமி என்று கூப்பிட்டு கையை அசைத்து 4 அடி நீளமுள்ள தங்கச் சங்கிலியைச் சிருஷ்டித்துக் கொடுத்தார். நாம் உள்ளே போய் இருந்தோம். சுவாமி ஆராத்தி முடிந்ததும் வந்தார். என்னை பஜனையால் கட்டிப் போட்டுவிட்டார். என்னால் வரமுடியவில்லை என்று எமக்குக் காரணம் கூறினார், அம்மையார் தன்னை மறந்து பாடினார். நாமும் அப்படித்தான் பாட வேண்டும். கர்நாடக சங்கீதத்தின் பிதா தியாகராஜ சுவாமிகள் இராமபிரானை வாடா போடாவென்று தான் பாடுவார். கிருஷ்ண பரமாத்மாவை அப்படி அழைக்க முடியாது. சுவாமியையும் மூன்று குணங்களுக்கப்பால் உள்ளவராகையால் பய பக்தியுடன் அவரை அழைக்க வேண்டும்.

முதல்நாள் கேள்விகள் கேட்ட இளைஞனை நோக்கி "நான் எவ்வளவோ சீண்டியும் உனக்குக் கோபம் வரவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நீ முடிந்ததும் வெளியே போய் விடுவாய் என நினைத்தேன் ஆனால் நீயோ சிரித்த முகத்துடன் உணவு பரிமாறியது என்னை மகிழ்வித்தது" நான் நேற்று இரவு சுவாமியிடம் உனக்கு என்ன கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். தண்டனையா? பரிசா? சுவாமி சொன்னார். "அவன் எனது மகன். பரிசு கொடு என்றார்" இதோ பரிசு என்று சொல்லி கைக்கடிகாரம் ஒன்றைக் கையில் போட்டார். சாதாரணமாக வாலிபனுக்குக் கோபம் வந்திருக்கும் இவர் சாயி இளைஞன் ஆகையால் கோபம் வரவில்லை. இதுவும் ஓர் உன்னத மாற்றம்.

நான் பாலவிகாஷ் பிள்ளைகளின் கண்காட்சியைப் பார்த்தேன். நன்றாக இருந்தது. சில பிள்ளைகளிடம் கேள்விகள் கேட்டேன். திறமையாக பதிலளித்தார்கள். ஒரு பாலவிகாஷ் மாணவிக்கும் கைக்கடிகாரம் பரிசாகக் கொடுத்தார்.

மாற்றம் இரு வகைப்படும். உலகாயுதத்தில் மாற்றம் ஆன்மீக நிலையின் மாற்றம் என்பவையே இரண்டுமாகும். உதாரணமாக: முதலாம் வகுப்பில் படிக்கும் போது உரக்கப் படிப்போம். 6 அல்லது 7 வது வகுப்பையடைந்ததும் மௌனமாகப் படிப்போம். 16, 17 வயதில் ஆடிப்பாடுவோம் . வயதிற்கேற்ப எங்களது செயல்களும் மாறும். நாம் பிறக்கும் போதே பிராரப்த கர்மத்துடன் பிறக்கிறோம். கர்மவினையை அழிப்பதே நோக்காக இருக்க வேண்டும். பாலவிகாசில் சேருவது முதற்படியாகும். நான் உங்களின் வயதில் விளையாட்டுக்களில் மோகம் கொண்டேன். 40 வயதுகளில்தான் சுவாமியின் தரிசனம் கிடைத்தது. இந்த நிறுவனத்தில் உள்ளிட்டதும் வெளியே செல்லக் கூடாது. இவ்வரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடாது. உன்னத மாற்றத்திற்கு கடவுளில் நம்பிக்கையும், நிபந்தனையற்ற அன்பும் வேண்டும்.

நம்பிக்கை அசையாததாய் இருக்க வேண்டும். கஷ்டமோ நலமோ நம்பிக்கை தளரக்கூடாது. நம்பிக்கை எமது இயல்பு. நாம் பல செயல்களை நம்பிக்கை மூலமே செய்கிறோம். உதாரணமாக தியாகராஜரின் நம்பிக்கையைப் பார்ப்போம். அவர் மிகவும் வறியவர். பிச்சை எடுத்தே வாழ்ந்தார் ஆனால் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார். ஒருநாள் இராமரும், சீதையும், அனுமானும் வழிப்போக்கர் போல் வேடமிட்டுக் கொண்டு இவரிடம் வந்து, தங்க இடம் கேட்டார்கள். தாராளமாக இராமரின் வீட்டில் தங்கலாமே என்றார். பின்பு உண்ண உணவு கேட்டார்கள், இராமர் தந்த உணவு என்று சொல்லி பிச்சையில் கிடைத்த உணவைக் கொடுத்தார். யார் வீட்டில் வசிப்பது என்று கேட்க, எனது தந்தை இராமரும், தயார் சீதையும், சேவகன் அனுமனும் இருக்கிறார்கள். எனக்கு என்ன குறை. மனைவியையும் மகளையும் வரச் சொல்ல அவர்கள் கிழிந்த கந்தை துணியுடன் வந்தார்கள். மகளுக்கு எப்படி கல்யாணம் செய்யப் போகிறாய்? எனது தந்தையும், தாயும் இருக்கையில் கவலையில்லை என்றார். அவர்கள் ஆசீர்வத்து மறைந்து விட்டார்கள். அடுத்த நாட்காலை பக்கத்திலுள்ள பணக்காரன் தட்டில் பழங்கள், உணவுவகைகள் கொண்டு தியாகராஜர் வீட்டைத் தேடினார். தியாகராஜர் தனது வீட்டைக் காட்டினார். பணக்காரன் உடனே அவரின் காலில் வீழ்ந்து வணங்கி, அவரின் மகளைத் தனது பையனுக்குப் பெண் தரும்படி கேட்டார். தன்னிடம் பணம் வசதியில்லை என்று சொல்ல, நேற்றைய இரவில் இராமபிரான் கனவில் தோன்றி தியாகராஜரின் மகளுக்குச் சகலதையும் கொடுத்து மருமகளாக ஏற்றுக் கொள் என்று சொல்லிக் காட்சி கொடுத்ததைச் சொன்னார். தியாகராஜர் இராமபிரானை மனதார வாழ்த்தி வணங்கினார். இதைத்தான்



அசையாத நம்பிக்கை என்று சொல்வது.

பாலவிகாசில் ஏற்பட்ட இறை நம்பிக்கையையும் இறை அன்பையும் தொடர்ந்து பேண வேண்டும். வாலிபப் பருவத்தில் திசை திருப்பப்படலாம். நிறுவனத்திலேயே இருக்க வேண்டும். உலகாயுத மாற்றத்தில் வாங்கி வாங்கிச் சேர்ப்பதையே கையாள்வார்கள். ஆன்மீக மாற்றத்தில் எப்படி எப்படியெல்லாம் கொடுப்பார்கள். வாங்கும் கரத்திலிருந்து கொடுக்கும் கரங்களாக மாறுவதே ஆன்மீக முன்னேற்றம்.

ஆசைக்கு வரம்புவைத்தலையிட்டு நடந்த ஓர் நிகழ்வைக் கூறுகிறேன். 1977 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்தேன். நல்ல கவர்ச்சியான வெள்ளை சேட் வாங்கினேன். புட்டபர்த்தி வந்த போது சுவாமி மேலே கூப்பிட்டுக் கதைத்தார். எனது சேட்டைத் தொட்டுப் பார்த்தார். நல்லாயிருக்கிறது என்று சொல்லி, எங்கே வாங்கினாய் என்றார். நான் அமெரிக்காவில் என்று பெரு மிதத்துடன் சொன்னேன். மற்றவர்களுக்கும் காட்டி நல்லது நல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லி, எவ்வளவு காசு கொடுத்தாய்? என்று கேட்டார். இந்தியன் காசு 1000 ரூபாய் என்றேன். நீ வழக்கமாகப் போடும் இந்தியன் சேட் எவ்வளவு? 150 ரூபாய் என்றேன். உடனே சுவாமி மற்றையவர் களைப் பார்த்து என்னிடமிருந்து 850 ரூபாயை திருடி விட்டான் என்று சொல்லி வெளியே அனுப்புவோமா என்றார். நீ 5 சேட் வாங்கி அதில் ஒன்றை எடுத்துக் கொண்டு நான்கை வறியவர்களுக்குக் கொடுத்திருக் கலாமே என்றார். தேவைக்கு மேலாகச் செலவழிப்பதைத் திருட்டு என்று சுவாமி விளங்க வைத்தார். இது தான் ஆசைக்கு வரம்பு வைத்தல். இதுதான் உன்னத மாற்றம்

ஆண்டவன் மேல் வைக்கும் அன்பே பக்தியாகும். ஏன் அன்பு வைக்கி றோம்? அது மனித இயல்பு. உள்ளிருக்கும் அன்புத் தத்துவத்தை வெளிக் கொணர்வதே விழுமியக் கல்வி. நாங்கள் படைப்பிலே ஈர்க்கப்படுகிறோம். படைத்த வனிலே ஈர்க்கப்பட வேண்டும். படைப்பின் மூலம் படைத்தவனை அடைதல் இதுவும் உன்னத மாற்றம். "நான் பகவானின் பக்தன்" என்று சொல்லும் நிலைக்கு உயர வேண்டும்.

ஒரு ஆண்டு, சுவாமி லிங்கோத் பவத்தின் போது (சிவராத்திரியன்று) ஹிரண்ய கர்ப்ப லிங்கத்தை எடுத்தார். இதிலிருந்தே பிரபஞ்சம் தோன்றியது. இதை யார் சிருஷ்டித்தது, சுவாமியே தன் வயிற்றிலிருந்து எடுத்தார். இது சுவாமி பரப்பிரம்மா என்பதை எடுத்துக் காட்டு கிறது. இதில் சிருஷ்டிக்கும், பாதுகாக்கும், அழிக்கும் என்ற மூன்று சக்திகளும் உண்டு.

குரு ஒருவர் சீடனிடம் பிரம்மா என்றால் என்ன? என்று அறிந்து வரும்படி கூறினார். சீடன் ஆழ்ந்து தியானித்து விட்டு, அன்னமில்லாவிட்டால் உயிர்வாழ இயலாது ஆகவே அன்னம் தான் பிரம்மா என்று சொன்னான். குரு அது பிழை யென்று சொல்லி திரும்பவும் சிந்திக்கச் சொன்னார். பிராணன் இல்லாவிட்டால் உயிர் இருக்காதே. ஆகையால் பிராணன் தான் பிரம்மா என்றார். குரு மீண்டும் இது தப்பு என்று சொல்லி அனுப்பி விட்டார். சில நாட்களுக்குப் பின்பு சீடன் மனம் இல்லாவிட்டால் உலகத் தையோ, உடம்பையோ அசைக்க முடியாதென்பதால் மனம் தான் பிரம்மா என்றார். குரு இது தப்பு என்று சொல்லி மீண்டும் திருப்பி விட்டார். கடைசியாகக் குருவிடம் நீங்களே சொல்லுங்கள் என்று மௌனமாக இருந்தார். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று சக்திகளையும் உள்ளடக்கியதே பிரம்மன் என்று குரு சொன்னார். இச்சக்தியைத் தான் ஹிரண்யகர்ப்ப லிங்கம் குறிக்கிறது.

சுவாமியுடன் நெருக்கமாக இருக்கும் குழுவினரில் ஒருவர் சுவாமியிடம் " எவ்வாறு கிருஸ்ணமூர்த்தி நல்ல பிரசங்கம் செய்கிறார்? எங்களால் முடியாமலிருக்கிறதே" என்று கேட்டார். அதற்கு சுவாமி "கிருஸ்ணமூர்த்தி முன்னைய பிறப்பில் சிவாச்சாரியராக இருந்தார். சில தப்புக்கள் செய்ததால் இப்பிறப்பில் காலம் கழித்தே என்னிடம் வந்துள்ளார்". என்று பதிலளித்தார். தப்புச் செய்தால் அதன் பலனை அனுபவிக்க வேண்டும்.

பரபிரம்மனாகிய சுவாமியின் சமகாலத்தில் வாழ நாம் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும். முற்பிறப்புப் புண்ணியமும் உன்னத மாற்றத்திற்கு உதவி செய்கிறது. பரப்பிரம்மமே குருவாக வந்துள்ளார். மகிழ்ச்சி ஆனந்தத்தைவிட பேரானந்தத்தை நாடுதலே உன்னத மாற்றம். நாங்கள் தத்துவங்களை மறக்காமல் இருப்பதற்காகவே விழாக்களை கொண்டாடுகிறோம். பண்டிகையின் உள்தத்துவம் விளக்கத் துடன் தெரிய வேண்டும். விழாக்கள் உன்னத மாற்றத்தை ஏற்படுத்த உதவுகின்றன.

சில தத்துவங்களை விளக்குவதற்காகவே பல உருவ ங்கள் உண்டாக்கப்பட்டன. ரிஷிகளின் ஆழ்ந்த தியானத்தில் கண்ட காட்சியை வைத்தே உருவங்களும், ஓவியமும் வரையப் பட்டன. கைலாசம் என்றால் என்ன? ஹிமாச்சல் என்றால் என்ன? தூய்மையும், அசைவற்று இருப்பதே ஹிமாசல். சிவபெருமானின் குடும்பத்தை எடுப்போம். சிவனின் கழுத்தில் பாம்பு, வாகனம் எருது, பார்வதியின் வாகனம் சிங்கம், முருகனின் வாகனம் மயில், விநாயகனின் வாகனம் எலி, விஷ்ணுவின் வாகனம் கருடன் உலகில் ஒன்றையொன்று கொன்று தின்று விடும். ஆனால் ஆண்டவனுடன் சேர்ந்திருப்பதால், எல்லாம் இசைவுடன் வாழ்கின்றன. நாமும் வேற்றுமையை மறந்து இசைவுடன் வாழப் பழக வேண்டும். இது உன்னத மாற்றம்.

மேலைத்தேயத்தவர் ஒருவர் பகிடியாக இந்தியர்களுக்கு பல விடுமுறை நாட்கள் என்று சொன்னார். அதற்கு சுவாமி விவேகானந்தர் " உங்களுக்கு Holidays எங்களுக்கு எல்லாம் Holydays (பவித்திரமான நாட்கள்)" என்று பதிலளித்தார். ஆண்டவன் பூவிலிருப்பதாகவும், பலவிதத்தில் உருவமைக்கப்படு கின்றன. இவையெல்லாம் ஆண்டவனிடத்தில் பய பக்தியை ஏற்படுத்துவதற்கேயாகும். எங்கள் கலாச்சாரத்தில் பிள்ளை களுக்கு இறைவனின் நாமத்தையே வைப்போம். மேலைத் தேயத்தவர்கள் கல், முள், இரும்பு, மரம் என்றே பெயர் வைப்பார் கள். பிள்ளைகளைக் கூப்பிடும் போதே இறை சிந்தனை எழும். விஷ்ணுவின் மனைவி சரஸ்வதி. எனது மனைவியின் பெயரும் சரஸ்வதி. இதன் கருத்து என்ன? சா -சாரம், ஸ்வ - ஆன்மா, ஸ்தி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

தெரிந்தவன் அதாவது ஆத்ம வித்யாவின் சாரத்தை தெரிந்தவள் என்பதேயாகும். சரஸ்வதியின் வாகனம் அன்னம். பாலையும், நீரையும் வைத்தால் பாலைக்குடித்து விட்டு நீரை விட்டுவிடும். இது பகுப்பாய்வின் உச்சக்கட்டத்தை விளக்குகிறது.

மேலைத்தேயத்தவர் சுவாமி விவேகானந்தரைச் சந்தித்த பொழுது ஏன் எம்மைப் போல் கோட், சூட் போடக்கூடாது, எங்களைப் போல் கலாச்சாரமான உடை அணிய வேண்டும். என்று அவமானப்படுத்தினர். அதற்கு சுவாமி விவேகானந்தர், உங்களின் கலாச்சாரம் உடுப்பைத் தைத்த தையல் காரனிலே தங்கியுள்ளது. எங்களின் இந்தியக் கலாச்சாரம் எமது செயல்களிலேயே தங்கி உள்ளது என்று கேட்டவன் வெட்கப்படக் கூறினார்.


இன்னொருமுறை அமெரிக்காவில் அமெரிக்கர் ஒருவர் இந்தியர்கள் பிச்சைக்காரர்கள். அமெரிக்காவிடம் நிதி கேட்கி றார்கள் என்று அவமானப்படுத்தினார். சுவாமி விவேகானந்தர் அவனைப் பார்த்து 5000 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எங்கே இருந்தீர்கள்? அமெரிக்கா என்ற ஒரு நாடு இருக்கவுமில்லை குகைகளில் நீங்கள் வசிக்கும் பொழுது உணவு, வேறு பதார்த்தங்களை சேகரித்து வைத்தீர்கள். யாராவது வந்து கேட்டால் கொடுக்கவும் மாட்டீர்கள். இந்தியர்கள் எவ்வளவோ நாகரீகத்தில் முன்னேறி, யாராவது வந்து கேட்டால் உடனே கொடுத்தார்கள். உங்களின் கலாச்சாரம் வாங்கி வாங்கி சேர்ப்பது. இந்தியர்களின் கலாச்சாரம் எப்போதும் கொடுக்கும் கலாச்சாரமானதாகும். எது உயர்ந்தது? நாங்கள் எமது கலாச்சாரத்தை நன்கு அறிந்து மதிக்க வேண்டும். ஏனைய கலாச்சாரத்தை கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது. இதுவும் ஓர் உன்னத மனமாற்றமேயாகும்.

சுவாமி தனது சக்தியினால் எங்கெல்லாம் இருப்பவர் களை ஈர்த்துள்ளார். அமெரிக்காவிலுள்ள, கலிபோர்ணியாவில் சாண்டிகோ என்ற கிராமத்தில் ஜோர்ஜ் வாசிங்டன் என்ற செவ்விந்தியர் வசித்து வந்தார். அவரை ஒரு நாட்டு வைத்தியர் அவர் மிகவும் மேன்மையான ஆவி வேடத்தில் சுவாமியை சந்தித்துள்ளார். தனது வீட்டிற்கு எத்தனையோ தடவை வந்ததாகச் சொன்னார். இவர் பிரசாந்தி நிலையத்திற்கு வந்து, ஸ்தூல ரூபத்திலுள்ள சுவாமியைத் தரிசித்து சம்பாஷித்தும் உள்ளார். பின்னர் தான் உடம்பை விடவேண்டுமென்று சுவாமியிடம் கேட்டு 2012 இல் உடலை நீத்தார். அர்ஜூனன் தனது பக்தியைப் பற்றிப் பெருமிதம் கொண்டு கிருஷ்ண பரமாத்மா விடம் தன்னை விடப் பெரிய பக்தர் யாருளர் எனக் கேட்டார். கிருஷ்ண பகவான் ஒரு பாட்டியின் வீட்டைக் கொண்டு போய் உபசாரங்கள் முடிந்தபின்பு அவரின் பூசை அறையைப் பார்த்தார்கள் அங்கே மூன்று சின்ன நடுத்தரம், பெரிய கத்திகள் மாத்திரமே கிடந்தன. பாட்டியோ ஒரு சாதனையும் செய்வதாகத் தெரியவில்லை. அர்ஜுனன் கத்திகளைப் பற்றிக் கேட்டான். அதற்குப் பாட்டி சின்னக் கத்தி குசேலனுக்கும் (குளிரில் நடுங்கும் பொழுது அவலை கொடுக்கவில்லை) நடுத்தரக் கத்தி திரௌபதிக்கும் (கிருஷ்ண பகவானை ஆறுதல் எடுக்க விடாது கூப்பிட்டு சேலையைப் பெருக்கச் செய்தார்) பெரிய கத்தி அர்ஜூனனுக்கும் என்று பாட்டி சொன்னார். அர்ஜூனனுக்கு ஏன்? அவன் கிருஷ்ண பகவான் தேரை ஓட்டும் பொழுது தோளில் காலால் இங்கும் அங்கும் உதைத்தான். இவர்கள் மூவரையும் கொல்வதற்காகவே கத்திகள் என்று சொன்னார். பாட்டியின் பக்தியை மெச்சி அர்ஜூனன் தலை குனிந்தான். ஆண்டவனுக்கு தொல்லை கொடுக்காதவர்கள் தான் உயர்ந்த பக்தன்.

சுவாமியுடன் அருகாமையில் இருக்கும் பொழுது கடும் சோதனைகள் தரப்படும். திடீரென சுவாமி என்னுடனும் நண்பன் சிறீனிவாசனுடனும் பேசுவதை நாலு வருடங்கள் நிறுத்தி விட்டார். எமக்குப் புதிர் திடீரென ஒருநாள் எங்களை ஊட்டிக்கு வருமாறு அழை த்தார். நாங்கள் துரிதமாகப் போயும் சுவாமி அங்கு போய்ச் சேர்ந்ததன் பின்பே போனோம். அங்கு திரு ஜோகராவோ எல்லாம் ஒழுங்கு செய்து கொண்டி ருந்தார். அவர் எங்களை உள்ளே அழைத்து சாப்பாட்டு வரிசையில் இருக்க ஆயத்தம் செய்தார். சுவாமி "யார் அந்த இரு கள்வர்கள்? யார் விட்டது?" ஜோகராவோ திருடர்களை பார்த்திருக் கிறாயா? பதுங்கி தலையைக் கீழே தூங்கவிட்டு சுவர் ஓரத்துடன் வருவார்கள். இந்த நாலு வருடத்தில் எங்களுக்குத் தந்த பதவிகளெல்லாம் எடுக்கப்பட்டன. இராப்போசனத்தின் போது, எங்களை தனது கால்களைப் பிடிக்க விட்டார். நாங்கள் என்ன பிழை செய்தோம் என்று கேட்டோம். நான் ஒன்றைச் சொல்லி ஜோகராவோவிடம் சொல்லாதை என்று சொல்லியும் போய்ச் சொன்னாய். சென்னையில் ஒருவனுக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று சொல்லியும் பணம் கொடுத்தாய் பிழைகளுக்கு நான் மன்னிப்புக் கேட்டேன். திரு.சிறினிவாசன் தான் என்ன பிழை செய்தேன் என்று கேட்க, கிருஸ்ணமூர்த்தியுடன் சேர்ந்து வந்ததே குற்றம் என்றார். சுவாமி சொன்னதை ஒரு போதும் தட்டக்கூடாது. பக்தர்களின் பாதங்களுக்கு எனது இதயம் கனிந்த நமஸ்காரம்

ஜெய் சாயிராம்

தொகுப்பு: ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகத் தந்தை ஆன்மீக மகனுக்கு

எனது அன்பு மகன் !

பயத்தை வெல்வதற்காக பகவான் ஒரு வழியைக் காட்டித் தந்துள்ளார். பிரச்சினை கொடுப்பவனை பகவானாகவே நோக்குவது தான் அந்த வழி. அவனை நேர்முகமாகவோ அல்லது வேறு எங்கேயோ இருந்து கொண்டும்கூட, மானசீகமாக அவனில் பகவானைக் காண்பதனாலோ அன்றி பகவானுடைய ரூபத்தை அவனில் காண்பதாகக் கற்பனை பண்ணுவதனாலோ, பயமோ அல்லது தீயது எதுவுமே மறைந்து போவதைப் பார்க்க முடியும். பகவானை அவனிடத்துக் காணும் போது பகவானுடைய பிரேமையை ஒருவன் கற்பனை பண்ணிப் பார்க்கையில் அவனிடத்திலே பெரியதொரு மாற்றத்தைக் காண முடியும். இப்படி பகவானுடைய ரூபத்தை எங்கும் எவரிடம் மீண்டும் மீண்டும் நீ கற்பனையில் கண்டு நோக்கினால் எந்தக் கவலைகளும் போய் விடும். உண்மையில் எங்களிடத்தில் அன்பைப் பெருக்குவதற்குரிய இரகசியம் என்னவென்றால் "எல்லோரிடத்தும் பகவானைக் கண்டு கொள்ளுதல்" என்கின்ற, பகவானுடைய உயர்ந்த போதனையே. உன்னிடத்திலும் கூட அவ்வண்ணமே கண்டுகொள்: பகவானே எஞ்சியிருப்பார். சத்திய, பிரேமை சொரூபியான அந்த ஒன்றே - பிரேமை ஸ்வரூபம்! நீ இதைக் காண்பாய். அவனே நீ. நீயே எல்லாம்!.

திரு.ஜே.கிருஸ்ணமூர்த்தியினுடைய Choiceless awareness ஐ பயிற்சி பண்ணிப்பார். அது வெற்றியைப் பெறுவதற்குரிய இரகசியம். இன்னொருவரால் தூண்டப்பட்ட மாத்திரத்தில் எங்களுக்குள் எழுகின்ற பயம், கோபம், காமம் போன்றவற்றைப் பார்த்தல் (அதாவது என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதல்ல) அந்த எழுச்சிகளைத் தூண்டிய நபரைப் பற்றிய, நபரது செயல்கள் பற்றிய எண்ணங்கள், அவை தொடர்பாக எம்மிடத்தில் எழும் எதிர்ச் செயல்கள் போன்றவற்றை உற்று நோக்குதல்! மனத்தின் எழுச்சிகளையெல்லாம் ஒரு பார்வையாளனாக, சாட்சியாகப் பார்க்கும் போது அந்தப் பயம், கோபம், காமம் போன்ற எண்ணங்களே உன்னிடத்தில் இல்லாமல் போவதை நீ காண்பாய்.

மூன்றாவதாக ஒரு மகா வாக்கியம் "தீதும் நன்றும் பிறர் தர வாரா". எல்லாக் காரியங்களும் எங்களுக்குள்ளேயே உண்டு. உதாரணமாக, பயம் எங்களுக்குள் உண்டு. யாரையோ எப்பவோ பயப்படுத்தி இருக்கிறோம். அதன் எதிர்ச்செயலாக அது இப்போ எங்களுக்குள் பயமாக இருக்கிறது. ஆகையினால் மற்றவரைக் குறை சொல்லிப் பழி சுமத்திக் கொண்டிருக்காமல் மேற்கூறிய முறைகளினால் இவற்றுக்கெல்லாம் வெல்லும் வழியைத் தேட வேண்டும்.

"ஒரு பொல்லாப்பும் இல்லை" என்று யோகர் ஸ்வாமிகள் சொன்ன வாக்கையும் மறந்து விடக்கூடாது. ஏனென்றால் இங்கு எல்லாமே தெய்வீகத்தின் விளையாட்டே வேறொன்றும் இல்லை. "முழுவதும் உண்மை" எல்லாம் தெய்வீக சத்தியம். எங்கள் மனதில் எழும் எண்ணங்களை விழிப்போடு பார்ப்பது தான் முக்கியமாகிறது.

அதிகமாகவோ மிகக் குறைவாகவோ சாப்பிடக் கூடாது. களைப்பு, சோம்பல் போன்றவற்றையும்கூட இந்த விழிப்பாக நோக்கும் முறையினால் வெற்றி பெறலாம். மனதில் எழும் எண்ணங்கள், உணர்ச்சிக்களை அவற்றோடு ஒன்றி நிற்காமல் பார்வையாளராக மட்டுமே பார்க்க வேண்டும்.

காரியாலயத்தில் வேலை செய்யும் போது எவராவது உன்னைக் குழப்பும் நோக்கத்துடன் எரிச்சலூட்டும் வகையிலான நக்கல் கதைகள் ஏதாவது சொன்னால் இந்த முறையைப் பின்பற்றி மிகவும் விழிப்பாக உன்னை, உனது எண்ணங்கள் போன்ற எழுச்சிகளை நீ பார்வையாளனாக இருந்து நோக்கினால் (இது அவ்வளவு இலகுவான பயிற்சி அல்ல), ஒவ்வொரு முயற்சியும் உனக்குப் பெரும் வெற்றியைத் தந்து அந்த முறைகளில் மேலும் நம்பிக்கையையும் அதிகரிக்கும்.

வெவ்வேறு இடங்களுக்கு மாறிப்போவதனால் இப்பேற்பட்ட பிரச்சினைகளிலிருந்து விலகிப் போக முடியாது. ஏனென்றால் எல்லாம் ஒருவனுடைய மனதில் தான் உள்ளது. இதே பிரச்சினைகள் இன்னொருவனுக்கும் இருக்கலாம் ஆனால் அவன் சிரித்து விட்டுப் போய் விடுவான். ஆகையினாலே ஆத்மீக வழியினூடாக சரியான முறையில் இவற்றை வெல்ல வேண்டும் என்ற உறுதியோடு எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் சாந்தி, சந்தோஷம் போன்றவற்றைப் பெற்று நித்தியமான வாழ்வை நோக்கி முன்னேற வேண்டும்.

உன்னைப் போலவே எல்லோரையும் நினைக்க வேண்டும். நீயே எல்லாம், அனைவரும் நீயே. சிநேகிதன் விரோதி எல்லோரும் நீயே. முகாமையாளர், வேலையாள், வாடிக்கையாளர் உட்பட எல்லோரிடத்தும் உன்னிடத்து நீ கொண்டுள்ள அன்பையே பரிமாற வேண்டும். வெவ்வேறு ரூபங்களில் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரிடத்தும் இருக்கிறாய். அதற்காக எல்லோருடனும் பேசிப் பழக வேண்டும் என்பதல்ல. சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவர்களுக்கு உதவலாம். தேவைப்படும் போது (பாத்திரம் அறிந்து) உதவி செய்யலாம். பொருளாகக் கொடுப்பதல்ல முக்கியம் இதய பூர்வமாக கொடுப்பது தான் முக்கியம்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் ஒருவனுக்குத் தான் செய்வது தனக்குச் சரியென்றுபட்டால் மற்றவர்கள் கூறுவதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. என்னுடைய வழியில் மற்றவர்களும் வரவேண்டும் என்று நான் விரும்புவதுண்டு. இந்த முயற்சியில் எங்களுக்கு நல்லவர்களின் சகவாசமே கிடைக்கிறது. எங்களோடு உள்ளவர்களோடு எமக்கு வெறுப்பு இருக்குமாயின் எங்கள் இதயத்தில் வெறுப்பை வளர்த்துக் கொண்டு அதனோடு தொழிற்படும் பயம், கவலை, துன்பம் போன்றவற்றையும் நாமே வளர்த்துக் கொள்கிறோம். ஆகையினால் பகவானையே எனது அயலில் உள்ளவராக நினைத்துக் கொள். அதில் பெரிய சாந்தி உனக்கு கிடைக்கும். பயத்தை வெல்வதற்கு இது தான் பெரிய ஆயுதம்.

எவராவது எம்மைத் தூண்டி விடும் போது, உண்மையில் நாங்களாகவே பல பிறவிகளில் உருவாக்கிய பயம், வெறுப்பு என்பவற்றின் சாயல்கள்தான் அப்போது வெளிப்படுகின்றன. நீ உன் அயலானைப் பார்ப்பது போல் இன்னொருவன் அவனைப் பார்க்க மாட்டான். எங்களுக்குள் இருக்கும் இப்பேற்பட்ட தீய தன்மைகளை வேரோடு அறுக்க வேண்டுமாயின் எல்லோரையும் பகவானாகப் பார்க்கும் இந்த வழிதான் மிகவும் சிறந்தது. ஒரு வினாடிக்கு பகவானைக் கற்பனை பண்ணிப் பார்த்த மாத்திரத்தி லேயே உன்னிடத்தில் இருந்த மன அழுத்தம் எல்லாம் நீங்கி எவ்வளவு சாந்தி கிடைத்து விடுகிறது என்பதை நீயே காண்பாய். வெற்றி பெற வேண்டும் என்ற திடமான தீர்மானத்துடன் நீ இருக்கிறாய் என்று அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தாய், தந்தை, சகோதர சகோதரிகளைத் தவிர மற்றவர்களைப் புறக்கணித்து ஒருவன் சிறிய வட்டத்துக்குள் இருக்கக்கூடாது. நீ விரிவடைய வேண்டும். நீ எல்லோருமாய் இருக்கிறாய். சமயம் என்பது விரிவடைதல் தானே. பிரேமையைக் கற்பனை பண்ணிப் பார்ப்பதில் எந்தவொரு பிரயோசனமும் இல்லை. காரியாலயத் திலும் எல்லாவிடத்திலும் எமது அயலவர்களைப் பற்றி உண்மை யான அக்கறை கொள்ள வேண்டும். அவர்களது நலத்திற்காக மனமார வாழ்த்த வேண்டும். ஒருவருக்கு நீ கொடுக்கும் புன் சிரிப்பு அவரையும் சந்தோஷப்படுத்தி உன்னையும் சந்தோஷப் படுத்தும். தன்னைப் பற்றி மாத்திரமே நினைத்துக் கொண்டிரு ப்பது ஒரு பெரிய குற்றம் என்று திரு.கிருஸ்ணமூர்த்தி சொல் கிறார். ஒருவன் தான் விரிவடையாவிடில் ஆத்மீகத்தில் முன்னேற்றம் கிடையாது. ஒரு சாந்தியான வாழ்வும் கிடையாது. இவற்றைக் கற்பனை பண்ணிப் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை. மற்றவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துஅதற்கேற்ப செயல்பட வேண்டும். வாழ்நாள் பூராக ஆத்மீக முன்னேற்றத்திற்காக நீ பாடுபடுகிறாய். ஆகையினால் முன்னேற்றத்தில் வரும் தடைகளைப் பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன்.

மற்றவர்களுக்குள் வேறு ரூபத்தோடு இருக்கும் நீ அவர் களிடம் எப்படி அக்கறை காட்டாமல் இருக்க முடியும்? என்னுடைய வழியில் பின்பற்றிய போது அப்பேற்பட்ட தடைகள் எல்லாம் பெருமளவு தகர்க்கப்பட்டு விட்டன என்பதை நீ அறிவாய். உடலை உறுதியாக வைத்துக் கொண்டு சேவை செய்ய வேண்டும். என்று உறுதியுடன் செயல்ப்படுத்து.

பகவான் என்னை கொக்கு விலுக்கு அனுப்பியதே என் உடலைத் திடமாக வைத்து சுறுசுறுப்புடன் மற்றவர் களுக்கு சேவை செய்வதற்காகவே. பலகாலமாக நான் ஒரு மூலையில் உட்கார்ந்து தியானம் பண்ணிக் கொண் டிருந்ததனால் என் உடம்பு சோம்பலாகிப் போய் விட்டது. ஆனால் இப்போ என் உடல் மிகவும் பாரமற்றதாக எந்தத் தருணத்திலும் எவருக்கும் சேவை செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறது. ஒருவனின் இதய பூர்வமான இப்பேற்பட்ட விருப்பங்களை கடவுள் நிச்சயமாக நிறை வேற்றுகிறார். இந்தக் கடிதத்தைக் கவன மாக வைத்து உனக்குப் பிரச்சினைகள் வரும் போதெல்லாம் எடுத்துப் படித்து பிரச்சனைகளை நீ வெல்ல வேண்டும். உன் சகோதரர்களுக்கும் படிப்பதற்குக் கொடு.

ஆத்மீகப் புத்தகங்களை வாசிப் பதில் உனக்கு இருக்கும் அதிக ஆவல் சத்தியத்தைக் காணுவதற்கு உனக்கு இருக்கும் தாகத்தைக் காட்டுகிறது. சரியான புத்தகங்கள் நல்ல தோழர்களைப் போல எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் ஒருவனை விடுதலைப்படுத்தி சாந்தியைத் தருகின்றன.

மனிதனுக்காக நான் ஒரு போதும் கண்ணீர்விட்டதில்லை. கடவுளுக்காக மட்டுமே கண்ணீர் விட்டிருக்கிறேன். கடவுளுக்காக விடும் ஒவ்வொரு கண்ணீரும் ஒருவனை மேம்படுத்துகிறது.

21 ஓம்காரம், இரண்டு திருஞான சம்பந்தரின் தேவாரபதிகங்களோடு நீண்ட மாலை சாதனையின் பின் இந்த நீண்ட தபாலை உனக்கு எழுதுகிறேன். பகவான் உன்னை ஆசீர்வதிப்பாராக!

ஜெய் சாயிராம்

உன் அன்புத் தந்தை
திரு.எஸ்.ஞானசேகரம்
(அமரத்துவம் 16.5.1990)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்
# தெய்வீகக் காட்சி உருவும், தெய்வீக தூதுப் பணியும்

**கொழும்பில் பான்ஸ் பிளேசில் இளைஞர்களால் நடாத்தப்பட்ட கருத்தரங்கின் சாரம்**

பகவான் தெய்வீக அவதாரமாக இவ்வுலகில் மனித உருவில் பிரவேசித்தார். அவரை மக்கள் தங்கள் தங்கள் மனதிற்கு ஏற்றவாறு தெய்வமாகவும், சமூகத்தலைவராகவும் சமூக சீர்திருத்த வாதியாகவும், ஆன்மீகக் குருவாகவும், தத்துவ ஆசிரியராகவும், அதி உயர்ந்த மனிதாபிமானராகவும், சக்தி வாய்ந்த பாரிய உள்ளுணர்வும் கொண்ட தலைவராகவும், சிறந்த தீர்க்கதரிசியான கல்விமானாகவும் கருதி பக்தியும், பணிவும், மதிப்பும் கொடுத்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் தரிசனம் பெற்றவர்கள் அவரை குரு கால்களில் நடமாடும் அன்பாகவே அனுபவித்தார்கள்.

அவர் எங்கும் வியாபித்திருந்தாலும் எங்களால் உணரவோ, அனுபவிக்கவோ முடிவதில்லை. மாயையின் நிமித்தமும் எமது கர்ம வினைப் பயனாலும் அஞ்ஞானம் என்ற திரை அவரை இங்கும் எங்கும் எல்லோரிடத்திலும் காண்பதைத் தடுக்கிறது. இந்த இருளை அகற்றுவதே ஆன்மீக சாதனை.

பரபிரம்மம் உருவமற்றதானாலும் பக்தனின் விருப்பத்திற்கேற்ப, சந்தர்ப்பத்திற்கேற்ப தனது சங்கல்ப்பத்திற்கேற்ப எந்த உருவையும் எடுக்கலாம்: எடுத்திருக்கின்றது. தெய்வீகக் காட்சி உருவென்றால், அவதார நிகழ்வுக்கு முன்பும் பின்பும் பரப்பிரம்மனால் உருவாக்கப்பட்ட திட்டங்களையே குறிக்கும்.

தெய்வீகத் தூதுப் பணியென்றால் என்ன? அவதாரம், தற்காலிக பூவுலக வாசத்தின் போது, செயல்படுத்தப்படுவதைத் தான் தெய்வீகத் தூதுப் பணியென அழைக்கிறோம். அவதாரமே தான் தோன்றுவதற்கான இடம், நேரம், தாயார், நோக்கம் எல்லாவற்றையும் நிர்ணயிக்கும்.

அவரின் தெய்வீக உருவக் காட்சியில் மக்களுக்குத் தேவையான, ஆன்மீகத் திட்டங்கள், கல்வித் திட்டங்கள், வைத்திய சேவைத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், நாராயண சேவை, கிராமசேவைத்திட்டங்கள் எல்லாமே அடங்கும்.

பரந்த நோக்கில் அவரது தெய்வீகக் காட்சி உருவும், தெய்வீக தூதுப்பணியும் சனாதன தர்ம ஒழுங்கு முறைப் பயிற்சியை இனம், மதம், சாதி, நிறம் அல்லது சமயக் கோட்பாடு ஆகிய எந்தவித பாரபட்சமின்றி மீண்டும் பழைய நிலைக்குக் கட்டியெழுப்புவதேயாகும். எமது ஆன்மீக முன்னேற்றத்திற்காக பகவான் அளித்த சிறந்த அன்பளிப்பு என்ன? (கொடுத்தப்பட்ட பதில்கள்) அன்பு, கருணை, நாராயண சேவை எல்லாவற்றிற்கும் மேலாக சத்திய சாயி நிறுவனமேயாகும்.

தனிமனிதனால் செய்ய முடியாததை நிறுவன மூலமாகச் செய்ய முடியும். கூட்டு முயற்சியில் களைப்பு இருக்காது. எல்லா பலன்களும், திறன்களும் ஒன்று சேர்ந்து பெருக்கப்பட்டுவிடும். தனது தெய்வீகப் பணிக்காக 5 பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளார். எம்மில் உள்ள பலம் பலவீனத்தை அறிய முடியும். நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உன்னத மனமாற்றமேயாகும். இதை விருத்தி செய்ய ஒன்பது ஒழுக்க கோவைகளைத் தந்தார். உலக மன்றம், மத்திய நம்பிக்கை நிதியம், பிரசாந்தி சபை ஆகியவற்றையும் ஸ்தாபித்தார்.

எம்மிடம் புனிதமான இதயமும், புலனடக்கமும் இருந்தால், பகவானின் கருணை எமது உரிமையாகும் என பகவான் கூறியுள்ளார். நிறுவனத்தின் மூலமாக பகவான் தனது தெய்வீகப் பணியை பெருமளவு பூர்த்தி செய்வதாலும் இன்றும் செய்து கொண்டே இருக்கிறார். இதில் நிறுவன நிர்வாகிகளுக்குப் பெரும் பொறுப்புள்ளது.

பகவானின் ஸ்தூல உடம்பில் அளித்த கடைசித் தரிசனம் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று நடைபெற்றது. அன்றைய தினம் இருமுறை பக்தர்களிடையே சுற்றி வந்தார். அனைத்து மாணவர்களையும் அட்சதைகளைத் தூவி ஆசீர்வதித்தார். அனைவரையும் பார்த்து சிரித்தபடி இனிப்பு வகைகளை வழங்கினார். பாலர் பாடசாலைக் குழந்தைகளையும் கூப்பிட்டு ஆசிர்வதித்தார். ஆராத்தி காண்பிக்கப்பட்ட போது தாளலயத்திற்கேற்ப கைகளைத் தட்டினார். சமஸ்த லோகா சுகினோ பவந்து உச்சாடனம் தொடங்கியதும் தனது கைகளைத் தூக்கி வணக்கம் செலுத்தினார். இதன் அர்த்தம் என்ன? முன் ஒரு போதும் செய்யாததைச் செய்தார். அவர் எம்மிடத்தில் இறைவனைக் கண்டார். தன்னைக் கண்டார். இதற்குத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்காரம் செய்தார். அவர் எவ்வாறு எல்லோரிலும் தன்னைக் கண்டு வெளிப்படுத்தினாரோ நாமும் எல்லோரிலும் இறைவனைக் காண வேண்டும். நாம் எல்லோரையும் மதித்து நேசித்து சேவையும் செய்ய வேண்டும்.

நீயும் நானும் ஒன்று !

ஜெய் சாயிராம்

தொகுப்பு: சகோதரி டிலானி
சத்திய சாயி நிலையம், கொழும்பு



# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்
## "தெய்வீகக் காட்சி உருவும், தெய்வீக தூதுப் பணியும்"

## கலந்துரையாடல் - நகல்

ஓம் ஸ்ரீ சாயிராம் !


ஒரு சிறந்த நாள், அத்துடன் ஒரு நல்ல மாலைப் பொழுது. 86 வருடங்களுக்கு முன்பு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பகவான் இவ்வுலகில் அவதரித்தார்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய கொழும்பு சமித்தியின் இளைஞர்களாகிய நாமும் பாலவிகாஸ் பிரிவும் இணைந்து எமது தாழ்மையான பிரார்த்தனைகளை அன்பிற்குரிய பகவானின் தாமரை மலர்ப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம். அத்துடன் இக் கலந்துரையாடலுக்கான தலைப்பாக தெரிவு செய்துள்ளோம்.

நான் டிலானி, எனது இடது பக்கத்தில் உள்ள சகோதரிகள்.... எனது வலது பக்கத்தில் உள்ள சகோதரிகள்....

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா யார்?
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா எல்லாவித தெய்வீக பண்புகளையும், தெய்வீக குணாதிசயங்களையும், சத்தியத்தின் அதி உயர்ந்த உண்மை நிலையின் தெய்வீக சக்திகளையும், இறுதி நிலையான சத்தியத்தையும், எல்லையற்ற வாழ்வையும், எல்லையற்ற புனித உணர்வலைகளையும், எல்லையற்ற பேரானந்தத்தையும் , சர்வவியாபியாக வும், சர்வ சக்தியுள்ளவராகவும், சர்வமும் அறிந்த தெய்வீகமாகவோ அன்றி, மானிட ரூபத்தில் பரிணமித்த இறைவனாகவோ, சகலவற்றையும் உள்ளடக்கியவராகவே விளங்கினார்.

அவர் ஒரு தெய்வீக அவதாரமாக இருந்த போதிலும் பின்வரும் பாத்திரங் களாக விளங்கினார்.
ஒரு சமூகத் தலைவர்
ஒரு ஆன்மீக ஆசிரியர்
மற்றும் ஒரு தத்துவ சாஸ்திரி



மேலுள்ள படத்திலிருக்கும் எமது அன்புத் தெய்வம், 14 ஆவது வயதில் தான் ஓர் அவதாரமென உலகிற்கு அறிவித்த போது எடுக்கப்பட்டது.

**டிலானி:**
பகவான் பாபா யார்,
ஓர் ஆன்மீக பக்தனுக்கு.........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரவீனா:**
அவர் சமத்துவமான விசேட தெய்வீக குரு

**டிலானி:**
ஓர் பகுத்தறிவாளனுக்கு....

**பவித்திரா:**
அவர் தான் உலகில் அதி உயர்ந்த மனிதாபிமானமிக்கவர்.

**டிலானி:**
ஆயிரக்கணக்கான நவீன இளைஞர்களுக்கு.........

**நித்தி:**
அவர் சக்தி வாய்ந்த நோக்கும் பாரிய உள்ளுணர்வும் கொண்ட ஓர் தலைவர்

**டிலானி:**
ஓர் பக்தனுக்கு........

**சாயி:**
அவர் வெறுமனே மனித உருவில் உள்ள தெய்வம்

**டிலானி:**
அத்துடன் அவரை கவனித்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்த ஒவ்வொருவருக்கும், அவர் தூய அன்பாகவே காட்சியளிப்பார்.

**டிலானி:**
பகவான் நம்முள் இருக்கிறார் என சொல்வது நம் வழக்கம். அப்படியானால் அவர் எந்த உடற்கூற்றியலில் வசிக்கிறார்? அவர் எம்முள் வசிக்கிறார் என்றால் நாமும் கடவுளா?

ஆம் நாமும் கடவுள் தான்.

எல்லா உயிரினங்களிலும் பகவான் பாபா இருக்கிறார் என்பதையிட்டு இம்மியளவேனும் சந்தேகம் கிடையாது. ஆனால் மனித இனங்களில் உள்ளார் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும். அவர் எமது உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த நாளங்களிலும் பிராணனாகவோ அல்லது எல்லா உயிரினங்களிலும் தெய்வீக சக்தியாகவோ உறைந்திருக்கின்றார். இருப்பினும் மனித இனங்களைப் பொறுத்தமட்டில் அவர்களது உணர்வலைகளில் அவர் வசிக்கிறார். அழிக்கப்படாது தேங்கிக் கிடக்கும் முன்னைய கர்மாவின் சக்தியினால் மூடப்பட்டிருப்பதனால் மனித இனத்தினால் இதனை அனுபவிக்கவோ, பார்க்கவோ எமது உணர்வலைகளில் அவரது பிரசன்னத்தை தெரிந்து கொள்ளவோ முடியாமல் இருக்கிறது. நாம் எந்தக் கணத்தில் கர்மாவின் சக்தியை வேருடன் களைந்து இல்லாதொழிக்கின்றோமோ. அந்தக் கணம் நாம் தெய்வீக இனமாக மாறுகிறோம்.

ஒருமுறை பகவானிடம் நீங்கள் கடவுளா என கேட்கப் பட்டது அதற்கு அவர் "ஆம் நானும் கடவுள் அது போன்று தான் நீயும். எனக்கும் உனக்கும் இடையே உள்ள ஒரே ஒரு வித்தியாசம். இந்த விபரம் எனக்கு தெரியும். ஆனால் உனக்கு தெரியாது" என பதிலளித்தார்.

சரி நாம் அவரை எமது அன்பிற்கு பாத்திரமான எல்லாம் வல்ல இறைவன் என ஏற்றுக் கொள்வோம். நாம் பகவான் இவ்வுலகில் அவதரிக்க முன்பு நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்ப்போமா?

**பிரவீனா:**
அது 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அதிகாலை 5 மணி 06 நிமிடங்கள், குளிர்ந்த காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. கோவில் தூணுக்கு மேல் இந்த சிறிய மணிகள் இதமான காதுக்கினிய ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது. அதே நேரம் வீட்டினுள் இருந்த இசைக் கருவிகள் தாமாகவே எழுப்பிய இசை மெட்டுக்கள் மெதுவாக எதிரொலித்துக் கொண்டிருந்தன. அந்த அற்புதமான நேரம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா இவ்வுலகில் தோன்றினார்.

**டிலானி:**
எப்படிப்பட்ட அற்புதம்?

**பவித்திரா:**
எப்பொழுது தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்குகின்றதோ, அப்பொழுது தர்மத்தை வளர்த்து தீய, துன்மார்க்கர்களை அழிப்பதற்காக, இறைவன் மனித ரூபத்தில், எம்மத்தியில் அவதரிக்கின்றார்.

துறவிகளும் முனிவர்களும் அவரை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வேளையில், இறைவன் அவதாரமாகத் தோன்றுகின்றார்.

"முனிவர்கள் பிரார்த்தித்தார்கள் - அதனால் நான் வந்தேன்" என பகவான் கூறினார்.

**டிலானி:**
இறைவன் உருவமற்றவர் எனக் கூறப்படுகிறது. அதன் அர்த்தம் யாதெனில் அவர் எந்த உருவத்தை எடுக்கவும், எந்த உருவமாக மாறவும் முடியும் என்பதாகும். அப்படியானால் அவர் எந்த ரூபத்தில் பக்தனுக்கு பூர்ண தர்சனம் கொடுக்கிறார்?

**நித்தி:**
அவர் பக்தன் விரும்பும் ரூபத்தில் உருவமெடுக்கிறார். அதாவது பக்தனுக்கு அதிக சந்தோஷம் தரக்கூடிய ரூபத்தில் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிலானி:**
இப்பொழுது நாம் தெய்வீக காட்சி உருவைப் பற்றிக் கதைப்போம். உண்மையில் உருவமற்ற பரப்பிரம்மனுடைய தெய்வீக மனோசக்திக்கமைய, எந்தவொரு உருவத்திலும் இடத்திற்கும், நேரத்திற்கும் தக்கவாறு தோன்றுவார். தெய்வீக காட்சி உருவை செயற்படுத்தும் விதிகள், அவதாரத்தினாலோ அன்றி அவதார சக்தியினாலோ செயற்படுத்தப்படும்.

மீண்டும் இந்த தெய்வீக காட்சி உரு என்பது என்ன?

**பிரவீனா:**
அவதாரமாக தோன்றினால் முன்னால் ப்ரமனால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் தான் அவரை தெய்வீக காட்சி உரு எனப்படும்.

**பவித்திரா:**
இந்ததெய்வீக காட்சி உரு அவதாரத்தின் தற்காலிக பூவுலக வாசத்தின் போது செயல்ப்படுவதைத்தான் "அவரது தெய்வீக தூதுப் பணி" என அழைக்கப்படும்.

**டிலானி:**
பகவான் பாபாவின் தெய்வீக காட்சி உரு ஓர் எல்லைக்குட்பட்ட தெய்வீக அம்சங்கள் நிறைந்தவை. இப்பொழுது நாம் கலந்துரையாடியது போன்று, தேர்ந்தெடுக்கும் நேரம், இடம், இவ்வுலகில் தோன்றுவதற்கான தேர்ந்தெடுத்த தாயார் என்பன அவரது தெய்வீக காட்சி உருவின் ஆரம்ப கட்டத்திற்கு ஒருவேளை குறிப்பிடக்கூடிய அளவு முக்கியமானவையாக இருக்கலாம்

**நித்தி:**
ஈஸ்வரம்மாவின் மாமியாரின் கனவில் இறைவன் தோன்றி ஈஸ்வரம்மாவின் வயிற்றில் தெய்வீக சக்தி பிரவேசிப்பதையிட்டு அவரை பயப்பட வேண்டாமென்று தெரிவிக்கும்படி கூறினார். இதுவும் அவரது ஓர் தெய்வீக காட்சி உருவல்லவா?

**டிலானி:**
பூரண அவதாரமாக அவரது தெய்வீக காட்சி உரு மிகவும் பரந்தது.
பகவான் மாணவனாக இருக்கும் போது, தனது சக மாணவர்களுக்காக புத்தகங்கள், பென்சில்கள், பேப்பர்கள், இனிப்பு வகைகள் போன்றவற்றை உருவாக்குதல் போன்ற பல அற்புதங்களைப் புரிந்தார். பால வயதான 10 முதல் 14 வயதில் வேதங்கள், உபநிஷதங்களில் உள்ள அம்சங்கள் பற்றி விளக்கியும், அதனை தெளிவுபடுத்தியும் ஆர்வத்தை வெளிப் படுத்தினார். 1940 ஆம் ஆண்டு அவருக்கு 14 வயதாக இருக்கும் போது, தான் ஓர் அவதாரம் என்பதை உலகிற்கு வெளிப் படுத்தினார். சித்திராவதி நதிக்கு அண்மையில் உள்ள குன்று உச்சியில் உள்ள புளியமரத்திலிருந்து வெவ்வேறுவிதமான பழங்களை பெற்றுத் தருவதும் அவரது அற்புதங்களில் உள்ளடங்கும். இந்த மரம் வேண்டுவதைத் தரும் மரமான "கல்பக விருட்சம்" எனப் பெயரிடப்பட்டது. புட்டபர்த்தியில் உள்ள பழைய மந்திரின் கட்டுமானப் பணி தொடர்பான மாதிரி வரைபடம், நிர்மாணக்கலை, மேற்பார்வை முதலியன பால சாயி பாபாவினால் மேற்கொள்ளப்பட்டன.

**பிரவீனா:**
அவரது தெய்வீக காட்சி உருக்களில் ஒன்றான சத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமை, அஹிம்சை ஆகிய மேம்பாடுகளை உள்ளடக்கியதும் அவர் ஆரம்பித்து வைத்ததுமான "மனித மேம்பாட்டுக் கல்வியை" நாம் ஏன் குறிப்பிடக்கூடாது? அவர் வாழ்க்கையின் எந்தப் பகுதியை யாவது கவனிக்காது விட்டாரா?

**பவித்திரா:**
பாலர் பாடசாலை முதல் சர்வகலாசாலை வரையிலான பாடசாலைகள் கட்டுமானப் பணிகளும் அவரது தெய்வீக காட்சி உருவேயாகும்.

**நித்தி:**
மருத்துவ பராமரிப்பு சம்பந்தமாக அவரது தெய்வீக காட்சி உரு மருத்துவ முகாம்களில் ஆரம்பித்து, அதி நவீன வசதிகள், இலவச அன்புச் சேவையுடன் கூடிய அதி சிறப்பு மருத்துவமனைகள் வரை தொடர்ந்தது.

**டிலானி:**
அவரது தெய்வீக காட்சி உருவில் ஒன்றான மாத இதழான "சனாதன சாரதி" ஆரம்பத்தைப் பற்றி நாம் பார்ப்போமா?

**சாயி:**
பரந்த நோக்கில் பார்த்தால் அவரது தெய்வீக காட்சி உருவும் தெய்வீக தூதுப் பணியும், சனாதன தர்ம ஒழுங்கு முறைப் பயிற்சியை இனம், மதம், சாதி, நிறம், அல்லது சமயக்கோட்பாடு ஆகிய எந்தவித பாரபட்சமுமின்றி மீண்டும் பழைய நிலைக்கு கட்டியெழுப்பு வதேயாகும். இந்தப் பிரசுரம் அவரது தெய்வீக காட்சி உருவையும் தெய்வீக தூதுப் பணியையும் நிறை வேற்றும் பிரதான கருவியாகவும், ஆயுதமாகவும் செயற்படுகிறது.

**டிலானி:**
நாம் இதுவரை அவரது தெய்வீக காட்சி உருவைப் பற்றி உரையாடினோம். இப்பொழுது அவரது தெய்வீக தூதுப் பணியைப் பற்றிப் பார்ப்போமா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவரது தெய்வீக தூதுப் பணிக்குச் செல்ல முன்பு, ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

எமது ஆன்மீக முன்னேற்றத்திற்காக பகவான் அளித்த சிறந்த அன்பளிப்பு என்ன?

**பிரவீனா:**
அன்பு?

**பவித்திரா:**
அவரது அன்பான கருணை?

**நித்தி:**
நோயுற்றவர்களை குணப்படுத்துவதும், பசியானவர்களுக்கு உணவளிப்பதுமான அவரது கருணை?

**சாயி:**
நாராயண சேவை?

**டிலானி:**
ஓர் எளியதும் தர்க்க ரீதியானதுமான பதில்

"சத்ய சாயி நிறுவனத்தை" உருவாக்கி எமக்கு தந்தது. அவரது தெய்வீகத் திட்டம், ஓர் தெய்வீக காட்சி உரு, தெய்வீக உணர்ச்சியும் கூட

பகவான் தனது போதனைகளை , பக்தர்கள் தனியான முறையில் பயிற்சி பண்ணும்படி விடாது இந்த நிறுவனத்தை ஆரம்பித்ததன் காரணம் என்ன?

**பவித்ரா:**
இப்பொழுது எனக்கு விடை தெரியும்

ஒரு நிறுவனம் கூட்டு முயற்சி, பகிர்வு, கவனித்தல், மற்றும் குழு முயற்சி என்பனவற்றை ஊக்குவிக்கிறது. இது அவரது தெய்வீக தூதுப்பணியை நிறைவேற்றுவதற்கு அதி சிறந்த தொன் றாகும். பக்தன் ஒருவன் தனியாக சில சாதனைகளைச் செய்வதோடு நிறுவனத்தினூடாகவும் சிறப்பாகச் செயலாற்ற முடியும்.

முடிவற்ற தூய்மையான சனாதன தர்மத்தை மீண்டும் நிலை நாட்டுவதற்கு இந்தச் சாதனம் மிகவும் செயற்திறன் படைத்ததோடு திறமையானதும்கூட அவரது தெய்வீக தூதுப் பணியும் இதனூடாகவே நிறைவேற்றப்பட்டது.

**டிலானி:**
நாம் இப்பொழுது பகவான் எவ்வாறு தனது தெய்வீக தூதுப்பணியை செயற்படுத்தினாரென ஆராய்வோம்.

பகவான் தனது தெய்வீக தூதுப்பணியை நிறைவு செய்வதற்கென சாயி நிறுவனத்தில் ஐந்து பிரதான பிரிவுகளை உருவாக்கினார்.

அவரது தெய்வீக தூதுப்பணியென்பதன் அர்த்தம் என்ன?

அவரது தெய்வீக தூதுப்பணி சமுதாயத்தில் ஓர் ஆன்மீக மாற்றத்தை ஏற்படுத்துவதேயாகும். இதனையே அவர் அன்பின் உள்ளடக்கம் எனக் குறிப்பிட்டார்.

நாம் இந்த ஐந்து பிரிவுகளும் என்ன என்பதைப் பார்ப்போமா?

**பிரவீனா:**
சாயி நிறுவனத்தின் ஐந்து முக்கிய பிரிவுகளும் ஐந்து விரல்கள் போன்றவை. இவை கையின் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுகின்றன. இந்தப் பிரிவுகளான பஜனை மண்டலி (பஜன் குழு), பாலவிகாஸ் (சிறுவர் கல்விப் பிரிவு), சேவாதாள் (சேவைப் பிரிவு), மகிலவிபாக் (மகளிர் பிரிவு), மற்றும் பிரதான சேவா சமித்தி (சேவை நிறுவனம்) ஆகும். ஒவ்வொரு பிரிவுக்கும் குறிப்பிட்ட பாத்திரங்கள், பணிகள், பொறுப்புக்கள், தெய்வீகத் தூதுவப்பணியை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

**பவித்திரா:**
பஜன் மண்டலிகள், இறைவன் மற்றும் அனைத்து மத இறைதூதர்கள் ஆகியோரது புகழைப் பாடும் இதன் பணி பிரிந்திருக்கும் மனித சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் ஒன்றிணைப்பதுடன் சர்வமத நம்பிக்கையை உண்டாக்குவதுமேயாகும். பஜன் என்பது பக்தியூட்டும் பாடல்களை குழுக்களாக பாடுவதேயாகும். இது கவனிக்கப்படாத ஓர் அடிமனமாற்றத்தை நோக்கி இட்டுச் செயலும்.

**நித்தி:**
கையில் மோதிர விரல் பாலவிகாஸை குறிக்கும் பால என்பது மென்மையான எனப் பொருள்படும். விகாஜ் என்பது பூக்கும் மொட்டுக்கள் எனப் பொருள்படும். ஆகவே இன்று பாலவிகாஸில் உள்ளவர்கள் தான் நாளைய தலைவர்கள். ஆளுநர்கள், ஆட்சியாளர்கள். அவர்கள் பாதுகாக்கப்படுவதுடன், மனித மேம்பாடுகள் பற்றியும் அவர்களுக்கு கற்றுத்தரப்பட வேண்டும். அவர்கள் எல்லா மதங்களையும் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். இது பாலவிகாஸ் வகுப்பில் கற்றுத் தரப்படுகிறது.

**சாயி:**
சேவா பிரிவு என்பதும் எமது கைவிரலில் மூன்றாவது விரலைக் குறிக்கும். இது இதன் இருபக்கமும் உள்ள மற்றைய விரல்களுக்கும், அதன் செயற்பாடுகளை நிறைவேற்ற ஆதரவாகவும், பலமாகவும் உள்ளது. அதே போன்று சேவா பிரிவும், சாயி நிறுவனத்தினது ஐந்து பிரிவுகளில் நடுப்பிரிவு. இது தமது இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமும் உள்ள மற்றைய இரண்டு பிரிவுகளும் தமது பணிகளை நிறைவேற்ற அனுசரணையாக இருக்கின்றது. சேவா பிரிவினர் மென்மையாகவும் மனித இனத்திடமிருந்து எந்தவித பிரதி பலனையும் எதிர்பாராது சேவையை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**டிலானி:**
பெண்ணினம், இறைவனின் தீவிர சக்தியான பெண் தெய்வம், “சக்தியைக்” குறிக்கும். இரண்டாவது விரலான சுட்டுவிரல் பெண்கள் பிரிவைக் குறிக்கிறது. தியானத்தின் போது பெருவிரலும் சுட்டுவிரலும் இணைத்துப் பிடிக்கப்படுவதற்கான காரணம் ஆழ்ந்த சிந்தனையை உருவாக்கவும் , சிந்தித்ததை மீண்டும் மீண்டும் சிந்திக்கவும், தியானம் செய்யவுமேயாகும். பெருவிரல் பிரம்மனை குறிக்கும். எந்த வெற்றிகரமான பணிகளுக்கும் பெண்கள் ஓர் முன்னிலையாளர்கள். சாயி நிறுவனத்தின் பெண்கள் பிரிவு, தாய்மாருக்கான அனுபவங்கள், சிறப்பியல்புகள் மற்றும் இயற்கைப் பண்புகள் என்பனவற்றை வெளிக் கொணர்கின்றன.

**பிரவீனா:**
சாயி சேவா சமித்தி, சாயி நிறுவனத்தின் முதுகெலும்பைப் போன்றது. மற்றைய நாலு பிரிவுகளினதும் பொறுப்புக்கள், கணக்கு சம்பந்தமான பொறுப்புக்கள், சிறப்பான இயக்கம் ஆகிய பொறுப்புக்கள் யாவும் சாயி சேவா சமித்தியின் வசமே உள்ளது.

**டிலானி:**
சிறந்த அன்பளிப்பாக “சாயி நிறுவனத்தை” பகவான் எமக்கு தந்ததைப் பற்றி நாம் கதைத்தோம். பகவான் ஆன்மீக மாற்றத்தையே கண்டார். இதனை அடைவதற்கு என்றும் அழியாத அன்பளிப்பாக எதனைக் கொடுத்தார்?

**பவித்ரா:**
தர்மத்தின் மறுசீரமைப்பு சமூகத்தின் முழுமையான மாற்றத்தை நோக்கமாக கொண்டு, தனிப்பட்ட அளவில் நடைபெற வேண்டும். இதனை நாம் எப்படி தனிநபர்களின் மனதில் பதியச் செய்வது? இங்கு பகவானது அன்பளிப்பு “ ஒன்பது ஒழுக்கக் கோவை” ஆகும்.

**நித்தி:**
1. தினசரி தியானமும் பிரார்த்தனையும்
2. குடும்ப அங்கத்தவர்களுடன் பஜன்
3. பாலவிகாஸ், கல்வி வட்டங்களில் பங்கு கொள்ளல்
4. சேவை நிகழ்வுகளில் பங்கு கொள்ளல்
5. குறைந்தது மாதமொருமுறையாவது பஜன்களில் பங்கு கொள்ளல்
6. சாயி இலக்கியங்களை படித்தல்
7. எல்லோருடனும் மென்மையாகவும் அன்பாகவும் கதைத்தல்
8. மற்றவர்கள் மனம் நோகும்படி கதையாமை, குறிப்பாக அவர்களின் இல்லாத போது.
9. மற்றவர்களுக்கு உதவும் நோக்கில் ஆசைக்கு வரம்பிடுதல்

**டிலானி:**
பகவான் தனது தெய்வீக காட்சி உருவில் உலகளாவிய ரீதியாக சாயி நிறுவனங்களில் மிகப் பெரிய பிளவுகளை எதிர்பார்த்தார். அதனை எவ்வாறு கட்டுப்படுத்தினார்?

**சாயி:**
சாயி சமித்திகளில் உள்ள பாரிய மனித வளங்களை கட்டுப்படுத்தி, நிர்வகித்து, வழிகாட்டி நடாத்துவதற்கு பகவான் உலக மன்றத்தை வடிவமைத்து, உருவாக்கி ஸ்தாபித்தார்.

**டிலானி:**
பகவானுக்கு தனது தெய்வீக உள்ளுணர்வின் மூலம் பக்தர்களிடமிருந்து வேலைத்திட்டங்களுக்காக பாரிய சொத்து பணமாகவும், அன்பளிப்பாகவும் குவியப் போவதாக தோன்றியது. இந்தச் சொத்துக்களை நிர்வகித்து பராமரிக்க மத்திய நம்பிக்கை நிதியம் என பெயரிடப்பட்ட ஓர் அங்கத்தை நிறுவினார்.

பகவானது தெய்வீக தூதுப் பணி, மனித இனத்தின் கீழ் (வறிய) நிலையிலுள்ள வர்களுக்கான தர்மநல சேவைகள் தொடர்பான பல அம்சங்களைக் கொண்டிருக்கின்றது. நாம் இதே திசையில் பிரயாணித்தால், நாம் பார்ப்பதற்கு, கற்பதற்கு, பின்பற்றுவதற்கு போதுமானவற்றைக் கொண்டிருக்கிறது.

**பிரவீனா:**
“மற்றவர்களில் அவரைப் பார்: அத்துடன் அவரில் மற்றவர்களைப் பார்” எனும் எண்ணத்திற்கமைய ஏழைகளுக்கு ஒழுங்காக உணவளித்தல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நாராயண சேவையென பெயரிடப்பட்டது.

**பவித்திரா:**
எல்லா சாயி சேவா நிலையங்களும் முன்னேற்றப்படாத இடங்களிலும், குறைந்தளவில் முன்னேறிய இடங்களிலும் உள்ள மக்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில்க் கொண்டு அங்கு இலவச நடமாடும் மருத்துவ முகாம்களை நடாத்த வேண்டுமென பகவான் பாபா வேண்டுகோள் விடுத்தார்.

**நித்தி:**
பகவான் பாபா புட்டபர்த்தியில் உள்ள கிராமங்களுக்கென 3300 ஆழமான கிணறுகளை வெட்டி, இலவச தண்ணீர் சேவையை வழங்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாயி:**
இந்தியாவில், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள, சென்னை நகர மக்கள் பல நூற்றாண்டுகளாக பாரிய குடிநீர் தட்டுப் பாட்டினால் அவதியுற்று வந்தனர். இந்திய மத்திய அரசாங்கத்தினாலோ அல்லது மாநில ஆட்சியினாலோ, தடை செய்யப் பட்ட செலவுகள் காரணமாகவும் மற்றும் சில காரணிகளினாலும் இந்தப் பிரச்சி னையைத் தீர்க்க முடியவில்லை. பகவான் பாபா தனது சிந்தனையால் கிருஸ்ணா நதியை ஆந்திர பிரதேசத்திலிருந்தும், கர்நாடக மாநிலத்திலிருந்தும் ஆறு மாதங்களுக்குள் சென்னைக்கு திருப்பி அவர்களுக்கு குடிநீர் வழங் கினார்.

**டிலானி:**
பகவான் தான் விடுதலையளிக்க வந்திருப்பதாக குறிப்பிட்டார் இது எதனைக் குறிக்கிறது?

**பிரவீனா:**
பகவான் பேரானந்தம் என்னும் பொக்கிஷத்தை எமக்குத் தரவும், நாம் பரமானந்தத்தை பெறும் வழியை மறந்து விட்டதனால் அதன் ஊற்றில் இருந்து அதனை பெறும் முறையை கற்றுத்தரவுமே அவதரித்தார். இத்தடவை நாம் எம்மை பாதுகாப்பதற்கான சந்தர்ப்பத்தை தவற விட்டு விட்டால் அது எமது விதியேயாகும். அவதாரம் எமக்கு பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியிலிருந்து மீழும் பாதைகளை எமக்கு காண்பிக் கலாம். வழிகாட்டலாம். அல்லது கற்பிக்கலாம். இது அவதாரத்தின் தெய்வீக தூதுப்பணிகளில் ஒன்றாகும்.

**டிலானி:**
விடுதலை என்பது நாம் சம்பாதிப்பதா? அன்றி இறைவனின் கருணையால் மாத்திரம் நடைபெறுவதா?

**பவித்திரா:**
ஒருவர் பகவான் காட்டிய பாதையைப் பின்பற்றி தனது முன்னய கா்ம வினைகளை போக்கி விட்டால் மறுபிறப்பிற்கான இனப் பெருக்க சக்தி எஞ்சியிருக்காது. நிச்சய மாக இதற்கு பகவானது கருணை அவசியம். பகவானது கருணையைப் பெறுவது எப்படி?

**பிரவீனா:**
உன்னிடம் புனிதமான இதயமும் புலன்களைக் கட்டுப்படுத்தும் சக்தியும் இருக்குமானால் கருணை உனது உரிமையாகும் என பகவான் கூறியுள்ளார்.

**டிலானி:**
நற்பண்புள்ளவர்களின் பாதுகாப்பிற்காகவும், தீயன செய்பவர் களின் அழிவிற்காகவும், சத்தியத்தை உறுதியான அத்திவார மிட்டு நிலைநாட்டுவதற்காகவும், காலத்திற்கு காலம் நான் அவதரிக்கிறேன் என பகவான் கூறியுள்ளார். எப்பொழுது விரோதம் உலகை வெற்றி கொள்கிறதோ அப்பொழுதே அமைதிக்கான மார்க்கங்களை நிலை நாட்டவும், மனித சமூகத்திற்கு, அமைதிக்கான மார்க்கங்களை மீண்டும் கற்றுத் தரவும், இறைவன் மனித உருவில் அவதரிக்கிறான். தற்காலத்தில் முரண்பாடு மற்றும் குழப்பம் முதலியன குடும்பம், பாடசாலை, சமூகம், சமயங்கள், நகரங்கள் மற்றும் மாநிலங் களின் அமைதியையும் ஒற்றுமையையும் சூறையாடுகின்றன.

பகவான் அதனைச் செய்தாரா? அவரது நோக்கம் நிறைவு பெற்றதா? அல்லது அவர் ஸ்தூல உடலை விட்டுச் சென்ற பின்பும் அவரது பணி தொடர்கிறதா?

**சாயி:**
பகவான் பாபா இந்த அவதாரத்தின் போது. சத்ய சாயி பாபாவாக தனது தெய்வீக தூதுப் பணியை பூர்த்தி செய்து விட்டார். உண்மை எதுவானால் உலகின் 241 நாடுகள் தாமாகவே முன்வந்து அவரது தெய்வீக கருவியான பகவான் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தை அதன் ஐந்து பிரிவுகளுடன் தமது நாடுகளில் ஸ்தாபித்தது, அவரது தெய்வீக தூதுப் பணி பூர்த்தியடைந்து விட்டதற்கான ஓர் போதிய ஆதாரம். இருப்பினும், அவர் வேறுபடுத்தப்படாத, "அவ்யக்த ரூபத்தின்" பிரபல்யமான உருவத்தில் நடப்பவைகளை அவதானித்துக் கொண்டும், கவனித்துக் கொண்டும், வழிகாட்டிக் கொண்டும், தேவையான இடங்களில் நெறிப்படுத்திக் கொண்டு மிருக்கிறார். சக்தி வாய்ந்த கருவியான சாயி நிறுவனத்தை திறம்படவும், சிறப்பாகவும் பாவித்து சனாதன தர்ம பயிற்சி முறையை மறுசீரமைத்து, அவரது தெய்வீக நோக்கை நிறைவு செய்தலே சாயி நிறுவனத்தின் தேர்ந்தெடுத்த தலைவர்களது தெய்வீகக் கடமையாகும்.

**டிலானி:**
இறுதியாக அவரது கடைசி தரிசனத்தின் போது பகவான் எமக்குத் தந்த செய்தி என்ன?

சுவாமி எமக்கு காண்பித்தார், ஆனால் நாம் அதனை கண்டு கொள்ளவில்லை. இது 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதியன்று மாலை நடைபெற்றது.

அன்றைய தினம் தர்சனுக்காக இருமுறை பக்தர்களிடையே சுற்றி வந்தார். ஆசி பெறுவதற்காக அங்கு அமர்ந்திருந்த அனைத்து மாணவர்களையும் அழைத்து அவர்களது சிரசில் அட்சதைகளை தூவினார். அவர் அங்கு குழுமியிருந்த அனைவரையும் பார்த்து சிரித்தபடி சில இனிப்பு வகைகளை வழங்கினார். அவர் பாலர் பாடசாலை சிறு குழந்தைகளைக்கூட கூப்பிட்டு, அவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிர்வதித்தார். அங்கு மகிழ்ச்சி நிலவியது. அத்துடன் ஆராத்தி காண்பிக்கப்பட்ட போது அவர் தாளலயத்திற்கேற்ப கைகளைத் தட்டியமை எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டியது.

அதைத் தொடர்ந்து இச்சம்பவம் நடைபெற்றது...
சமஸ்த லோகா உச்சாடனம் வளிமண்டலத்தை நிரப்பியதும், ஸ்வாமி தனது கைகளை உயரத் தூக்கினார். ஆனால் பரீட்சயமான அபயஹஸ்தமல்ல. அவர் கரங்களை ஒன்று குவித்து வணக்கம் செலுத்தினார். இதன் மூலம் ஓர் அழகான செய்தியை தெரிவித்திருந்தார். "எல்லோருக்கும் வணக்கம் செய்யுங்கள், இறைவன் எல்லோரினுள்ளும் வாசம் செய்கிறார்" இவ்வாறு இந்த முடிவை எமக்கு காட்டியதன் மூலம் தனது எதிர்பார்ப்புக்களை எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.



எமது வாழ்க்கை முறையே தனது செய்தியாக அமைய வேண்டுமென்பதையே சுவாமி விரும்பினார். அத்துடன் அவரது ஆசீர்வாதத்திற்கான இறுதிச் செயற்பாடுகளில் ஒன்று எமக்கு போதிப்பதென்ன என்றால், அவர் எவ்வாறு எல்லோரிலும் தம்மைக் கண்டாரோ அதே போன்று நாமும் எல்லோரிலும் அவரைக் காண வேண்டும் என்பதேயாகும். அவர் எவ்வாறு பார்த்த எல்லோர் மீதும் தனக்கு வணக்கத்தை தெரிவித்தாரோ அதே போன்று நாமும் பார்க்கும் எல்லோர் மீதும் அவருக்கான வணக்கத்தை தெரிவிக்க வேண்டும். அவர் செய்ததைப் போன்று நாமும் எல்லோரையும் நேசிப்பதுடன், சேவையும் செய்ய வேண்டும்.
பலவீனமானது எனக் கருதப்பட்ட ஸ்வாமியினுடைய இடது கை, இனி மேலும் பலவீனமானதல்ல!! அவர் இரு கரங்களையும்





மேலே உயர்த்தி, அவற்றை "நமஸ்தே" நிலையில் ஒருங்குவித்து நீயும் நானும் ஒன்று
எல்லோரிலும் என்னைக் காண் !



இந்த முழுப் பிரபஞ்சத்திற்காகவும் மேற்கொண்டு தனது கண் மட்டத்திற்கு மேல் கைகளை உயர்த்தி....

அத்துடன் இரு பக்கமும் திரும்பி எல்லோரையும் பார்த்தார்.!

அத்துடன் கமராவைப் பார்த்து... அவரது இந்தப் படத்தைப் பார்ப்பவர்கள் தமது கண் பார்வையின் தொடர்பையிட்டு ஆனந்திப்பார்களென தெரிந்து கொண்டு... அவ்வளவு தான் இதுவே கடைசிச் செய்தி... என குறிப்பிட்டார்.



உங்களது எல்லா விஷயத்திலும் இறைவனை நம்புங்கள்!

ஜெய் சாயிராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சத்திய சாயி கிராமிய நிகழ்ச்சித் திட்டம்

ஸ்ரீ சத்திய சாயி கிராமிய ஒன்றிணைக் கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் கிராமங்களில் சுவாமியின் தொண்ணூ றாவது அவதார தினத்தை முன்னிட்டு ஆகக் குறைந்தது தொண்ணூறு பேருக் காவது சாயி போதனைகளை உணர வைத்து அவர் களைச் சாயி இலட்சிய வாழ்க்கைக்குள் உள்ளீர்க்கும் ஆன்மீக சாதனா முயற்சி யும் அதன் விளைவுகளும்.

எங்கள் பேரன்புத் தெய்வம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தனது அறுபதாவது அவதாரதினத்தை விமரிசை யாகக் கொண்டாடத் திட்டமிட்டுக் கொண்டிருந்த சாயி பக்தர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். அதாவது எனக்கு நீங்கள் தரவேண்டிய பிறந்த நாள் பரிசு என்னவென்றால், மிகவும் தூரப் பிரதேசங்களில் அமைந் துள்ள, மிகவும் பின் தங்கிய, பாதிக்கப் பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற, பலராலும் புறக்கணிக்கப்பட்டிருக்கும் கிராமங்களுக்குச் சென்று, அங்கு நோயால் அவதியுறும் மக்களிடம் மருந்து வடிவத்திலும், பசியால் வாடும் மக்களிடம் உணவு வடிவத்திலும், பாதிக்கப்பட்ட மக்களிடம் நிவாரண வடிவத்திலும், உடுதுணிகள் இன்றி கஷ்டப்படும் மக்களிடம் உடுதுணிகள் வடிவத்திலும், வறுமையில் வாடும் மக்களிடம் வாழ் வாதார உதவிகள் வடிவத்திலும், நீரின்றி வேதனையுறும் மக்களிடம் நீர் வடிவத்திலும் கடவுளைக் கொண்டு செல்வதுடன், மனக் கவலையாலும், வலியி னாலும் அல்லலல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களிடம் சாந்தி, சமாதானம், ஒற்றுமை, நிம்மதி வடிவத்திலும் கடவுளைக் கொண்டு சென்று கிராம சேவை ஆற்றுங்கள் என அன்புக் கட்டளையிட்டார்.

மேற்படி சுவாமியின் இந்த அன்புக் கட்டளைக்கிணங்க "சாயிகமலம்" பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் தாமரைக்



கேணித் தொண்டர்களால் மட்டக்களப்பு நகரத்திலிருந்து 70 கிலோ மீற்றர் தூரப் பிரதேசத்தில் மிகவும் பின் தங்கிய அடர்ந்த காட்டுப் பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலையோ, வீதிகளோ, மின்சார வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ அற்ற, கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற, பலராலும் புறக்கணிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டங் களின் எல்லையில் அமைந்துள்ள வடமுனை மற்றும் ஊத்துச் சேனைக் கிராமங்களை ஸ்ரீ சத்திய சாயி கிராமிய ஒன்றிணைக்கப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்வாங்க சுவாமி அருள் பாலித்தருளினார். அதன்பின் அக் கிராம மக்களுக்கு பேரன்புத் தெய்வம் சுவாமியின் பெருங்கருணையினால் மருந்து வடிவத் திலும், உணவு வடிவத்திலும், நிவாரண வடிவத்திலும், உடுதுணிகள் வடிவத்திலும், வாழ்வாதார உதவிகள் வடிவத் திலும், குடிநீர்க்கிணறுகள் வடிவத்திலும் சாயி கமலத் தொண்டர் கள் அக்கிராம மக்களிடம் கடந்த மூன்று வருடங்களாகச் சுவாமியைக் கொண்டு சென்று கொண்டு வருகின்றனர்.

இப்படியான தன்னலம் கருதாது, நிஷ்காமிக கர்மாவாக நிகழ்த்தப்பட்ட இந்தச் சாயி சேவையின் தாக்கம் இதனால் பயனடைந்த மக்கள் மத்தியில் மட்டுமின்றி இதை ஆற்றிய தாமரைக்கேணி சாயி கமலத்தின் தொண்டர்கள் மத்தியிலும் காத்திரமான ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. இது சாயியின் அருளன்றி வேறெதுவுமில்லை. அதாவது அச் சாயி சேவைகளால் ஈர்க்கப்பட்ட அக்கிராம மக்கள் அங்கு நடை பெற்ற காரியங்களுக்கெல்லாம் மூல காரணமாக இருந்து செயற்படும் அந்த தெய்வத்தை வணங்கத்தாங்களாகவே விரும்பி சுவாமியினுடைய திருவுருவப் படங்களைத் தங்கள் வீடுகளில் வைத்து வணங்குவதற்காகத் தந்துதவுமாறு வேண்டு கோள் விடுத்தனர். அவர்களது அந்த இதய பூர்வமான அன்பு வேண்டு கோளை ஏற்று பேரன்புத் தெய்வம் சுவாமி, சாயி பக்தர் ஒருவர் மூலம் புட்டபர்த்தியிலிருந்து சுவாமியின் 300 திருவுருவப் படங்களை தருவித்து அவற்றை அவர் மூலமே பிறேம்இட்டு அவர்களுக்கு வழங்கி வைத்தார். தற்போது வடமுனை, ஊத்துச்சேனை கிராமங்களிலுள்ள சகல வீடுகளிலும், வணக்கத் தலங்களிலும், பாடசாலை மற்றும் பொதுக் கட்டிடங்களிலும் சுவாமியின் திருவுருவப்படம் முறைப்படி வைக்கப்பட்டு பயபக்தி யுடன் வழிபடப்பட்டு வருவதைப் பார்க்கும் போது சுவாமியின்

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்புப் பெருங்கருணையை எண்ணி வியக்காமலிருக்க முடியவில்லை. இதையும் சுவாமியின் அற்புதங்களில் ஒன்றாகச் சாயி பக்தர்களால் பார்க்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து பல தரப்பட்ட இன்னல்களுக்கும், துயரங்களுக்கும், மன வேதனைகளுக்கும் மத்தியில் அமைதியிழந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மக்கள் மேல் கருணை கொண்ட பெருங் கருணைக்கடலான பேரன்புத் தெய்வம் சுவாமி அம்மக்களுக்கு அமைதியையும், நிம்மதியையும். சாந்தியையும், சமாதனத்தையும் வழங்கச் சித்தங் கொண்டு, ஒரு சாயி பக்தையின் உள்ளுணர்வு மூலமாக அதை வெளிப்படுத்தி அவரின் அனுசரணையுடனேயே அத்திட்டத்தை தாமரைக்கேணி சாயிகமலத் தொண்டர்கள் மூலம் அமுல் நடத்த அருள்பாலித்துள்ளார்.

அந்த வகையில் சுவாமியின் தொண்ணூறாவது அவதார தினத்தை முன்னிட்டு இவ் வருடத்திலிருந்து தாமரைக்கேணி சாயிகமலத் தொண்டர்கள் தாங்கள் மேற் கொண்டுள்ள சாதனைகளில் ஒன்றாக இக்கிராம மக்களுக்கு சாயி போதனைகளை தொடர்ச்சியாக இலகு முறையில் புகட்டி அவர்களுக்கு அதை உணர வைப்பதன் மூலம், அவர்களில் ஆகக் குறைந்தது தொண்ணூறு பேரையாவது சாயி போதனைகளின்படி தங்கள் வாழ்க்கையை கொண்டு நடத்தத் தூண்டி சுவாமி காட்டிய ராஜ பாட்டையில் அவர்களை இட்டுச் செல்லும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை சுவாமியின் பேரருள் கருணையினால் அமுல்ப்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் சுவாமி காட்டிய வழியில் அம்மக்களுக்கு சாந்தி, சமாதானம், ஒற்றுமை, நிம்மதி என்ற வடிவத்திலும் சுவாமியைக் கொண்டு செல்ல சாயி கமலத் தொண்டர்கள் சுவாமியின் அருளால் முயன்று வருகின்றனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் வடமுனை, மற்றும் ஊத்துச்சேனை கிராம மக்களை இணைத்து ஊத்துச்சேனைப் பாடசாலைக் கட்டிடத்தில் இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டு நடத்தப்படுகிறது. சாயி போதனைகளை நன்கறிந்த சாயி பக்தர்களையும், மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர்களையும், பாலவிகாஷ் குருமார்களையும், விஷேட விடயங்களில் திறன் தொழில் தேர்ச்சியும் அனுபவமும் கொண்டவர்களையும் வளவாளர்களாகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது, விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கதைகள் கூறல், அனுபவப் பகிர்வுகள், உதாரணங்கள், சுவாமி கூறிய விளக்கங்கள், கேள்வி பதில்கள், துண்டுப் பிரசுரங்கள், காட்சிப் படங்கள், செயல் முறைகள், குழுச்செயற்பாடுகள் மூலம் சாயி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் அமைவாக சுவாமியின் வழிகாட்டல்களைப் பின்பற்றி இந்நிகழ்ச்சி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**பிரிவு 01**

**வளர்தோருக்கான மனிதவிழுமியங்கள் பற்றிய அறிவூட்டல்**

அன்பு, நேர்மை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், பரஸ்பர நல்லிணக்கம், கண்ணியம், கட்டுப்பாடு என்பன தனி மனிதனிலிருந்து ஆரம்பமாகி, குடும்பம், கிராமம், சமூகம், நாடு, பின் உலகம் என விரிவடைந்து செல்கிறது. எனவே ஒரு நீதியும், நியாமும் கொண்ட கட்டமைப் புடன் கூடிய ஒரு உலகத்தை தனிமனித உயர் நடத்தை மூலமே எட்ட முடியும். இதை அறிவூட்டல் மூலம் நேர்மையாகச் சிந்தித்து நடக்கக்கூடிய ஒரு விழிப்புணர்வு மிக்க சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் எட்டலாம் என்பதே சுவாமியின் போதனையாகும். இந்த முயற்சியே இந்த வளர்ந்தோருக்கான மனித விழுமியங்கள் பற்றிய அறிவுட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இதில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களுமாக தொண்ணூறு பேருக்கு மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர். இதில் பின்வரும் விடயங்கள் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டு வருகின்றன



1. சுவாமியின் அவதார மகிமையும், அற்புதங்களும்.
2. ஸ்ரீ சத்தியசாயி நிறுவனமும், அதன் நோக்கங்களும், சேவைச் செயற்பாடுகளும்.
3. மனித விழுமியங்களான சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சைக் கோட்பாடுகளும் விளக்கங்களும்.
4. ஒன்பது ஒழுக்கக் கோட்பாடுகள், பத்து அன்புக்கட்டளைகள்.
5. உள்ளூர் கலாச்சாரம், வழக்காறுகள், சமயநம்பிக்கை, பிறசமயங்களை மதித்தல், சட்டங்களை மதித்துச் நடத்தல்.
6. எல்லோருக்கும் அன்பு செலுத்துதல், எல்லோருக்கும் சேவை செய்தல்
7. எல்லோருக்கும் உதவி செய்வதும், எவருக்கும் தீங்கு செய்யாதிருத்தலும்
8 பொதுச் சுகாதாரப் பழக்க வழக்கங்களும், ஆரோக்கியம் மிக்க சமுதாயத்தின்அவசியமும்
9. மதுபானம் பாவித்தல், புகைத்தல், வெற்றிலை சாப்பிடுதல், மாமிசம் உண்ணல் என்பவைற்றால் ஏற்படும் பாதிப்புகள்
10.வேற்றுமையில் ஒற்றுமை காணல்

**பிரிவு 02**

**சிறுவர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்வி வகுப்புகள்**

வடமுனை , ஊத்துசேனை கிராமங்களில் வருங்காலத்தில் ஒரு நீதியும். நேர்மையும், நியாமும், ஒற்றுமையும், சமாதானமும் கொண்ட ஒரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில், வருங்காலச் சந்ததிகளான அக் கிராமங் களில் வாழும் சிறுவர்களை அறிவூட்டித் தயாரப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இந் நிகழ்ச்சி திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இவ் வகுப்புக்கள் ஸ்ரீ சத்திய சாயி பாலவிகாஷ் மற்றும் மனித மேம்பாட்டுக் கல்வி பாடத் திட்டங்களை ஒருங்கிணை த்து ஒன்றிணைக்கப்பட்ட ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டமாக தொடராக நடத்தப் பட்டு வருகிறது.



இந்த வகுப்புக்களில் 06 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்ட ஆண், பெண் இரு பாலாருமாக 95 சிறுவர்கள் கலந்து கொள்கின்றனர். இதில் வளவாளர்களாக பாலவிகாஷ் குருமாரும், மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர்களும், சுகாதார உத்தியோகத்தர்களும் பங்கேற்கின்றனர். இவ் வகுப்புக் களில் பின்வரும் விடயங்கள் புகட்டப்படுகின்றன.

1. சுலோகங்கள், மந்திரங்கள், பஞ்ச புராணம் ஓதுதல்
2. கதை கூறல், அமைதி இருக்கை, விளையாட்டுக்கள், புதிர்கள் மூலம் மனித விழுமியங்களை உணர்த்துதல்.
3. கீழ்ப்படிவு, ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுதல், பெரியோரை மதித்தல், பாடசாலைப் பாடங்களைப் படித்தலின் முக்கியத்துவம்.
4. பொய். களவு. புறங்கூறல் தவிர்தல்
5. சகல உயிரினங்களிலும் அன்பு செலுத் துதல், இயற்கையைப் பேணல்
6. அன்றாட சுகாதாரப் பழக்கவழக்கங்கள்
7. பஜனை செய்தல்

அத்துடன் இவ்வகுப்புக்களில் பங்குபற்றும் சகல பிள்ளைகளுக்கும் பல்பசை, பல்விளக்கும் தூரிகை, சவர்க்காரம், சவக்காரகேஸ், நகம் வெட்டும் கருவி, காலணிகள், அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் மற்றும் விளக்கப் படங்களுடன் கூடிய துண்டுப் பிரசுரங்கள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அப்பிள்ளைகள் அனைவருக்கும் காலைச் சத்துணவும், பாலும், வழங்கப்படுகின்றன. வீட்டில் அப்பிள்ளை களின் இந்த நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொறுப்பு அப்பிள்ளைகளின் தாய்மார்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், பொதுவாகக் கிராமத்தில் இந் நடவடிக்கைகளைக் கண் காணிக்கும் பொறுப்பு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந் நடவடிக்கைகளின் முன்னேற்றம் ஒவ்வொரு வகுப்பு ஆரம்பத்திலும் மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளால் பெரிதும் ஈர்க்கப்பட்ட இக்கிராம மக்கள், தங்கள் கிராமங்களுக்கு வந்து குறைந்தது மாதத்துக்கு ஒரு முறையாகுதல் சாயி பஜனையைச் செய்யும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் சுவாமியினுடைய அற்புதங்கள், போதனைகளை படித்து அறிய விரும்புவதாகவும் அதற்காக அவைகள் அடங்கிய புத்தகங்களைக் கொண்ட ஒரு ஸ்ரீ சத்திய சாயி நூலகம் ஒன்றை தங்கள் கிராமங்களில் ஏற்படுத்தித் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கமைய வடமுனை, ஊத்துச் சேனைக் கிராமங்களில் தற்போது தற்காலிகக் கட்டிடங்களில் ஸ்ரீ சத்தியசாயி நூலகங்கள் திறக்கப்பட்டு, அதற்குப் பொறுப்பாக இருவர் நியமிக்கப்பட்டு, சாயி மார்க்கம், சனாதனசாரதி மற்றும் சிறுவர்களுக்கும், பெரியவர்களும் வாசித்து விளங்கக் கூடியதான சாயி இலக்கியங்களும் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியின் மூலம் சுவாமி ஏன் கிராம சேவையின் போது ஆரம்பத்தில் தன்னை என்னென்ன வகையானவர்களிடம், என்னென்ன வடிவத்தில் கொண்டு செல்ல வேண்டும் எனக் கூறிய வார்த்தைகளில் பொதிந்து கிடந்த உள்ளார்ந்த அர்த்தத்தை புரிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது. அதாவது கடவுளைக் காரியங்கள் வடிவில் கொண்டு செல்லும் போது தான், அக்காரியங்களுக்கு மூலகாரணமாக இருந்து சூட்சுமமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் கடவுளைப் பற்றி அறிய, பார்க்க, அவரது போதனைகளைக் கேட்டறிய, அவரை வணங்க மக்கள் தூண்டப்படுவார்கள் என்பது விளங்குகிறது. அந்த வகையில் தாமரைக்கேணி சாயி கமலம், பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத் தொண்டர்களால் அக்கிராமங்களில் மேற் கொள்ளப்பட்ட தன்னலம் கருதாத மனிதாபிமான சாயி கிராம சேவைகள் அக்கிராம மக்களின் உள்ளுணர்வுகளில் ஊடுருவி அவர்களிடையே ஒரு ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்ளை சுவாமியின் பால் காந்தம் இரும்பை இழுப்பது போல் எப்படி இழுத்தது என்பதை அவர்களது உள்ளுணர்வலைகளின் வெளிப்பாடாக அவர்களிடமிருந்து வெளிப்பட்ட அவர்களது காத்திரமான வார்த்தைகள் வெளிப்படுத்தின. இது சாயி கிராம சேவை மூலம் கிராமங்களில் ஏற்பட்ட ஆன்மீக மறுமலர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

ஜெய்சாயிராம்
சாயி வாக்கு சத்திய வாக்கு.


எஸ். சாமித்தம்பி
தாமரைக்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# திருவருள் புரிக சாயி அன்னை



அன்னையே சாயி அமுதமே தாயே
அளவற அகன்றதோர் அன்பே
தன்னையே உதைக்கும் தன் கருமகவைத்
தாங்கிடும் தாயினும் தரித்துப்
புன்மையே புரியும் புலையனாமென்னைப்
பொறுத்தருள் புரியுமீஸ்வரியே
உன்னையே உணரும் உயர் பக்தி உணவை,
ஊட்டிட உவந்தருள் தாயே

பிள்ளையென் நலத்தைப் பேணிடும் முறைமை
பிழையற இயற்றும் நற்பேறே
அள்ளியே கல்வி அருளிடும் தாயே
அளவுடன் பொருள் தரும் அருளே
துள்ளி வந்திடர் களையும் துர்க்கையே அம்மா
தூய நல்லுணர்வுறை சுடரே
வெள்ளமாய் ஞானம் விரைந்தெனை அடைய
வேண்டினேன் விதத்தருள் தாயே.

அன்னமே அளிக்கும் அன்னபூரணியே
அனைத்துமாய் நிறைந்ததோர் அருளே
கன்னலாய் மொழியும் கற்பக தருவே
களிப்பெனும் ஒரு பெருங்கடலே
உன்னையே எங்கும் உயர்நிறை சக்தி
ஒளியென உணருமோர் உயர்ந்த
திண்மையேயான திருஷ்டியை எனக்குத்
திருவருள் புரிக சாய் தேவி.

தொகுப்பு:
ஜே.நேசராஜா
தாமரைக்கேணி

ரா. கணபதி எழுதிய "சுவாமி" புத்தகத்தில் காணப்படும் ஒரு பகுதி

**ஒரு சமயம் சித்திராவதி தீர்த்தத்தில் ஓர் அடியார் "ஸ்வாமி உங்களை எப்படி மனமுருகிப் பிரார்த்திப்பது என்பதற்கும் நீங்களே வாசகம் கொடுக்க வேண்டும்" என்று வேண்ட...**

இப்படிப் பிரார்த்தியுங்கள்

" ஸாயி அம்மா, நாங்கள் யாவரும் உன் கர்ப்பத்தில்தான் இருக்கிறோம். கருப்பைக் குழந்தை உதைப்பதையும் அன்னை அன்புடன் பொறுப்பதை போல், நாங்கள் பாபம் புரிந்து உன்னை உதைப்பதையும் நீ கருணையோடு பொறுத்துத் தாங்கிக் கொள்கிறாய். குழந்தை நலனுக்காகவே தாய் சகலதும் செய்வது போல், எம்பொருட்டே எல்லாக் காரியங்களும் செய்யும் எம்பிராட்டி நீ, துர்க்கையாக வந்து எம் இடர் கடிந்து காக்கிறாய், லஷ்மியாக தேவைக்குரிய அளவான செல்வத்தை நல்குறாய், சரஸ்வதியாக ஞானம் போதிக்கிறாய், அன்ன பூரணியாக உணவு ஊட்டுகிறாய், குழந்தை கேளாமலே தாய் ரட்சிப்பது போல, நீயே எங்களுக்கு உரியதை உரிய போது உவந்தளிப்பாய். எனினும் எங்கள் திருப்திக்காக வேண்டுகிறோம். எங்களது மனத்துக்குப் பக்தி உணவும், அறிவுக்கு ஞான உணவும் ஊட்டுவாய். எங்குமாய் யாவுமாய் உள்ள சக்தி நீயே எனக் காணும் திருஷ்டியை அருள்வாய்" என்றார்.

(இங்கு காணப்படும் சுவாமியின் தெய்வீகத் திருவாக்கின் படியே அருகே உள்ள பிரார்த்தனை அமைந்துள்ளது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

## *கிழக்குப் பிராந்தியம்*

### பாலவிகாஸ் சிறுவர் நிகழ்ச்சித்திட்டம்

கிழக்குப்பிராந்திய இணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் கடந்த 11.10.2015 அன்று பாலவிகாஸ் சிறுவர் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்கு பிரதேச கல்வி அலுவலர் திரு.ஏ.சுகுமாரன் பிரதம அதிதியாகவும் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனங்களின் தேசிய கல்விஇணைப்பாளர் திரு.என்.புகேந்திரன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மட்டக்களப்பு பிராந்திய சாயி நிலையங்களைச் சேர்ந்த பாலவிகாஸ் மாணவர்கள், குருமார்கள், பெற்றோர் மற்றும் பக்தர்கள் உள்ளடங்க லாக 430 பேர் பங்கு பற்றினர். இந்நிகழ்வு 7 மணித்தியாலங்கள் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விழுமியக்கல்வியை அடிப்படையாகக் கொண்ட பேச்சுக்கள், நாடகங்கள், பாடல்கள் இடம் பெற்றன.

### பெற்றோரியல் நிகழ்ச்சித்திட்டம்

கிழக்குப்பிராந்திய சாயி நிறுவனங்களின் ஏற்பாட்டில் வந்தாறு மூலை சாயி நிலையத்தில் 23.8.2015இல் பெற்றோர் களுக்கான பெற்றோரியல் நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. இரண்டு மணி நேரமாக இடம்பெற்ற இந் நிகழ்வில் 50 பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட பெற்றோரியல் தொடர்பாக இவ் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

### தாமரைக் கேணி சாயி நிலையம்

1) 12.07.2015 அன்று தாமரைகேணி சாயி கமலத்தினால் அமுல்நடத்தப்படும் ஸ்ரீ சத்திய சாயி கிராமிய ஒன்றிணைக்கப்பட்ட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ்வரும் களிமடு கிராமத்திலுள்ள சிறார்களுக்கு ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக்கல்வியை புகட்டும் வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில் இக்கிராமத்திலுள்ள 30 ஆண், பெண் சிறார்கள் கலந்து கொண்டனர். ஆரம்ப வைபவத்தில் கிராமத்திலுள்ள பல பெற்றோர்களும், பெரியவர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் சாயி கமல பாலவிகாஸ் குருமார்களும் கலந்து கொண்டு ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியைச் சிறுவர்களுக்குப் புகட்ட வேண்டியதன் அவசியத்தை பெற்றோருக்கு விளக்கமளித்ததுடன், இது சம்பந்தமாகப் பெற்றோர்களின் கடமைகளையும், பொறுப்புக் களையும் இட்டுத் தெளிவுபடுத்தினர். இவ்வகுப்புக்கள் பிரதி சனிக்கிழமை தோறும் சாயிகமல பாலவிகாஷ் குருமார்களாலும், மற்றும் மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர்களாலும் நடத்தப்பட்டு வருகிறது.



2) 23.08.2015 அன்று சாயி கமலத்தால் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அன்று காலை ஸ்ரீ சத்திய சாயி ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் களி மடு கிராம மக்களின் வேண்டு கோளுக்கிணங்க அங்குள்ள 50 குடும்பங் களுக்கும் வீட்டில் வைத்து வணங்கு வதற்காக சுவாமியின் பிறேம் பண்ணிய 50 திருவுருவப் படங்கள் வழங்கப்பட்டன.



அத்துடன் அங்குள்ள நான்கு கர்ப்பிணித் தாய்மாருக்கு சாயி கமல மகளிர் அணி யினால் அவர்களுக்குத் தேவையான பொருட்கள் அடங்கிய நான்கு பொதி களும் வழங்கப்பட்டன.

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3) ஊத்துச்சேனைக் கிராமத்தில் 12.09.2015 அன்று ஆன்மீக சாதனை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் 90க்கு மேற்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் சாயி கமல நிர்வாகிகளும், வளவாளர்களும் கிராமப் பிரமுகர்களும், கிராமசேவையாளரும் கலந்து கொண்டனர். இதற்கு மேலதிக மாக இங்குள்ள சிறார்களுக்கு ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியைப் போதிக்கும் வகுப்புக்களும் வேறாகத் தொடங்கி வைக்கப்பட்டன.சிறுவர்களுக்கு சத்துணவு, பால் என்பன வழங்கப் படுவதுடன், அவர்களுக்கு பற்பசை, பல் துலக்கும் தூரிகை, சவர்க்காரம், நகம் வெட்டும் கருவி, காலணிகள், அப்பியாசப் புத்தகங்கள் என்பனவும் வழங்கப் படுகின்றன.

4) 22.09.2015 அன்று சாயி கமலத்தில் பாலவிகாஷ் சிறுவர் தின விழா மிகவும் சிறப்பாக நடந்தது. இதில் பாலவிகாஷ் சிறுவர்களின் சாயி மனித விழுமியங்கள் தழுவிய பல விதமான கலாச்சார நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் அதிகமான பெற்றோர்களும், சாயி பக்தர்களும் கலந்து கொண்டனர். இதற்கு மேலதிகமாக ஸ்ரீ சத்திய சாயி கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் கரடியன்குளக் கிராமத்தில் நடைபெறும் ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி வகுப்புக்களில் பங்கு பற்றும் சிறுவர்களி னதும், அக்கிராம மக்களினதும் நீண்ட கால விருப்பத்துக்கமைய கரடியன்குளக் கிராமத்தில் ஒரு வழிபாட்டுத்தலம் அமைக்கப்பட்டு திறப்பு விழா செய்யப் பட்டு அக் கிராம மக்களிடம் ஆன்மீக நிகழ்வுகளுடன் கையளிக்கப்பட்டது.

5) 20.10.2015 அன்று சுவாமியின் அவதார பிரகடனதினத்தை முன்னிட்டு ஸ்ரீ சத்திய சாயி ஒன்றிணைக்கப் பட்ட கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் கரடியன் குளக் கிராமத்திலுள்ள 135 கிராமக் மக்களுக்கும் அன்று மதிய உணவு நாராயண சேவை நடத்தப்பட்டது. சாயி கமலத்தில் உணவு சமைக்கப்பட்டு கரடியன் குளக் கிராமத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மக்களுக்கு நாராயண சேவையாக இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

6) 27.10.2015 பூரணைதினத்தன்றுசுவாமியின் 90வது அவதார தினத்தை முன்னிட்டு சாயி கமலத்தில் 90 பஜனைப் பாடல்கள் கொண்ட அகண்ட பஜன் மு.ப.10.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை ஆன்மீக சாதனையாக நடத்தப்பட்டது. வேதம் ஓதுதல், சாயி அஷ்டோத்திரத்துடன் ஆரம்பமான பஜனை மகா மங்கள ஆரத்தியுடன் நிறைவடைந்தது. அதிகளவான சாயி பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

7) 01.11.2015 அன்று களிமடுக் கிராமத்திலுள்ள 52 குடும்பங் களுக்கும் ரூபா 1000 பெறுமதியான உலர் உணவுப் பொருட் களைக் கொண்ட 52 உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. அவ்வூர்மக்கள் மத்தியில் இடம் பெற்ற இந்த சாதனா நிகழ்வில் அதிகளவான பொதுமக்களும் ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி வகுப்புக்களில் பங்கு பற்றும் சிறார்களும் கலந்து கொண்டனர். ஆன்மீக நிகழ்வுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் ஆன்மீக உரைகளைத் தொடர்ந்து உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் சாயி கமல நிர்வாகிகளும், ஊர் பெரியவர்களும் கலந்து கொண்டனர்.



## வட பிராந்தியம்

1) 24.10.2015 திகதி இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் 35 பேர் இரத்தம் வழங்கினார்கள்.



## யாழ்ப்பாண நிலையம்

1) 27.7.2015, 28.7.2015, 29.7.2015 ஆகிய 3 நாட்களும் 1008 காயத்ரீ மந்திர சாதனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை 4.00  7.30 வரை நிலையத்தில் நடை பெற்றது.

2)பகவானின் 90 ஆவது அவதார தினத்தையொட்டி அகண்ட ருத்ர ஏகாதசினி அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி காலை 6.00 மணி முதல் நவம்பர் 1 ஆம் திகதி காலை 6.00 மணி வரை நிலையத்தில் இடம் பெற்றது.

3) 29.9.2015 அன்று வாழ்வாதார திட்டத்தை நோக்கமாகக் கொண்டு வசாவிளானைச் சேர்ந்த கணவனால் கைவிடப்பட்ட 2 பிள்ளைகளைக் கொண்ட பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு 25000.00 பெறுமதியான தையல் மெசின் வழங்கப்பட்டது.



4) பகவான் பாபாவின் அவதாரப்பிரகடன தினத்தையொட்டி 11.10.2015 ஞாயிற்றுக் கிழமை நிலைய இளைஞர்களால் ஆவரங்கால் கிராமத்திலுள்ள 32 குடும்பங்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும், வழங்கப்பட்டது. அனைவரையும் பொது இடத்திற்கு அழைத்து பிரார்த்தனையின் மகிமையை கூறி 30 நிமிட பிரார்த்தனை மேற்கொள்ளப் பட்டது. சாயி செய்தி பிரசுரங்களும் வழங்கப்பட்டது.



5)இளைஞர் பிரிவின் தேசிய சேவைத்திட்டங்களில் ஒன்றான மரநடுகைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கில் அவதார பிரகடன தினத்தையொட்டி 110 பயன்தரு மரங்கள் இளைஞர்களால் கிராம மக்களுக்கும், பாலவிகாஸ் மாணவர் களுக்கும் வழங்கப்பட்டது.



### *வட மத்திய பிராந்தியம்*

1) பகவானின் 90 ஆவது அவதார தினத்தை யொட்டி குறைந்தது 90 பேருக்காவது கண் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சேவையின் மூலம் இவ்வாண்டு ஜுலை முதல் அக்டோபர் வரை 107 பேருக்கு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.



**பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 90 ஆவது அவதார தினம்**

**2015 நவம்பர் 23**

90 Years of Sathya Sai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவானின் 90 ஆவது அவதார தினத்தையொட்டி காட்டுப்புலம் கிராமத்தில் கிராம சேவையும், அன்புப் பொதி வழங்கலும், மதிய உணவு பார்சல் வழங்கலும் - வடபிராந்தியம்



திரு.ரி.ஜி.கிருஸ்ணமூர்த்தி அவர்கள் இலங்கையின் பல இடங்களுக்கு விஜயம் - வடபிராந்தியம்



வலயம் - 03, ஸ்ரீ சத்திய சாயி நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர் திரு.அமர்காகி நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது



ஆன்மீக சாதனை முகாம் - கிழக்குப் பிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பிலுவில் சாயி நிலையம் - கிழக்குப் பிராந்தியம்




முகப்புப் பகுதி



பிரார்த்தனை மண்டபம்





பிரசாந்தி நிலைய அலுவலக விடுதியின் மேற்பகுதியில் கம்பியினால் அமைக்கப்பட்டிருக்கும் சிவன் மற்றும் கங்கா மாதாவின் வடிவமும். அதனருகில் தெலுங்கில் உள்ள கவிதை அதன் ஆங்கில மற்றும் தமிழ் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.

**மிகவும் சக்தி வாய்ந்த கங்கை ஆகாயத்தில் அலைந்து திரிந்தது**
**சிவனின் கட்டளையை ஏற்று பூமிக்கு வந்தது**
**பர்த்திவாசனுடைய வார்த்தையின்படி கிராமங்களுக்கு**
**குழாய்களுடாக சென்றடைந்தது.**

GAGANAVEEDULA VIHARINCHU GADUSUGANGA
HARUNI AAJNANU TALADAALCHI AVANIJERA
PARTHIVAASUDUCHESINA PRATINAJOOSI
PAYANAMAYYENU PIPULO PALLELAKUNU.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org